Volume : 5 Issue - 4 & 5

ஏப்ரல் - மே 2012

# வைகறை
## வெளிச்சம்

₹15

ஆசிரியர் : மு.குலாம் முஹம்மது

ஜமாஅத்துல் ஆகிர் 1433






# வைகறை வெளிச்சம்

**ஏப்ரல் - மே 2012 - ஹிஜ்ரி 1433 ஜமாஅத்துல் ஆகிர்**

*ஆசிரியர்:*
**மு.குலாம் முஹம்மது.** M.A
(Journalism & Mass Communication)

*துணை ஆசிரியர்:*
**கே.எம். இல்யாஸ் ரியாஜி**

**தனி இதழ் ரூ.15/-, ஆண்டு சந்தா உள்நாடு ரூ.180/-, வெளிநாடு ரூ.1500/-**

*பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்* **வைகறை வெளிச்சம்** *என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.*

*எண்.52/1 மண்ணடி தெரு, 4வது மாடி, அறை எண்.7, மண்ணடி, சென்னை-1.*
*தொலைபேசி: 044-45566909, கைபேசி : 9444239594*

(எதிரிகளை) வெட்டுவதற்காகவோ அல்லது (தம்) கூட்டத்தாருடன் சேர்ந்து கொள்வதற்காகவோயன்றி, அந்நாளில் எவரேனும் தம் புறமுதுகைக் காட்டித் திரும்புவாரானால், நிச்சயமாக அவர் அல்லாஹ்வின் கோபத்திற்கு உள்ளாகி விடுவார் - அவர் தங்குமிடம் நரகமே இன்னும் அது மிகவும் கெட்ட தங்குமிடம். (அல்குர்ஆன் 8:16)



தரீக்குல் குர்ஆன் - பக்கம் 4


எது முதலில்? - 8



முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன? - 15


தலைநகர் டெல்லியை இராணுவம் முற்றுகையிட்டதா? -21



மருத்துவம் - 29


கஷ்மீரின் பாதி விதவைகள் - 37



குஜராத் பத்தாண்டு அவமானம் - 43



கர்கரேயை கொலை செய்தது யார்? - 61



பெய்ரூத்திலிருந்து ஜெருசலேம் வரை - 66


அப்சல் குரு தூக்கிலடப்படத்தான் வேண்டுமா?

*ஆபாசம் பாரதீய ஜனதா கட்சியின் மறுபெயர்* -32

*திருப்பூரில் ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம் நூல் அறிமுக விழா* -34

*கஷ்மீரின் இராணுவ ஆட்சியை அகற்றுங்கள்* -41

*டாக்டர் அப்பேத்கரை ஏளனம் செய்த கார்ட்டூன் : பொங்கி எழுந்த தலீத்கள்* - 42

*மீண்டும் மீண்டும்மோடியை காப்பாற்றும் உச்சநீதிமன்றம்* - 54

*வல்லவர் மோடி?* - 56

*டெல்லியில் இந்திய தூதரகத்தின் முன் குண்டு வைத்தது ஈரான் அல்ல, "ரா" அறிவிப்பு* - 57

*வைகறை நூல் அரங்கம்* - 75

*அல்குர்ஆன் அறிவியல் அத்தாட்சிகள்* - 77


All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai Courts. Private Circulation to promote Original Issue.

# தலையங்கம்

"அந்தரங்கமான இடத்தில் ஒரே பாலினர் இருவர் மனமொப்பி ஒன்று சேர்ந்து பாலியர் சார்ந்த செயல்களில் ஈடுபடுவது குற்றமாகாது. ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவோருக்கு ஆயுள் தண்டனைவரை தந்திட வழிவகை செய்திடும் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 377-ஐ திருத்த வேண்டும்" என்றொரு அசிங்கமான தீர்ப்பை அதிராடியாக வழங்கியது டில்லி உயர் நீதிமன்றம் 2009-ம் ஆண்டில் ஜூலை 2-ம் தேதி.

நாடு முழுவதும் இது பெரிய அதிர்வு அலைகளை ஏற்படுத்தியது. நல்லோர்கள், ஒழுக்க சீலர்கள், பண்பாளர்கள் இத்த் தீர்ப்பை எதிர்த்தார்கள். ஒழுங்கீனர்கள் இந்தத் தீர்ப்பை ஆதரித்து பேரணிகளை நடத்தினார்கள். ஓரினச் சேர்க்கைக்கு அனுமதி வேண்டும் என்று பகிரங்கமாகக் கோரினார்கள்.

டில்லி உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து ஓரினச் சேர்க்கை எதிர்ப்பாளர்கள் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார்கள் மனுவை ஏற்றக் கொண்ட உந்ந நிதிமன்றம் "ஓரினச் சேர்க்கை இயற்கைக்கு முரணானதா?" என்று நடுவண் அரசிடம் விளக்கம் கேட்டது. மாறிவரும் சூழலில் ஓரினச் சேர்க்கைக்கு எதிரான இந்திய தண்டனைச் சட்டத்தின் 377வது பிரிவும் திருத்தப்பட வேண்டும் என்றும் கருத்துக் கூறியிருந்தது.

மத்திய அரசுக்க ஓரினச் சேர்க்கை பற்றி தெளிவான பார்வை எதுவும் இல்லை. ஆம். நடுவண் அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் மல்ஹோத்ரா அவர்கள் நம்முடைய சமூகம் ஓரினச் சேர்க்கை ஏற்காத சூழலில் அச்செயல் தவறுதான் என்று கூறினார்.

மத்திய சுகாதாரத்துறையின் சொலிசிட்டர் ஓரினச் சேர்க்கை தவறல்ல, என்றார். நடுவண் அரசின் இரு துறைகள் ஒரே பிரச்சனையில் இருவேறு முரண்பட்ட கருத்துக்களைத் தெரிவித்திருப்பதற்கு உச்ச நீதிமன்றம் கண்டனம் தெரிவித்தது.

இந்நிலையில், சிங்வி, முகோபாத்யாயா ஆகிய இரு நீதிபதிகளைக் கொண்ட பெஞ்ச்-ல் மத்திய உள்துறையின் அட்டர்னி ஜெனரல் வாஹன்வதி அவர்கள் ஆஜராகி நடுவண் அரசு ஓரினச் சேர்க்கை பற்றி கொண்டிருக்கும் கருத்தைத் தெளிவுபடுத்தினார்.

உள்துறை, சட்டத்துறை, சுகாதாரத்துறை ஆகிய துறைகளுகக்கு இடையே தகவல் பரிமாற்றத்தில் ஏற்பட்ட இடைவெளியால்தான் உச்ச நீதிமன்றத்தில் நடுவண் அரசு சார்பில் கூறப்பட்ட கருத்துக்கள் முரண்பாடாக அமைந்துவிட்டன என்றும் மத்திய அரசு இப்போது தெளிவு பெற்றிருக்கிறது. இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 377 ஓரினச் சேர்க்கையாளர்களின் உரிமையைப் பறிப்பதாக அமைந்திருக்கிறது என்று தில்லி உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புக்குப் பிறகு மத்திய அரசும் இதே கருத்தையே கொண்டிருக்கிறது என்றும் வாஹன்வதி மத்திய அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்திடம் கூறிவிட்டார். ஓரினச் சேர்க்கையை ஆதரிப்பதாக தனது கருத்தை மத்திய அரசு அறிவித்துள்ள நிலையில் உச்ச நீதிமன்றம் தான் தீர்ப்பை ஒத்திவைத்திருக்கிறது.

இதற்கு முன் தில்லி உயர்நீதிமன்றத்திடம் (Gay Sex) ஓரினச் சேர்க்கை பற்றிக் கருத்துக் கூறிய நடுவண் அரசு இந்திய தண்டனைச் சட்டம் இ.பி.கோ.வின் 377வது பிரிவை நீக்க முடியாது. ஓரினச் சேர்க்கை நாகரிகத்துக்கும் தார்மிக நெறிகளுக்கும் எதிரானது. இந்தியாவில் ஓரினச் சேர்க்கையாளர்கள் 0.03 சதவிகிதம் பேர் தான் உள்ளனர். இவர்களுக்காக இ.பி.கோ. 377 பிரிவை நீக்குவது மீதமுள்ள அமோகப் பெரும்பான்மையான 97.07 சதவிகித மக்களின் உணர்வுகளைப் பாதிக்கும் என்று கூறியிருந்தது.

ஆனால் உச்ச நீதிமன்றத்திடம் Gay Sex-ஐ ஆதரித்துக் கருத்துக் கூறியுள்ளது மத்திய அரசு இதிலிருந்து சுயப்பிரசவமாக ஓர் உண்மை வெளிப்படுகிறது. ஓரினச் சேர்க்கையாளர்கள் மைய அரசிடமே செல்வாக்குச் செலுத்துமளவுக்கு வலிமை பெற்றிருக்கிறார்கள்.

எனவே அநீதிக்கு எதிராகப் போராடும் அணியினர் மிக்க வலிமையுடன் இந்த அநீதியை எதிர்க்க வேண்டும். சமூக விஞ்ஞானிகள், மருத்துவர்கள், சமூக நலனில் அக்கறையுள்ளவர்கள் ஆகிய எவரையும் கருத்துக் கேட்காமல் ஒரு மாபாவத்தைத்

திறந்துவிட மத்திய அரசு முடிவு செய்திருப்பது வெட்கக் கேடு.

உண்மையில் ஓரினச் சேர்க்கை (Gay Sex) என்பது - Crime Against Humanity - மனித குலத்து எதிரான மாபாதகம், ஓரினச் சேர்க்கையில் விருப்பமுள்ள ஒருவனை சமூகத்துடன் கலந்து வாழ்ந்திட அனுமதித்தால் இளைஞர்களை வழிகெடுத்து இல்லற வாழ்வில் ஈடுபட முடியாத அண்மையற்றவர்களாக மாற்றிவிடுவான். வியாதிகளைப் பரப்புவான்.

ஓரினச் சேர்க்கை இயற்கைக்கு எதிரானது. ஆண் பெண் இணைப்பே இயற்கையானது. திருமணத்தின் வழியாக அந்த இணைப்பு ஏற்படுவதுதான் நியாயமானது, இல்லறமே புனிதமானது.

மனித குலத்துக்கு நேர்வழி காட்டிட வந்த இஸ்லாம், ஒழுக்கமாக வாழ்ந்திட வழிகூறி மனிதனுக்கு கவுரவத்தை வழங்கிய இஸ்லாம் திருமணத்தை அனுமதித்தது. ஆணும் பெண்ணும் இணைந்திடும் இல்லறத்தில்தான் - சகீனத் - நிம்மதி, மவத்தத் - அன்பு, ரஹ்மத் - கருணை ஆகிய நன்மைகள் நிறைந்துள்ளதாகச் சொல்கிறது திருக்குர்ஆன்.

உங்களுக்காக உங்களிலிருந்தே ஜோடியை நீங்கள் நிம்மதி பெறுவதற்காகப் படைத்திருப்பதும் அவனுடைய (அல்லாஹ்வுடைய) சான்றுகளில் ஒன்றாகும். உங்களிடையே அன்பையும் கருணையையும் அவன் ஏற்படுத்தினான். இதில் சிந்திக்கின்ற சமுதாயத்துக்கு பல சான்றுகள் உள்ளன (30:21)

இல்லறம் என்ற சீரிய வழியைப் புறக்கணித்து விட்டு ஓரினச் சேர்க்கையில் சுகம் காணுவோரை, மூடர்கள் வீண்விரயம் செய்பவர்கள், வரம்பு மீறியவர்கள் என்றெல்லாம் கண்டிக்கிறது திருக்குர்ஆன் (27:55, 7:81, 26:166)

இந்த அநாகரீகத்தை அகிலத்துக்கு முதன்முதலாக அறிமுகப்படுத்தியவர்கள் பலஸ்துன் சத்தூம் எனும் நகரில் Dead Sea எனும் சாக்கடல் அருமே வாழ்ந்த இனத்தவர்கள்தான். இவர்களைத் திருத்திட இறைத்தூதர் லூத் நபி பெரும் பிரயத்தனம் மேற்கொண்டார்கள் முடியவில்லை.

இல்லறத்தின் மேன்மையைப் புறக்கணித்து ஓரினச் சேர்க்கையில் வீழ்ந்து கிடந்தவர்களைத் திருத்திட மேற்கொண்ட எல்லா முயற்சிகளும் பலனற்றுப் போன பின் விரக்தி வயப்பட்ட இறைத்தூதர் லூத் (அலை) இப்படிக்கூறினார்கள்: "உங்களைத் திருத்திட போதுமான வலிமை எனக்கு இருக்க வேண்டுமே... அல்லது வலிமையான ஆதரவின் பக்கம் நான் ஒதுங்க வேண்டுமே..." (11:80)

புஜபலமும் அதிகாரமும் ஆதரவாளர்கள் கூட்டமும் எனக்கு இருந்திருந்தால் இந்தத் தீமையை நான் முழுவீச்சில் எதிர்த்து ஒழித்திருப்பேனே... என்று விசனப்பட்டார் இறைத்தூதர் லூத் (அலை) அவர்கள்.

"எனவே லூத் நபிக்குப் பிறகு வந்த இறைத்தூதர்கள் எவருக்கும் அல்லாஹ் ஆதரவாளர்களைத் தராமல் இருக்கவில்லை" என்று நபி(ஸல்) கூறினார்கள். (அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரழி) நூல்: திர்மிதி - 3041)

இறைத்தூதர்கள் வருமைக முடிவுக்கு வந்துவிட்டதால் அநீதிக்கு எதிரானப் போரை முன்னின்று நடத்திட வேண்டிய கடமை முஸ்லிம்களுக்கு உண்டு.

தனி மனிதச் சுதந்திரம் என்ற போர்வையில் ஒழுக்கக் கேடுகளை அரசு அனுமதிக்குமானால் எவ்வளவு வலிமைமிக்க அரசாக அது இருப்பினும் தூக்கி குப்பை மேட்டில் வீசப்பட வேண்டும். இதற்காக (ருக்னுன் ஷதீத்) வலிமையான ஆதரவின் துணையுடன் குவ்வத் எனும் அதிகாரத்தையும் வலிமையைம் முஸ்லிம்கள் கையில் எடுக்க வேண்டும்.

இறை மார்க்கம் தவிர வேறு எந்தக் கொள்கையும் இப்படித்தான் தீமைகளை எதிர்ப்பதில் தோல்வி கண்டு விடுகின்றன. காரணம் எது தீமை என்ற அளவுகோல் இறை மார்க்கத்தை ஏற்காதோரிடம் இருப்பதில்லை.

மனிதர்கள் வாழும் பகுதிகளிலெல்லாம் இறை மார்க்கம் நிலை நாட்டப்படுவதே தீமையை எதிர்த்து ஒழித்திட நிரந்தர வழி. அதற்கான ஏற்பாடுகளை ஒவ்வொரு முஸ்லிமும் தான் வாழும் பகுதியில் செய்தாக வேண்டும்.






# தரீக்குல் குர்ஆன்


மவ்லவி K.M.இல்யாஸ் ரியாஜி


وَإِذِ اسْتَسْقَىٰ مُوسَىٰ لِقَوْمِهِ فَقُلْنَا
اضْرِب بِّعَصَاكَ الْحَجَرَ ۖ
فَانفَجَرَتْ مِنْهُ اثْنَتَا عَشْرَةَ عَيْنًا ۖ قَدْ
عَلِمَ كُلُّ أُنَاسٍ مَّشْرَبَهُمْ ۖ كُلُوا
وَاشْرَبُوا مِن رِّزْقِ اللَّـهِ وَلَا تَعْثَوْا
فِي الْأَرْضِ مُفْسِدِينَ (٦٠)

மூஸா தம் சமுதாயத்தினருக்காக தண்ணீர் வேண்டியதை எண்ணிப்பாருங்கள். 'அப்போது, உமது கைத்தடியால் பாறையை அடிப்பீராக' என்று கூறினோம். (அவர் அடித்தார்.) உடனே அதிலிருந்து பன்னிரெண்டு ஊற்றுக்கள் பீறிட்டு ஓடின. ஒவ்வொரு கூட்டத்தினரும் தமது நீர்த்துறையை நன்கு அறிந்து கொண்டனர். "அல்லாஹ் அருளியவற்றிலிருந்து உண்ணுங்கள், பருகுங்கள். பூமியில் வரம்பு மீறி குழப்பம் செய்து கொண்டு திரியாதீர்கள்" (என்று நாம் கூறினோம்) (59 )

இஸ்ரவேலர்களுக்கு தான் புரிந்த பேரருள்களின் அணிவகுப்பில் இன்னொரு அருளை அல்லாஹ் இங்கே குறிப்பிடுகின்றான்.

'தீஹ்' எனும் பாலைவனத்தில் இஸ்ரவேலர்கள் தாகம் போக்கிட தண்ணீருக்காக அல்லாடிக் கொண்டிருந்தபோது இறைத்தூதர் மூஸா (அலை) அவர்கள் அல்லாஹ்விடம் மன்றாடினார்கள். அப்போது அல்லாஹ் அம்மக்களுக்கு உடல் உழைப்பு ஏதுமின்றி எளிதாக தண்ணீர் வழங்கினான். திருத்தூதர் மூஸா (அலை) அவர்களிடம் உம் கைத்தடியால் கல்லை அடிப்பீராக என்றான். அவர்களும் அது போல அடித்தார்கள். அடிக்கப்பட்ட கல்லில் இருந்து பன்னிரெண்டு நீர் ஊற்றுக்கள் பொங்கிப் பிரவாகம் எடுத்தன.

அப்போது அம்மக்களிடம், அல்லாஹ் வழங்கிய மன்னு, சல்வா எனும் அற்புத உணவை நன்றாக உண்ணுங்கள். அவன் வழங்கிய இந்த நீரை நன்றாக குடியுங்கள். இதற்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துங்கள். பூமியில் வரம்பு மீறி குழப்பம் ஏற்படுத்த வேண்டாம் என்று மூஸா (அலை) அல்லாஹ்வின் கட்டளையைக் கூறினார்கள்.

இறைத்தூதர் மூஸா (அலை) அவர்கள் தம் கைத்தடியால் அடித்த கல் பற்றி பல கருத்துகள் கூறப்பட்டுள்ளன. அது 'தூர்' மலையிலிருந்து எடுக்கப்பட்ட கல். ஓர் ஆட்டின் தலையளவு கொண்டது. எங்கு சென்றாலும் இஸ்ரவேலர்கள் ஒரு பையில்

**நாங்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களுடன் ஒரு பயணத்தில் இருந்தோம். அப்போது நீர் பற்றாக்குறை ஏற்பட்டது. அப்போது "தண்ணீர் ஏதும் மிச்சம் உள்ளதா?" என்று நபி (ஸல்) அவர்கள் தம் கையை பாத்திரத்தில் நுழைத்துக் கொண்டு "வளமான, சுத்தப்படுத்தும் தண்ணீரிடம் வாருங்கள். இந்த வளம் அல்லாஹ் வழங்கியதாகும்" என்று கூறி அழைத்தார்கள். அப்போது அவர்களின் விரல்களுக்கிடையேயிருந்து தண்ணீர் ஊற்றெடுத்து வருவதைக் கண்டேன்**

போட்டு அதை எடுத்துச் செல்வர். சதுர வடிவிலான அக்கல்லை நீர் தேவைப்படும் போது அடித்தார் அதிலிருந்து நீர் பொங்கிப் பாயும்.

ஹழ்ரத் ஸயீத் பின் ஜுபைர் (ரழி) கூறுகின்றார்கள்: "மூஸா (அலை) அவர்கள் ஒரு முறை குளிக்கும் போது தமது ஆடைகளை கழற்றி வைத்து அதன் மீது ஒரு கல்லை வைத்து விட்டு குளிக்கச் சென்றார்கள். திடீரென ஆடையுடன் சேர்ந்து அக்கல்லும் ஓட ஆரம்பித்தது. மூஸா நபியின் உடலமைப்பு பற்றி உண்மைக்குப் புறம்பாகப் பேசித்திரிந்த இஸ்ரவேலர்களுக்கு அல்லாஹ் மூஸா நபியின் உடலமைப்பைக் காட்டினான். அவதூறுகளிலிருந்து மூஸா நபியைக் காப்பாற்றினான். (இது பற்றிய விபரம் அறிய காண்க புஹாரீ ஹதீஸ் 3404) அப்போது மூஸா நபியிடம் அடி வாங்கி கல்தான் இந்தக் கல்" (நூல்: குர்த்துபீ)

அப்போது வானவர் கோமான் ஹழ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் மூஸா நபியிடம் "இக் கல்லை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். இதில் பேராற்றல் இருக்கின்றது. இதில் அற்புதம் ஏற்படும்" என்று கூறினார்கள். உடனே மூஸா (அலை) அவர்கள் அதை எடுத்து தனது வாகனத்தின் உணவுப் பைக்கள் பத்திரப்படுத்திக் கொண்டார்கள். (நூல்: இப்னு கதீர்)

அறிஞர் இப்னு அதிய்யா (ரஹ்) கூறுகின்றார்கள். அது சதுரமான கல். மூஸா நபி அதை அடிக்கும் போது அதன் ஒவ்வொரு மூலையிலும் மூன்று ஊற்றுக்கள் வீதம் நான்கு மூலைகளில் மொத்தம் பன்னிரெண்டு ஊற்றுக்கள் பாய்ந்தோடும். அவர்களுக்குப் போதும் என்றான பின் ஊற்றுக்கள் காய்ந்து விடும். (நூல்: குர்த்துபீ).

ஹழ்ரத் ஹசன் அல்பஸரீ (ரஹ்) கூறுகின்றார்கள்: அல்லாஹ், ஒரு குறிப்பிட்ட கல்லை சுட்டிக் காட்டி இதை அடியுங்கள் என்று மூஸா நபிக்குக் கட்டளையிடவில்லை. ஏதாவது ஒரு கல்லை அடிக்க வேண்டும் என்பதே உத்தரவு. எந்தக் கல்லை அடித்தாலும் அதிலிருந்து நீரூற்றுக்கள் பொங்கி வருவதுதான் பெரும் சான்றாகவும் பேரற்புதமாகவும் இருக்கும்.

(நூல்: குர்த்துபீ, இப்னு கதீர்).

அண்ணல் நபிகளார் (ஸல்) அவர்களின் இரு விரல்களுக்கிடையேயிருந்து நீர் ஊற்று பொங்கி வழிந்தது இதை விட அற்புதமான தாகும். ஏனெனில் கற்களில் நீர் வருவதை நாம் தினமும் காணலாம். ஆனால் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு வாய்த்த அற்புதம் போல வேறு எந்த திருத்தூதருக்கும் ஏற்பட்டதில்லை.

ஹழ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரழி) கூறுகின்றார்கள்: "நாங்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களுடன் ஒரு பயணத்தில் இருந்தோம். அப்போது நீர் பற்றாக்குறை ஏற்பட்டது. அப்போது "தண்ணீர் ஏதும் மிச்சம் உள்ளதா?" என்று நபி (ஸல்) அவர்கள் தம் கையை பாத்திரத்தில் நுழைத்துக் கொண்டு "வளமான, சுத்தப்படுத்தும் தண்ணீரிடம் வாருங்கள். இந்த வளம் அல்லாஹ் வழங்கியதாகும்" என்று கூறி அழைத்தார்கள். அப்போது அவர்களின் விரல்களுக்கிடையேயிருந்து தண்ணீர் ஊற்றெடுத்து வருவதைக் கண்டேன்".

(நூல்: புஹாரீ - 3579).

ஸாலம் பின் அபீல் ஜஅல் (ரஹ்) கூறுகின்றார்கள். நான் நபித்தோழர் ஜாபிர் (ரழி) அவர்களிடம் "அந்நாளில் நீங்கள் எத்தனை பேர் இருந்தீர்கள்" என்று கேட்டேன். அதற்கு நாங்கள் ஒரு லட்சம் பேர் இருந்தாலும் எங்களுக்கு அது போதுமானதாக இருந்திருக்கும், எனினும் நாங்கள் ஆயிரத்து ஐநூறு பேர் இருந்தோம் என்று ஜாபிர் (ரழி) கூறினார்கள். (நூல்: புஹாரீ - 3576, நஸயீ).

**அல்லாஹ்விடம் மூஸா நபி தமது சமுதாயத்துக்காக தண்ணீர் வேண்டியபோது ஒரு குறிப்பிட்ட கல்லை கைத்தடியால் அடிக்கும்படி அல்லாஹ் கட்டளையிட்டான். கல்லில் இருந்து பன்னிரெண்டு ஊற்றுக்கள் பொங்கிப் பாய்ந்தன. இது இஸ்ரவேல் கூட்டத்தில் எண்ணிக்கையாகும். இஸ்ராயீல் என்ற பெயருடைய யஅகூப் நபி (அலை) அவர்களின் வாரிசுகள் பன்னிரெண்டு பேர் ஆவர்.**

*ஏன் பன்னிரெண்டு?*

*அல்லாஹ்விடம் மூஸா நபி தமது சமுதாயத்துக்காக தண்ணீர் வேண்டியபோது ஒரு குறிப்பிட்ட கல்லை கைத்தடியால் அடிக்கும்படி அல்லாஹ் கட்டளையிட்டான். கல்லில் இருந்து பன்னிரெண்டு ஊற்றுக்கள் பொங்கிப் பாய்ந்தன. இது இஸ்ரவேல் கூட்டத்தில் எண்ணிக்கையாகும். இஸ்ராயீல் என்ற பெயருடைய யஅகூப் நபி (அலை) அவர்களின் வாரிசுகள் பன்னிரெண்டு பேர் ஆவர். இவர்கள் 'அஸ்பாத்' என்றும் கூறப்படுவர். திருமறை குர்ஆனில் 'அஸ்பாத்' என்று பல முறை இவர்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இந்தப் பன்னிரெண்டு பேரும் இஸ்ரவேலர்களின் தலைவர்களாவர்.*

*இவர்களில் ஒவ்வொருவருடைய வழித் தோன்றல்களும் தம் தலைவரைப் பின்பற்றுவார்கள். தம் முன்னோரின் மரபைப் பற்றிப் பிடித்து ஒழுகுவார்கள். எனவே தன் அல்லாஹ் "ஒவ்வொரு கூட்டத்தினரும் தம்முடைய நீர்த்துறையை நன்கறிந்து கொண்டனர்" என்று கூறியுள்ளான்.*

*(நுல்: ஃபீழிலாலில் குர்ஆன்)*

*எந்த மூலையில் தமது நீர்த்துறை உள்ளது என்று பன்னிரெண்டு ஊற்றுகளுக்கு மத்தியில் தமது ஊற்றைக் கண்டறிந்து கொண்டனர்.*

*பன்னிரெண்டு நீருற்றுகள் பற்றி பைபிளில் ஒன்றும் கூறப்படவில்லை. எனவே குர்ஆன் கூறுவதை நம்ப முடியாது என்று கிறிஸ்தவர்கள் சிலர் கூறியதுண்டு. ஆனால் டீன் ஸ்டான்லி H(DEAN STANLEY) என்னும் கிறிஸ்தவர் இது தொடர்பாக ஆராய்ச்சி செய்து திருக்குர்ஆனில் கூறப்படும் தகவலே சரியானது என்று உறுதிப்படுத்தியுள்ளார்.*

*பைபிளில் கூறப்பட்டுள்ள இடங்களை நேரில் கண்டு ஆய்வு செய்வதற்காக ஸ்டான்லி ஜெருசலம் சென்றார். அங்கு பைத்துல் முகத்தசுக்கு அருகில் உள்ள ஒரு மலைக்குன்றுக்கு இடையே 10 - 15 அடிகள் உயரத்தில் ஒரு பாறையைக் கண்டார். அதனை ஆராய்ச்சி செய்ததில் அந்தப் பாறையில் பல இடங்களில் வெடிப்புகள் ஏற்பட்டு நீர் ஓடியதற்கான அடையாளங்களை அவர் கண்டார். அவற்றில் சில அழிந்து காணப்பட்டன. மொத்தம் இருபது வெடிப்புக்கள் வரை ஏற்பட்டிருக்கலாம் என்றும் அவற்றில் பத்து மட்டுமே தெளிவாகத் தென்படுகின்றன என்றும் ஸ்டான்லி கூறினார். இதைப்பற்றி முதன் முதலாக அறிவித்தது திருக்குர்ஆன்தான் என்பதையும் அவர் ஒப்புக் கொண்டார். (ஆதாரம்: Sinai And Palestine பக்கம் 36-ஐ மேற்கோள்காட்டி, தஃப்சீர் ஜவாஹிருல் குர்ஆன் 1992. பாகம் 1, பக்கம் 214).*

*இஸ்ரவேலர்கள் தீஹ் பாலைவனத்தில் பாறைகளுடனும் வறட்சியுடனும் கிடந்தனர். அந்த வானத்தின் ஜுவாலையுடனும் உஷ்ணத்துடனும் கிடந்து உழன்றனர். ஆனால் அல்லாஹ் அந்தப் பாறையிலிருந்து அவர்களுக்கு தண்ணீரைப் பொங்கி வரச் செய்தான். அந்த வானத்திலிருந்து மன்னு, சல்வா (தேன், காடை) ஆகியவற்றை இறக்கியருளினான். எனினும் எந்த லட்சியத்தை அடைவதற்காக எகிப்திலிருந்து வெளியே கொண்டு வரப்பட்டனரோ, எதற்காக அவர்கள் பாலைவனத்தில் தங்க வைக்கப்பட்டனரோ அந்த உயர்ந்த உன்னத லட்சியத்தை நோக்கி தலை உயர்த்திப் பார்க்க மறுத்துவிட்டன அவர்களின் பாழாய்ப் போன ஆத்மாக்கள்.*

*ஏக நாயன் அல்லாஹ் தன் திருத்தூதர் மூஸா (அலை) அவர்கள் மூலம் இஸ்ரவேலர்களை இழிவிலிருந்தும் அவமானத்திலிருந்தும் பாதுகாத்து எகிப்திலிருந்து வெளியேற வைத்தது (பைத்துல் முகத்தஸ் வீற்றிருக்கும்) புனித பூமியின் உரிமையாளர்களாக இஸ்ரவேல் சமுதாயத்தை ஆக்குவதற்காகத் தான்.*

அவர்களுக்கு உயர்வை வழங்குவதற்காகதான்.

விடுதலைக்கென்று ஒரு விலை உண்டு. கண்ணியத்தை அடைந்திட பல சிரமங்களைத் தாங்கித்தான் தீர வேண்டும். அவர்களிடம் அல்லாஹ் ஒப்படைக்க விரும்பிய மிகப்பெரும் அமானிதத்தைப் பெற்றிட தியாகம் அவசியம். ஆனால் இஸ்ரவேலர்கள் விடுதலைக்கான விலையைத் தந்திட விருப்பமின்றிக் கிடந்தார்கள். சிரமங்களை ஏற்றிட மனமில்லை அவர்களுக்கு. தியாகம் செய்திடும் எண்ணம் இல்லை. மாறாக சொகுசு வாழ்க்கை வாழ்ந்திடவே விரும்பினர். விதவிதமான உணவுகளும், பானங்களும் வழங்கப்பட்டுக் கொண்டே இருக்கவேண்டும் என்றுதான் ஆசைப்பட்டனர்.

விடுதலை, கண்ணியம், மகத்தான பெருவாழ்வு ஆகிய லட்சியங்களை அடைந்திடும் வழியில் வண்ண வண்ண உணவுகளைத் தேடியவர்களாக புதிய வாழ்க்கை முறைக்கு தங்களை தயார் படுத்திக் கொள்வதிலேயே குறியாக இருந்தனர். (நூல்: ஃபிழிலாலில் குர்ஆன்)

எகிப்துக்கும் பாலஸ்தீனுக்கும் இடையிலுள்ள சினாய் தீப கற்பத்தில் அமைந்துள்ள தீஹ் எனும் பாலைவனம் தொன்னூறு மைல் நீளமும் இருபத்தி ஏழு மைல் அகலமும் கொண்டதாகும். அநியாயக் காரர்களுக்கு எதிராகப் போராடி அல்லாஹ்வின் ஆட்சியை நிலைநாட்டுவதற்காக போராடுங்கள், ஜிஹாத் செய்யுங்கள் என்ற அல்லாஹ்வின் கட்டளையைப் புறக்கணித்து உலக மோகத்தில் மனம் போன போக்கில் அலைந்தனர் இஸ்ரவேலர்கள். எனவே தீஹ் பாலைவனத்தில் நாற்பது ஆண்டகள் சிறைச் சாலையில் அடைத்தது போல் அடைத்து அவர்களை தவிக்க விட்டான் அல்லாஹ், பரந்து விரிந்த அந்தப் பாலைப் பெரு நிலத்திலிருந்து வெளியேறிட எவ்வளவோ முயற்சித்தும் அவர்களால் வெளியேற முடியவில்லை.

புனித பூமிக்குள் நுழைய விடாமல் நாற்பதாண்டுகள் தீஹ் பாலைவனம் எனும் திறந்த வெளிச்சிறையில் அடைக்கப்பட்டதற்குக் காரணம் என்னவெனில் ஜிஹாத் செய்ய மாட்டோம் என்று சொன்ன தலைமுறை மாண்டு மறைந்து விட்ட பின் அடுத்த தலைமுறை ஜிஹாத் செய்து புதின பூமியை அடைந்திட வேண்டும் என்பதற்காகத்தான், என்கிறார்கள் ஷஹீத் ஸய்யித் குதுப் (ரஹ்) மற்றும் ரஷீத் ரிளா (ரஹ்) ஆகியோர்.

(நூல்: ஃபீழிலாலில் குர்ஆன், தஃப்சீருல் மனார்)

இதே கருத்தை (வேலூர் அல்பாகியாத்துஸ் ஸாலிஹாத் வெளியீடு) தஃப்சீர் ஜவாஹிருல் குர்ஆனும் உறுதி செய்கிறது.

ஆனால் அடுத்த தலைமுறையும் அல்லாஹ்வின் கட்டளைகளை முறைப்படி செயல்படுத்தவில்லை. அவனின் உத்தரவுகளை கேலியும் கிண்டலும் செய்தனர், என்பதை 2:59 வது வசனத்தில் கண்டோம்.

எனினும் பேரருளாளன் அல்லாஹ் தன் அருள்கொடைகளின் வாசலை அடைத்து விட வில்லை, என்பதை அறுபதாவது வசனத்தில் கண்டோம்.

ஆனால் வரம்பு மீறுவதிலும் அட்டூழியம் செய்வதிலும் சுகம் கண்டு வந்த இஸ்ரவேலர்கள் திருந்தவே இல்லை. அவர்கள் எந்த அளவுக்கு மறுமை லட்சியத்தைத் தொலைத்து விட்டு அல்லாஹ்வின் கட்டளைகளை உதாசீனம் செய்து விட்டு உலக மோகத்தில், உணவு மோகத்தில் திளைத்துக் கிடந்தனர் என்பதற்கு அடுத்த (அறுபத்து ஒன்றாவது வசனம் சான்றாக அமைகின்றது).


**தமிழன் தொலைக்காட்சியில்**

**தரீக்குல் குர்ஆன்**


வைகறை வெளிச்சம் துணை ஆசிரியர் மௌலவி. **இல்யாஸ் ரியாஜி** அவர்களின் திருக்குர்ஆன் விரிவுரை வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை இரவு 10.00 மணி முதல் 10.30 வரை ஒளிபரப்பாகிறது. இந்நிகழ்ச்சியை RSD நிறுவனம் நடத்துகிறது.

**தொடர்புக்கு**

**காயல் தர்வேஷ் : 98418 98044**

# எது முதலில்?

## பேரறிஞர் யூசுப் அல் கர்ளாவி



## தொடர் - 2

எந்த சூழ்நிலையில் எந்தச் செயலை முன்னுரிமை தந்து நிறைவேற்ற வேண்டும் என்பதை சீர்தூக்கிப் பார்த்திடும் துலாக் கோல் முற்றாகப் பாழ்பட்டுக் கிடக்கிறது.

அரசியல், பொருளாதாரம், சமூகம், சிந்தனை இப்படி எந்தக் கோணத்தில் பார்த்தாலும் உலகியல் அடிப்படையில் சிந்தித்தாலும் ஆன்மிக அடிப்படையில் சிந்தித்தாலும் நம் நிலைமை இப்படித்தான் இருக்கிறது.

அரபு நாடுகள், இஸ்லாமிய நாடுகள் முழுவதிலும் வினோதமான பல பிளவுகளைப் பார்க்க முடிகிறது.

நம்மிடமுள்ள பழுதைப் போக்கும் கற்றல், கற்பித்தல் ஆகியவற்றைவிட பொழுது போக்கும் வீண் விளையாட்டுகளுக்கே முன்னுரிமை தரப்படுகிறது. இது தொன்றுதொட்டு இருந்து வருகிறது.

அறிவுப் பயிற்சியை விட உடற்பயிற்சிக்கே முன்னுரிமை தருகிறது நம் இளைய தலைமுறை, 'இளைமையைப் பராமரித்தல் என்றாலே உடற்பராமரிப்புமட்டுமே' என்று தப்பிதமாக எண்ணுகின்றனர். மனிதன் என்றாலே உடல் மட்டும்தானா? ஆத்மாவும் அறிவும் மனிதன் என்பதன் கீழ்வராதா? வருமல்லவா?!

அபுல் பதஹ் அல் பஸ்த்தி என்பவரின் பிரபலக் கவிதையொன்று நமக்கெல்லாம் நன்றாக மனதில் பதிந்துள்ளது.

"உடலுக்குச் சேவகம் செய்பவனே

எவ்வளவு முனைப்புக் காட்டுகிறாய்

அந்த சேவகத்தில்,

இழப்பைத் தருவதிலா லாபத்தைத் தேடுகிறாய்?

ஆத்மாவைக் கவனி, அதன் மேன்மைகளை

நிறைவுபடுத்து,

ஆத்மாவைக் கொண்டே மனிதனாகிறாய் நீ.

உடம்பை வைத்தல்ல."

சுஹைர்பின் அபீசல்மா என்பவரின் கவிதையும் நாம் அறிந்ததே.

"நாக்கு பாதி. உள்ளம் பாதி என்பதே இளைஞன்.

ஆனால் இப்போது ரத்தமும் சதையும்கொண்ட வடிவம் அன்றி வேறெதுவும் மிஞ்சவில்லை"

ஆனால் இன்றைய நிலை என்ன? மனிதன் என்றாலே உடலும் சதையும் தான். மற்றவை எல்லாம் இதற்கு அப்பால்தான்.

**1993**-ம் ஆண்டின் கோடை காலத்தில் எங்கும் ஒரே பேச்சு. தன்னைத் தானே ஏலம் விட்ட ஒரு விளையாட்டு வீரனைப்பற்றித்தான் எகிப்து நாடே பேசியது. (Club) கிளப் களுக்கிடையே நடைபெற்ற பேரம் பேசும் போட்டியில் ஒரு வீரன் முக்கால் மில்லியன் வரை விலை பேசப்பட்டானாம்.

எல்லா வகையான விளையாட்டுக்களையும் இவ்வளவு முக்கியத்துவம் தந்து பார்க்கிறார்களா? என்றால் இல்லை. மக்கள் அனைவரும் தம் அன்றாட வாழ்வில் பயனடையத்தக்க விளையாட்டுக்களுக்கு முக்கியத்துவம் தரப்படுவதில்லை. ஒரு சிலர் விளையாடிக் கொண்டிருக்க, பலர்

ஒய்யாரமாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் விளையாட்டுக்களுக்கே முன்னுரிமை தரப்படுகின்றது. குறிப்பாக கால்பந்து விளையாட்டைச் சொல்லலாம்.

அறிஞர்களோ, மேதைகளோ சிந்தனையாளர்களோ இஸ்லாமிய அழைப்பாளர்களோ பேரோடும் பெருமையோடும் திகழும் நட்சத்திரங்களாகப் பார்க்கப் படுவதில்லை. பொழுதுபோக்குத் துறையில் ஈடுபட்டுள்ள வீரர்களும் வீராங்கனைகளுமே புகழ்பெற்று விளங்குகின்றனர்.

ஏடுகளும் இதழ்களும் தொலைக் காட்சிகளும் வானொலிகளும் விளையாட்டு வீரர்களின் செயல்களையும் சாகசங்களையும் அவர்களைப் பற்றி கவைக்கு உதவாத தகவல்களையும் பரப்புவதிலேயே குறியாக இருக்கின்றன.

மற்றத் துறைச்சார்ந்த வல்லுனர்களோ அடர்ந்த இருளில் அடைக்கப்படுகின்றனர். மறக்கப்பட்டுவிட்டனர் அவர்களின் சாதனைகளைப் பற்றிப் பேசிட எவருமில்லை.

ஒரு விளையாட்டு வீரர் இறந்துவிட்டால் நாடே அல்லோல கல்லோலப் படுகின்றது. ஏடுகளெல்லாம் இந்தச் செய்தியால் நிரம்பி வழிகின்றது. ஒரு அறிஞர், மொழி வல்லுனர், பெரிய பேராசிரியர் இறந்து போனால் எவருக்கும் அது தெரியாமலேயே போய்விடுகின்றது.

பொருளாதார அடிப்படையில் பார்த்தால் 'தேசப் பாதுகாப்பு' என்று போலியாகச் சொல்லிக் கொண்டு விளையாட்டுகளுக்காகவும் பொழுதுபோக்கு அம்சங்களுக்காகவும் ஏராளமாக பணம் செலவிடப்படுகிறது. அதிர்ச்சியூட்டும் வகையில் பாதுகாப்புக்காக செலவிடப்படுகிறது. ஏன்? என்று கேள்வி கேட்க எவருமில்லை.

மறுபுரம் கல்வி, சுகாதாரம், மார்க்க விவகாரம், அடிப்படை சேவைகள் ஆகியவற்றுக்கு போதிய நிதி ஒதுக்கப்படுவதில்லை. கேட்டால் அரசின் நிதியாதாரம் பலஹீனமாக இருப்பதாகக் கூறி எளிமையாக வாழ்ந்திடப் போதிக்கிறார்கள். ஒருபுரம் ஊதாரித்தனம். மறுபுரம் சிக்கனம். இப்னுல் முக்ஃபிஉ என்பவரின் பழமொழி ஒன்று உண்டு. "அனாவசியமான செலவுகளால் அவசியச் செலவு நின்று போகிறது", என்று.

இவ்வாறாக எதற்கு முன்னுரிமை தர வேண்டும். எதை முதலில் செய்ய வேண்டும் என்று சீர் தூக்கிப் பார்த்திடும் துலாக்கோல் சீரழிந்து கிடக்கிறது.

இந்தக் கோளாறு முஸ்லிம் பொது மக்களிடமோ அல்லது நீக்குப் போக்கான முஸ்லிம்களிடமோ இருந்து வரவில்லை. "நாங்களே முஸ்லிம்கள்" என்று கூறிக் கொள்வோர் இத்தகைய கோளாறுடையவர்களாக இருக்கிறார்கள். சரியான மார்க்க அறிவும் முறையான சட்ட விளக்கமும் இல்லாத காரணத்தால் இந்தக் கோளாறு வருகின்றது.

ஆம். சுமாரானது எது சிறப்பானது எது? ஏற்றமானது எது ஏறுக்குமாறானது எது? சரியானது எது குழப்பமானது எது? ஏற்கப்பட வேண்டியது எது மறுக்கப்பட வேண்டியது எது? சுன்னா எது பித்அத் எது? என்று சீர்தூக்கிப் பார்த்திடத் துணை செய்வது கல்வி ஒன்றுதான். மார்க்க அடிப்படையில் ஒவ்வொரு செயலையும் மதிப்பீடு செய்திடத் துணை நிற்கிறது கல்வி.

சட்ட விளக்கமும் கல்வியின் வெளிச்சமும் பெற்றிடாத பலர் பல தரப்பட்ட செயல்களுக்கு மத்தியிலுள்ள எல்லைக் கோட்டை அழித்து ஒன்றுக்கொன்று வித்தியாசமில்லாமலாக்கி அவற்றின் தனித்தன்மைகளைச் சிதைத்துவிட்டனர். மார்க்கம் சொல்லாதவற்றையெல்லாம் சொல்லிவிடுகின்றனர். நற்செயல்களுக்கிடையிலான தராதரங்களை அழித்து மார்க்கத்தில் வரம்பு மீறி விட்டனர் அல்லது குறைவைத்து விட்டனர்.

பெரும்பாலும் இவர்கள் நல்லுள்ளம் கொண்டவர்களாக இருந்து கொண்டே ஏற்றமானதையும் சிறப்பானதையும் விட்டு விட்டு ஏறுக்குமாறானதையும் சுமாரானதையும் செய்வதில் ஈடுபட்டு மூழ்கிவிடுகின்றனர்.

ஒரு சூழ்நிலையில் ஒரு செயலைச் செய்து சிறப்பானதாக இருந்திருக்கும். மற்றொரு சூழ்நிலையில் அதைவிட வேறொன்றைச் செய்வதே சிறப்பானது என்ற நிலையில், இரண்டு சூழ்நிலைகளையும் சந்தர்ப்பங்களையும் வேறு பார்த்திடும் அளவுக்கு சட்டவிளக்கம் ஞானம் இல்லாதிருக்கின்றனர்.

நல்லுள்ளம் கொண்ட முஸ்லிம்கள் சிலரை நான் பார்த்திருக்கிறேன். ஏற்கனவே பல பள்ளிவாசல்கள் இருக்கும் ஊரில் மற்றொரு பள்ளிவாசலை கட்டி எழுப்பிட அரை மில்லியன் ஒரு மில்லியன் பல மில்லியன் என டாலர்களை வாரியிறைக்கின்றனர். இந்தச் செலவில் பாதியை அல்லது கால் பகுதியை இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்திடவும் இறைமறுப்பை - குஃப்ரை எதிர்கொள்ளவும் இஸ்லாத்தை நிலைநாட்டவும் இஸ்லாமியப் பணிகளை நிறுவிடவும் தந்தாலென்ன? சில லட்சியங்களுக்காக உழைத்திட லட்சிய வீரர்கள் உள்ளனர். பணம் தான் இல்லை. எனவே நீங்கள் பொருளுதவி செய்தாலென்ன? என்று கேட்டால் அதைக் காது கொடுத்தே கேட்பதில்லை அவர்கள். ஒரு தலைமுறையைக் கட்டியெழுப்புவதை விட கற்களாலான கட்டிடங்களை எழுப்புவதிலேயே குறியாக இருக்கிறார்கள்.

பெரும் செல்வந்தர்களான முஸ்லிம்களில் ஒரு கூட்டம் ஆண்டுதோறும் நஃபில் ஹஜ்ஜை நிறைவேற்றிடவும் ரமழான் உம்ராவை நிறைவேற்றிடவும் கூட்டம் கூட்டமாகக் கிளம்பி விடுகின்றனர். ஹஜ்ஜோ, உம்ராவோ கடமையாகாத ஏழைகளையும் தம் செலவில் தம்மோடு அங்கு அழைத்துச் செல்கின்றனர். இதற்காக தாராளமாக செலவு செய்கின்றனர்.

ஆண்டுதோறும் செலவிடும் இந்தத் தொகையை ஃபாலஸ்தீன் நாட்டில் யூதர்களை எதிர்த்துப் போராடிட செர்பியாவில், போஸ்னியா - ஹெர்சகோவினாவில் நடக்கும் ஜிஹாதுக்காக, இந்தோனேஷியா, பங்களாதேஷ் இன்னபிற ஆசிய, ஆப்பிரிக்க தேசங்களில் நடைபெற்றுவரும் கிறிஸ்தவ மதமாற்றத்தை ஏதிர்கொள்வதற்காகத் தரலாமே...? இஸ்லாமிய அழைப்பு மையங்களை நிறுவிடவும் 'தஅவா'வை முழுநேரப்பணியாகச் செய்திடும் அழைப்பாளர்களை உருவாக்கவும் பயனுள்ள இஸ்லாமிய நூல்களை வெளியிடவும் குர்ஆன் மொழி பெயர்ப்புக்களையும் இதர வெளியீடுகளைக் கொண்டு வந்திடவும் நிதி உதவி செய்யலாமே...? என்று கூறினால் 'வெடுக்'கென்று தலையைத் திருப்பிக் கொண்டு ஆணவமாகச் செல்வதைப் பார்க்க முடிகிறது.

ஆனால் ஹஜ் தொடர்பான செயல்களைவிட ஜிஹாத் தொடர்பான செயல்களே ஏற்றமானவை என்று தெள்ளத் தெளிவாகக் கூறியுள்ளது திருக்குர்ஆன்.

ஹாஜிகளுக்குத் தண்ணீர் புகட்டுவோரையும் (கஅபா எனும்) புனிதப் பள்ளிவாசலை நிர்வாகம் செய்வோரையும் அல்லாஹ்வையும் இறுதிநாளையும் நம்பி ஏற்றுக்கொண்டு அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரிந்தோருக்குச் சமமாக ஆக்கிவிட்டீர்களா? அல்லாஹ்விடத்தில் இவர்கள் (இருவரும்) சமமாக மாட்டார்கள். அநியாயக்காரர்களை அல்லாஹ் நேர்வழியில் செலுத்தமாட்டான்.

யார் ஓரிறை நம்பிக்கை கொண்டு தம் நாட்டை விட்டும் வெளியேறி தியாகப் பயணம் மேற்கொண்டு தம் செல்வங்களையும் உயிர்களையும் தியாகம் செய்து அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் செய்தார்களோ அவர்கள் அல்லாஹ்விடம் மகத்தான பதவி பெறுவார்கள். அவர்கள் வெற்றியாளர்கள்.

அவர்களுக்கு அவர்களின் இறைவன் தன் அன்பையும் திருப்தியையும் சுவனபதிகளையும் தருவதாக நல்வாழ்த்துக் கூறுகிறான். அங்கு அவர்களுக்கு நிரந்தரமான பாக்கியங்கள் உண்டு (9:19,20,21)

இவ்வாறு அல்லாஹ் தெள்ளத் தெளிவாக எது சிறந்தது என்று கூறியுள்ளான்.

ஆனால் நம்முடைய செல்வந்தர்கள் நஃபிலான ஹஜ்ஜை நிறைவேற்றிக் கொண்டே போகிறார்கள். எனினும் மதச்சார்பின்மை, பிரிவினைவாதம், இறைமறுப்பு, மனமுரண்டு, உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் வரும் எதிர்ப்புக்கள் ஆகியவற்றை எதிர்கொள்வது காலத்தின் கட்டாயம். அன்றாடக் கடமை. இந்தக் கடமையைச் செய்வதில்லை.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு வார இதழில் பிரபல எழுத்தாளர் நண்பர் பேராசிரியர் ஃபஹ்மி ஹுவைதி அவர்கள் எழுதிய கட்டுரையில் "கடமையான ஹஜ்ஜை விட போஸ்னியாவைக் காப்பதே முதன்மையானது" என்று ஹஜ்ஜின் காலக்கட்டத்தில் எழுதியிருந்தார்.

"அவரின் இக்கருத்து ஷரீஅத் அடிப்படையில் சரிதானா?" என்று பலரும் என்னிடம் கேட்டனர்.

"ஒரு கோணத்தில் பார்த்தால் இது சரியானதே, சட்ட அடிப்படையில் பார்த்தால் கூட எந்தக் கடமைகளைத்

தாமதமாகக் கூட செய்திட முடியுமோ அதைவிட எதை உடனடியாக நிறைவேற்றியே தீர வேண்டுமோ அதைத்தான் முதலில் செய்ய வேண்டும் என்பது ஷரீஅத் ஏற்றுக் கொண்ட விஷயம் தான்".

கடமையான ஹஜ்ஜை தாமதமாகக் கூட செய்யலாம். சில அறிஞர்கள் நிதானமாகவே செய்ய வேண்டும் என்கின்றனர்.

ஒருபுறம் பசி, பிணி, குளிர் ஆகியவற்றால் அழிந்து கொண்டும் மறுபுரம் கூட்டுப் படுகொலைக்கு ஆளாகியும் நிற்கும் போஸ்னியா முஸ்லிம்களைக் காப்பது அவசிய, அவசரக் கடமையல்லவா? இதைத் தாமதப்படுத்த முடியுமா? முஸ்லிம் சமுதாயம் உடனடிக்கவனம் செலுத்த வேண்டிய பிரச்சனை அல்லவா இது?

ஹஜ்ஜில் உள்ள புனிதச் சின்னங்களை (ஷஆஇர்) மதிப்பதும் கண்ணியப்படுத்துவதும் கடமை என்பதில் இன்னொரு கருத்து இருக்கவே முடியாது. எனினும் ஏராளமான பணச்செலவுகளின்றி மக்கா, மதினா ஆகிய புனித நகரவாசிகளும் அவற்றின் சுற்றுப்புர ஊர்வாசிகளுமே ஹஜ்ஜின் புனிதச் சின்னங்கள் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழியும் அளவுக்கு அங்கு குவிந்து விடுகின்றனர்.

முஸ்லிம் செல்வந்தர்கள் தமது நஃபில் ஹஜ்ஜை நிறுத்திவிட்டு அந்தப் பணத்தை இஸ்லாத்தை நிலைநாட்டிடும் அறப்பணிக்கும் ஜிஹாதுக்கும் தருவதால் ஹஜ்ஜிலும் உம்ராவிலும் கூட்டம் குறைந்து அல்லாஹ்வின் புனிதச் சின்னங்கள் களையிழந்து போய்விடும் நிலைமை ஏற்பட்டுவிடப்போவதில்லை. அதன் சுற்றுப் புரத்திலிருப்பவர்களே குறைந்த பொருட்செலவில் வந்து போதுமான அளவுக்கு அல்லாஹ்வின் சின்னங்களை கண்ணியப்படுத்திக் கொண்டுதானிருக்கின்றனர்.

என்னைப் பொருத்தவரை "கடமையான ஹஜ்ஜைவிட போஸ்னியாவைக் காப்பதே முதன்மையானது" என்ற பேராசியர் ஹுவைதி அவர்களின் கருத்தை சற்று நெகிழ்த்தி விடலாம்.

ஏற்கனவே தமது கடமையான ஹஜ்ஜை முடித்து விட்டவர்கள் தான் ஆண்டுதோறும் ஹஜ்ஜில் கூட்டம் கூடிக்கொண்டே போவதற்குக் காரணம். வருடந்தோறும் இவர்கள் நஃபில் ஹஜ்ஜுக்கு வந்து விடுகின்றனர். இருபதுலட்சம் பேர் ஆண்டுதோறும் ஹஜ்ஜுக்கு வருகின்றார்கள் என்றால் இதில் 15% தான் புதிய ஹாஜிகள். அதாவது கடமையான முதல் ஹஜ்ஜை நிறைவேற்ற வருபவர்கள். மீதியுள்ளவர்கள் பழைய ஹாஜிகள். நஃபில் ஹஜ்ஜை நிறைவேற்ற வருபவர்கள்.

என் ஆசை என்னவென்றால் இப்படி ரமழான் உம்ராவையும் ஆண்டுதோறும் நஃபில் ஹஜ்ஜையும் ஆண்டு முழுவதும் உம்ராவையும் பெரும் பொருள் செலவில் நிறைவேற்றிக் கொண்டிருப்பவர்கள் அந்தப் பணத்தை அல்லாஹ்வின் பாதையில் செலவிட வேண்டும் என்பதுதான்.

இன்றைய உலகில் முஸ்லிம்கள் இருந்தும் இல்லாமலிருக்கின்றனர். அவர்கள் உணர்வும் உடலும் அழிவின் முன்னே நிற்கின்றன. அவர்களின் புனிதங்கள் பங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. முஸ்லிம்களை தடந்தெரியாமல் துடைத்து எறிந்திடவும் கண்மண் தெரியாமல் அவர்கள் மீது அநீதிகளை அரங்கேற்றவும் எதிரிகள் தயார் நிலையில் உள்ளனர். முன்னேறிய நாடுகளோ இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றன. அநீதிக்கு எதிராக அசைந்து கொடுக்கக்கூட அவை தயாரில்லை.

"வெற்றி என்பது வலிமையின் நியாயத்துக்கேயன்றி நியாயத்தின் வலிமைக்கு அல்ல" என்றாகிவிட்டது. இதை எதிர்கொள்ள அந்தப் பணங்கள் செலவிடப்பட வேண்டும் என்பது என் அவா!

*(இந்நூல் 1994 செப்டம்பரில் வெளியானது. கர்ளாவி அவர்களின் கருத்துக்களை அக்கால நிகழ்வுகளை மனதில் கொண்டு வாசிக்கவும்)*

கத்தார், எகிப்து, வளைகுடா நாடுகளில் நல்லுள்ளம் கொண்ட பலர் ஆண்டுதோறும் ஹஜ்ஜை நிறைவேற்றிட பேராவல் கொண்டுள்ளனர். அவர்களுள் சிலர் தொடர்ந்து நாற்பது ஆண்டுகளாக ஹஜ் செய்து வருகிறார்கள் என்பதை நானறிவேன். நண்பர்கள் கூட்டாளிகள் உறவினர்கள் என ஒரு பெரும் கூட்டத்தோடு இப்படிச் செல்கின்றனர்.

ஒருவருடம் நான் அவர்களிடம் கூறினேன்: "நான் இந்தோனேஷியாவிலுள்ள ஊருக்குச் சென்றிருந்தேன். கிறிஸ்தவ மத மாற்றக் கும்பல்கள் அங்கு படுபயங்கர வேலைகளைச் செய்து கொண்டிருப்பதை நேரில் நான் கண்டேன். கல்வி, சுகாதாரம், சமூகம் ஆகியவற்றை சீரமைத்திடும் அறக்கட்டளைகள் அங்கு உடனடியாக நிறுவப்பட வேண்டும். எனவே ஆண்டுதோறும் ஹஜ் செய்யும் நீங்கள் நூறு பேர் ஒரு நபருக்கு பத்தாயிரம் தந்தால் பத்துலட்சம் சேர்ந்துவிடும். கிறிஸ்தவ மத மாற்றத்துக்கு எதிரான மாபெரும் சேவைக்கு இது ஒரு வலிமையான விதை. இதை நாம் ஆரம்பித்தால் நம்மைப் பார்த்துப் பலரும் இது போல் செய்வார்கள். அந்த நன்மையும் நமக்குக் கிடைக்கும்" என்று சொல்லிப் பார்த்தேன்.

அதற்கு அவர்கள், "துல்ஹஜ் மாதம் வந்து விட்டாலே ஹஜ் செய்திட எங்கள் மனம் துடிக்கிறது. கட்டுக்கடங்காத ஆர்வம் எங்கள் உயிரோடு கலந்து விடுகிறது. ஹாஜிகளின் கூட்டத்தில் நாங்களும் கலந்திடுவதை பெரும் பாக்கியமாகக் கருதுகிறோம்" என்று கூறினர்.

எதற்கு எப்போது முன்னுரிமை தர வேண்டும் என்று ஒரு முஸ்லிம் தெரிந்து கொண்டால் அவருடைய ஈமான் சரியாக இருந்தால் அவருடைய ஞானம் தெளிவாக இருந்தால் பெரும்பாக்கியம் மிக்கசெயல் எது என்பதை அவர் உணர்ந்து கொள்ள முடியும்.

வேலை இல்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கலாம். கல்லாமை போக்கலாம். நோயாளிகளுக்கு சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யலாம். பசியைப் போக்கலாம். விரட்டப்பட்டவர்களை அரவணைக்கலாம். எவ்வளவோ பணிகள் உள்ளன.

நல்லுள்ளம் கொண்ட இளைஞர்கள் பலரை எனக்குத் தெரியும். மருத்துவம், பொறியியல், விவசாயம், இலக்கியம் உள்ளிட்ட உயர்கல்விகளைக் கற்று, தொழிற்கல்வி கலைக்கல்விகளை கற்று அவற்றில் பெரும் மதிப்பெண்களைப் பெற்றுத் தேறுகின்றார்கள். கல்லூரிகளிலிருந்து வெளியேறிய உடனேயே தாம் கற்ற துறைகளை ஒதுக்கிவிட்டு இஸ்லாமிய அழைப்பு, சீர்திருத்தம், சமூகப்பணி என்று முழுநேரமாக இறங்கி விடுகின்றனர். எந்தத் துறையில் அவர்கள் சிறப்புக் கல்வி பெற்றிருக்கிறார்களோ அதுவே ஒரு 'ஃபர்ளு கிஃபாயா' தான். அதாவது நம் சமுதாயத்திலுள்ள அனைவருமே அதைப் புறக்கணித்துவிட்டால் அனைவரும் குற்றவாளிகளாகிவிடுவார்கள் எனுமளவுக்கு அஃது ஒரு கடமையான துறைதான்.

அவர்கள் தமது துறையிலேயே அர்ப்பணிப்புடனும் மனத்தூய்மையுடனும் அல்லாஹ் விதித்த வரம்புகளை மீறாமலும் பணியாற்றி அதை (இபாதத்) வணக்கமாகவும் ஜிஹாதாகவும் ஆக்கிக் கொள்ள முடியும். எல்லா முஸ்லிம்களுமே தத்தமது தொழில்களை விட்டுவிட்டால் முஸ்லிம்களின் நலனை (அந்தத் துறையில்) யார் நிலைநாட்டுவது?!

அண்ணல் நபி-ஸல்- அவர்கள் இறைத்தூதராக அனுப்பப்பட்ட காலக் கட்டத்தில் நபித்தோழர்கள் பல்வேறு

**பண்ருட்டி, இந்திரா காந்தி சாலையில் 02-03-2012 அன்று மாலை 6 மணியளவில் பண்ருட்டி நகர அனைத்து முஸ்லிம்களின் சார்பாக, ஆப்கானிஸ்தானில் அமெரிக்க இராணுவம் முஸ்லிம்களின் வேதமாகிய திருக்குர்ஆனை எரித்ததை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது. இதற்கு அனைத்து மக்களும் ஆதரவளித்து திரளாக கலந்து கொண்டனர்.**

**முன்னிலை: அப்துர் ரஹீம், முஹம்மது ஈஸா, முஹம்மது இப்ராஹீம் மற்றும் பண்ருட்டி நகர முஸ்லிம்கள்.**

**துவக்கம்: அப்துல்லாஹ்**

**உரை: அப்துல் ஜலீல், அப்துல் காதர்-அன்வரி.**

**கண்டன உரை: முஹம்மது ஜஹீர்-மிஸ்பாஹி**

தொழில்களைச் செய்து கொண்டிருந்தனர். அவர்களில் யாரையும் தொழிலைவிட்டு விட்டு முழுநேர இஸ்லாமிய அழைப்பாளராக மாறிவிடும்படி நபி-ஸல்- கேட்டுக் கொள்ளவில்லை. ஒவ்வொருவரும் தமது வேலைகளையும் தொழில்களையுமே செய்து வந்தனர்.

ஹிஜ்ரத் (எனும் தியாகப் பயணம்) நடைபெறுவதற்கு முன்னரும் சரி நடைபெற்ற பின்னரும் சரி. எவரும் முழுநேர அழைப்பாளராக ஆகவில்லை. ஜிஹாதுக்கான அவசியம் நேர்ந்து, அணி திரளும்படி அழைப்பு விடுக்கப்பட்டால் அணி திரண்டனர். கூட்டம் சிறியதோ பெரியதோ, வலிமை அதிகமோ குறைவோ எதைப் பற்றியும் கவலைப்படாமல் அல்லாஹ்வின் பாதையில் தம் செல்வங்களையும் உயிர்களையும் அர்ப்பணித்திடப் புறப்பட்டனர்.

இங்கே ஒன்றை நான் நினைவு கூறுகிறேன். அது முஸ்லிம்களின் நகரம். அங்கே இரண்டு டாக்டர்கள் மட்டுமே உள்ளனர். ஒருவர் யூதர் மற்றொருவர் கிறிஸ்தவர். அந்த ஊரிலுள்ள முஸ்லிம் ஆண், பெண் அனைவருடைய உடல் சிகிச்சை, ஆரோக்கியம், மானம், ஆன்மா அனைத்தும் இவ்விரு டாக்டர்களின் கையில்தான் ஒப்படைக்கப்பட்டிருந்தது. காயம்பட்டவர் ஒளுவுக்கு மாற்றாக தயம்மும் செய்து கொள்ளுதல் நோன்பு நோற்க இயலாதவர் நோன்பை விட்டு விடலாம் என்பன போன்ற மார்க்கச் சட்டங்களுடன் தொடர்புடைய முடிவுகளும் அவர்களிடமிருந்தே பெறப்படுகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த ஊரிலிருந்து மார்க்கக் கல்வி கற்றிட கூட்டம் கூட்டமாக வந்தவர்களை (தம் கல்வி நிலையத்தில் சேர்த்துக் கொள்ளாமல்) திருப்பி அனுப்பி விட்டார்கள் பேரறிஞர் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள்.

அந்த ஊர் மக்களுக்கு தற்போது மார்க்கக் கல்வி கற்ற ஆலிம்களைவிட மருத்துவம் கற்ற டாக்டர்களே முதல் தேவை.

வேறு சிலரோ இஸ்லாத்துக்கு எதிராக நடக்கும் சதிகள் பற்றி இஸ்லாத்தின் மீது காழ்ப்பும் விரோதமும் கொண்டு அலையும் எதிரிகள் பற்றிக் கொஞ்சம் கூடக் கவலைப் படாமல் உள்மார்க்க விவகாரங்களைப் பெரிதாக்கி பெரும் போரை மூட்டி விடுகிறார்கள்.

அமெரிக்கா, கனடா, ஐரோப்பா போன்ற மேற்கு நாடுகளில் குடியுரிமை பெற்றும் சிறுபான்மையினராகவும் வாழ்ந்து வரும் முஸ்லிம்களுக்கோ கைக்கடிகாரத்தை வலதுகையில் கட்டுவதா இடதுகையில் கட்டுவதா என்பதுதான் பெரும் கவலைக்குரிய பிரச்சனையாக இருக்கிறது.

பேண்ட், சர்ட்-க்கு பதிலாக வெண்ணிறஆடை அணிவது சுன்னத்தா வாஜிபா?

பெண்கள் பள்ளிவாசலுக்குள் வருவது ஹலாலா ஹராமா?

நாற்காலியில் அமர்ந்து உணவுத்தட்டை மேஜை மீது வைத்து, கரண்டி, முள்கரண்டி வைத்துச் சாப்பிடுவது காஃபிர்களுக்கு ஒப்பான செயலா அல்லவா?

இது போன்ற நேரங்களை விழுங்குகின்ற சமுதாயத்தைக் கூறுபோடுகின்ற நம் முயற்சிகளையும் அர்ப்பணிப்புகளையும் வீணாக்குகின்ற அர்த்தமற்றவைகளையே செய்து கொண்டிருக்கின்றனர். இது

இப்போது பரபரப்பான
விற்பனையில்......
யூசுப் அல் கர்ளாவி யின்
நாம் பிரிந்து விடவேண்டாம்
முஸ்லிம்கள் 73 கூட்டங்களாக பிரிய மாட்டார்கள் என்று குர்ஆன், சுன்னா ஒளியில் நிரூபிக்கும் நூல்!
முஸ்லிம்கள் பிளவுபட குர்ஆனோ, ஹதீஸோ காரணமில்லை என்று விளக்கும் நூல்!!
முஸ்லிம்கள் ஒன்றுபடுவதற்கான காரணங்களையும், வழிமுறைகளையும், ஐயங்களையும் விவரிக்கும் நூல்!!!
விலை 175
இல்யாஸ் ரியாஜி அவர்களின்
இனிய தமிழ் நடையில்.......
வேர்கள் வெளியீட்டகம்
52/1, மண்ணடி தெரு, 4வது மாடி,
சென்னை.1, தொலைபேசி: 45566909

எதிரியின்றி நடக்கும் யுத்தம். எந்த லட்சியமுமற்ற வீண் வேலை.

இறை வணக்கத்தில் அதீத ஈடுபாடுகாட்டும் சில இளைஞர்கள் தம் தந்தையிடமும் தாயாரிடமும் சகோதர சகோதரிகளிடமும் முரட்டுத்தனமாகவும் கடினமாக நடந்து கொள்கின்றனர். ஏனிப்படி நடந்து கொள்கிறீர்கள் என்று கேட்டால் "அவர்களெல்லாம் தீனை (மார்க்கத்தை) விட்டு விலகிச் சென்று விட்ட பாவிகள்" என்று கூறுகின்றனர்.

அல்லாஹ் கூறுகிறான்: மனிதனுக்கு நாம் பெற்றோரிடம் அழகிய முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்று உபதேசம் செய்தோம். அவனின் தாய் பலஹீனத்தின் மேல் பலஹீனமாக இருக்க அவனை (கருவில்) சுமந்தாள். அவனுக்கு பால்குடி மறக்கடிக்க இரண்டு ஆண்டுகளாகின்றன. ஆகவே "நீ எனக்கும் உன் பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக. என்னிடமே திரும்பி வர வேண்டியதிருக்கிறது".

எது பற்றி நீ அறிந்திருக்க வில்லையோ அதை எனக்கு இணை வைக்கும்படி உன்னை அவ்விருவரும் வற்புறுத்தினால் அவ்விருவருக்கும் நீ கட்டுப்பட வேண்டாம். உலக (விஷய)த்தில் நீ அவ்விருவருடனும் அழகிய முறையில் கலந்துறவாடு (31:14,15).

இவ்வசனங்களில் அல்லாஹ் கூறுவதென்ன?

* பெற்றோருக்கு நன்றி செலுத்து.

* அவர்கள் இணை வைப்பவர்களாக இருப்பினும் சரி.

* உன்னையும் இணை வைப்பவனாக ஆக்கிவிட அவ்விருவரும் பெரும் முயற்சி (முஜாஹதா) செய்தாலும் சரி இதில் மட்டும் அவ்விருவருக்கும் கட்டுப்படாமல் இதர விஷயங்களில் அழகிய முறையில் கலந்துறவாடு என்கிறான். காரணம் படைத்தவனுக்கு மாறு செய்வதில் படைப்புகளுக்கு கட்டுப்படக் கூடாது. இது தவிர பெற்றோருக்குப் பணிவிடை செய்யாமல் ஒதுங்கியிருக்கவோ இந்தக் கடமையிலிருந்து தப்பிக்கவோ எந்த வழியையும் அல்லாஹ் வைக்கவில்லை.

ஆனால் இந்த இளைஞர்களோ பணிவிடை செய்வதில்லை என்பது மட்டுமல்ல. முரட்டுத்தனமாகவும் கூட நடந்து கொள்கின்றனர்.

இதுபோலவே ரத்தபந்தங்களிடமும் உறவுக்காரர்களிடமும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றும் அல்லாஹ் கூறியுள்ளான்:

அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். அவனைக் கொண்டே நீங்கள் ஒருவர் மற்றவரிடம் (உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள். இன்னும் உறவுகளை (த் துண்டிக்க) அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறான் (4:1)

இப்படியெல்லாம் அல்லாஹ் கூறியிருப்பதை வசதியாக மறந்து விடுகின்றனர். இது என்ன நியாயம்?


**வைகறை வெளிச்சம் இப்போது துபாயிலும்....**

**துபாய் வாசகர்கள்**
**வைகறை வெளிச்சம் மாத இதழை**
**பெற்றிட தொடர்பு கொள்ள வேண்டிய**

**தொலைபேசி எண் : +971551390923**
**சென்னை தொடர்புக்கு : 9444329594**

**வைகறை வெளிச்சம் மாத இதழில் விளம்பரம் செய்து பயனடையுங்கள்!**

| | |
|---|---|
| பின்அட்டை | ரூ 6000 |
| உள்பக்க அட்டை | ரூ 4500 |
| முழுப்பக்கம் | ரூ 1000 |
| அரைப்பக்கம் | ரூ 500 |
| விசிட்டிங்கார்டு அளவு | ரூ 250 |

## முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?-தொடர் 7

# ஆறாம் நூற்றாண்டில் இந்தியா

**பேரறிஞர் : அபுல் ஹசன் அலீ நத்வி,**
**மொழிபெயர்ப்பு : அஹ்மது ஜலாலுத்தீன் நத்வி.**

கி.பி. ஆறாம் நூற்றாண்டின் உதயப் பொழுதிலிருந்தே இந்தியா, ஒழுக்கம், மதம், சமூகம் ஆகியவற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வீழ்ச்சியுறத் தொடங்கி விட்டது என்று வரலாற்று ஆய்வாளர்கள் ஏகோபித்துக் கருத்துக் கூறியுள்ளனர்.


அந்தக் காலக் கட்டத்தில் பூமிப்பந்தின் பல்வேறு பாகங்களிலும் நிலவி வந்த ஒழுக்கச் சிதைவுகள் சமூகச் சீரழிவுகள் போன்றவற்றில் என்னைப் போன்ற எந்த நாட்டுக்கும் நான் சளைத்தவனல்ல என்று வீழ்ந்து கொண்டிருந்தது இந்தியா, மனிதர்கள் வாழும் இடங்கள் அனைத்தையும் ஒழுக்கக் கேடுகள் எனும் இருள் கவ்வியிருந்தது. அந்த இருளின் பெரும் பங்கை நான் எடுத்துக் கொள்வேன் என்று இந்தியா எடுத்துக் கொண்டது.

இதர நாடுகளை விட இந்தியா சமூகச் சீரழிவில் தனித்துவம் பெற்று நின்றது. இந்தியாவில் மட்டும் நிலவிய கொடூரங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். 1. எண்ணிலடங்கா தெய்வங்களை வழிபடும் பல தெய்வக் கோட்பாடு. 2. கட்டுக்கடங்காத காமக்களியாட்டம். 3. அநீதியான இனப்பாகுபாடு, கடுமையான சாதீய ஏற்றத் தாழ்வுகள்.

மூன்றும் இதர நாடுகளன்றி இந்தியாவில் மட்டுமே இருந்தன என்று கூறக்கூடிய அளவுக்கு இங்கே அதிகமாக இருந்தன. இவை மூன்றையும் இப்போது நாம் விரிவாகப் பார்க்கப் போகிறோம்.

### பல தெய்வக் கோட்பாடு

இந்தியாவில் சிலை வணக்கம் ஆறாம் நூற்றாண்டில் பல வடிவங்களைக் கண்டது. முப்பத்து மூன்று தெய்வங்கள் என்று வேதம் கூறியது. ஆனால் ஆறாம் நூற்றாண்டில் முப்பத்து முக்கோடி தேவர்கள் என்றானது மகிழ்ச்சியைத்தரும் பொருள்களையும் கடவுளாக்கினார்கள். சங்கடத்தைத் தரும் ஜடப்பொருளையும் கடவுளாக்கினாார்கள். வாழ்க்கைக்குப் பயன்படும் எல்லாச் சாதனங்களும் கடவுள்களாயின.



பேரறிஞர் அபுல் ஹசன் அலீ நத்வி

இப்படியாக சிலைகள், சிற்பங்கள் ஆண், பெண் தெய்வங்கள் என்று கடவுள்களின் எண்ணிக்கை எல்லை கடந்து போயிற்று எண்கணிதத்துக்குள் அடைக்கமுடியாத அளவுக்கு கடவுள்களின் கூட்டம் பெரிதாகிவிட்டது.

சரித்திர நாயகர்களை வணங்கினார்கள். சில நேரங்களில் சில நிகழ்வுகளில் சிலர் கடவுளின் அவதாரமாகி விடுகிறார்கள் என்று கூறி வீரர்களை வணங்கினார்கள்.

*மலைகளின் மீது சில தெய்வங்கள் தோன்றுகின்றன என்று கூறி மலைகளை வணங்கினார்கள். தங்கம் வெள்ளிச் சுரங்கங்களிலும் கடவுள் ஜொலிக்கிறார் என்று கூறி அவற்றையும் வணங்கினார்கள். 'மஹாதேவ்' என்ற தெய்வத்தின் தலையிலிருந்து தோன்றி வருகிறது கங்கையாற்றின் நீர் என்று கூறி கங்கை ஆற்றை வணங்கினார்கள்.*

*எழுதிடப் பயன்படும் எழுது கோல்களை (பேனாக்களை)யும் போர்க்கருவிகளையும் கூட வணங்கினார்கள். ஏன் இனப்பெருக்க உறுப்பான ஆண்குறியைக் கூட விட்டு வைக்கவில்லை. அதையும் வணங்கினார்கள். அது (லிங்கம்) ஒரு கடவுள் என்றார்கள். மிருகங்களும் கடவுள்கள்தாம் என்றனர். பசுமாடு பெரிய தெய்வம் என்றனர். சூரியன், சந்திரன் போன்ற கோள்களும் இன்னபிற அனைத்தும் கடவுளாகக் கருதி வணங்கப்பட்டன இந்தியாவில்.*

*மொத்தத்தில் இந்தியாவின் (இந்து) மதம் கட்டுக்கதைகள், புனைவுகள், மூட நம்பிக்கைகள், பாடல்கள் ஆகிய அனைத்தும் கலந்த கலவையாகவே இருந்தன. அவர்களுடைய ஐதீகங்களெல்லாம் சரியானவை என்பதற்கு எந்த ஆதாரத்தையும் அல்லாஹ் கூறவில்லை. எந்தக் காலத்திலும் நடுநிலையாகச் சிந்திக்கும் எவரும் சகித்துக் கொள்ளவே இயலாத அளவுக்கு இருந்தது இந்திய மதத்தின் நம்பிக்கைகள்.*

*இந்தக் காலக்கட்டத்தில் இந்தியாவில் சிலைவடிக்கும் தொழில் கொடி கட்டிப் பறந்தது. கி.பி. ஆறாம் ஏழாம் நூற்றாண்டுகளில் பலவகைச் சிலைகள் வடிக்கப்பட்டன. இதுபோல் இதற்கு முன் இருந்ததில்லை. அனைத்து ஜாதியினரும் சிலை வணக்கத்தில் ஈடுபட்டனர். அரசன் முதல் ஆண்டி வரை அனைவரும் சிலை வணங்கிகளாகவே இருந்தனர்.*

*புத்த மதமும் ஜைன மதமும் கூட தம் இருப்பைப் பாதுகாத்துக் கொள்வதற்காக சிலை வணக்கத்தை தமது மதத்தின் அங்கமாக்கிக் கொண்டன.*

*கி.பி. 630 முதல் 644 வரை இந்தியாவில் தங்கியிருந்த பிரபல உலகப் பயணி (சீனாவைச் சார்ந்த) ஹுவாங் சுவாங்க் அவர்கள் கி.பி. 606 முதல் 647 வரை இந்தியா ஆண்ட ஹர்ஷ் என்ற மன்னர் நடத்திய மாபெரும் உற்சவம் ஒன்றைப் பற்றிக் கூறுகிறார்.*

*"கனோஜ் என்ற இடத்தில் மாபெரும் உற்சவம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தார் மன்னர். இந்தியாவிலுள்ள முக்கிய மதங்களின் அறிஞர்கள் ஏராளமானோர் அதில் கலந்து கொண்டனர். ஐம்பது அடி உயரத்தில் ஒரு தூணை அமைத்து அதன் உச்சியில் கவுதம புத்தரின் தங்கச் சிலையை வைத்தார் மன்னர். இஃதன்றி புத்தரின் சிறிய சிலையை ஒரு தேரில் வைத்து அதனருகில் மன்னர் ஹர்ஷ் (ஹர்ஷவர்தன்) ஒரு குடையுடன் நின்று கொண்டிருப்பார். நட்பு அரசரான காம்ரூப் என்பவர் ஒரு பெரிய விசிறியை வைத்துக் கொண்டு வீசுவதுபோல் ஈ ஓட்டிக் கொண்டிருப்பார். (நூல்: ஹுவாங் சுவாங்கின் 'மேற்கு அரசு' எனும் பயணக் கட்டுரைத் தொகுப்பு)*

*அரச குடும்பத்தினரும் அரசனைச் சார்ந்து வாழ்ந்தோரும் எப்படி இருந்தார்கள் என்பதை அந்த சீனப் பயணி கூறுகிறார்: சிலர் சிவனை வணங்கினர். சிலர் புத்தர்களாக இருந்தனர் இன்னும் சிலர் சூரியனை சிலர் விஷ்ணுவை வணங்கிக் கொண்டிருந்தனர். ஒவ்வொருவரும் தனக்கென்று ஒரு கடவுள் வைத்துக் கொண்டனர். அல்லது எல்லாக் கடவுள்களையும் வணங்கினர் (ஆதாரம்: அதே நூல்).*

## கட்டுக்கடங்காத காமவெறி

*பண்டைய காலந்தொட்டே இந்திய சமூகமும் இந்திய மதமும் காமத்தில் தனித்துவம் பெற்றுத் திகழ்ந்துள்ளன. காமமும் இச்சையைத் தூண்டும் விஷயங்களும் உலகின் வேறெந்த மதத்திலும் இல்லாத அளவுக்கு இந்திய மதத்தில் முக்கிய அங்கம் வகித்தன.*

*உலகம் தோன்றியதற்கான காரணம் அதில் நிகழும் பிரதான சம்பவங்கள், கடவுள் பண்பின் உள்ளார்ந்த நிலை இவற்றைப் பற்றியெல்லாம் மதநூல்களும் மதவாதிகளும் பல தகவல்களை எடுத்துரைக்கின்றனர். ஆண் கடவுளும் பெண் கடவுளும் கலந்து உறவு கொண்ட கதைகள், மாண்புக்குரிய ஆலயங்களில் நடந்ததாகக் கூறும் சம்பவங்கள் இவற்றைக் கேட்போர் வெட்கத்தால் தம் செவிகளை அடைத்துக் கொண்டு முகத்தை மூடிக் கொண்டு ஓடிவிடுவார்கள். அவற்றில் அத்துணை ஆபாசங்கள்.*

ஆபாசங்கள் நிறைந்த இந்த நூல்களை பக்திப் பரவசத்துடன் திரும்பத் திரும்பப் படித்துக் கொண்டேயிருப்போரின் உள்ளங்களிலும் உணர்வுகளிலும் எப்படிப்பட்ட விளைவுகளை இது ஏற்படுத்தும் என்பதை சொல்லத் தேவையில்லை.

இது மட்டுமா? அவர்களின் பெரிய கடவுள் என்று கருதப்படும் (சிவன்) மஹாதேவனின் ஆண்குறியை அருவறுப்பான வடிவத்தில் வைத்து அதையும் வணங்கிக் கொண்டிருந்தனர். ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர் என நாட்டு மக்கள் அனைவரும் ஒன்று கூடி வணங்கி அதை வழிபட்டனர்.

இது மட்டுமா? இந்திய மதத்தின் ஒரு பிரிவினர் நிர்வாண ஆண்களை பெண்களும் நிர்வாணப் பெண்களை ஆண்களும் வணங்கி வந்திருப்பதாகவும் சில வரலாற்றாசிரியர்கள் கூறியுள்ளனர். (நூல்: சத்யரத் பிரகாஷ் பக்-344 - தயானந் சரஸ்வதி)

அமைதியைத் தேடி கோவில்களுக்கு வந்து செல்லும் பெண்களிடமும் இல்லற வாழ்வைத் துறந்து கோவில்களில் தஞ்சம் புகுந்திடும் பெண் சன்னியாசிகளிடமும் கெட்ட பூசாரிகளும் கோவில் காப்பாளர்களும் தவறாக நடந்து கொண்டனர் அப்பெண்களுக்கு பாலியல் தொந்தரவுகளைத் தந்தனர். பெரும்பாலான கோவில்கள் பாவிகள் தம் ஒழுங்கீனங்களை அரங்கேற்றிடும் அரங்கங்களாயின. தீயவர்கள் அங்கே தம் வேட்கையைத் தணித்துக் கொண்டனர். வணக்க வழிபாட்டுக்கென்றே கட்டியெழுப்பப்பட்ட ஆலயங்களின் கதியே இப்படி இருந்ததென்றால் மன்னர்களின் உப்பரிகைகளும் செல்வச் சீமான்களின் மாளிகைகளும் எப்படியிருந்திருக்கும் என்பதை வாசிப்போரின் கற்பனைக்கே விட்டு விடுகிறேன்.

மானக்கேடான அருவறுப்பான தீய செயல்கள் அத்தனையும் அங்கே தாராளமாய் நடந்தன. ஆண்களும் பெண்களும் அங்கே கலந்து விரவினர். போதை தலைக்கு ஏறிவிட்டால் வெட்கம் கவுரவம் எல்லாம் பரந்துவிடும். ஒழுக்கம் ஓடி ஒளிந்து கொள்ளும். நாணம் மறைந்துவிடும்.

இப்படித்தான் நாணங்கெட்ட செயல்களும் காம இச்சையும் நாடெல்லாம் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தன. ஆண் பெண் இரு பாலரும் ஒழுக்க வீழ்ச்சியில் கிடந்தனர்.

## சாதியப் பாகுபாடு

மனித மாண்பை மிகக் கோரமாக இழிவுபடுத்திடும் சாதியப் பாகுபாடும் இன ஏற்றத்தாழ்வும் வரலாற்றில் வேறு எந்த சமுதாயத்திடமும் இல்லாத அளவுக்கு இந்தியாவில் நிலவியது. இந்த சாதிய ஏற்றத்தாழ்வு மத அங்கீகாரத்துடனும் சமூக அங்கீகாரத்துடனும் பல்லாண்டு காலமாக மக்களை அடிமைப்படுத்தி வைத்திருந்தது. ஆரியத் திரிபுகளின் சிறப்புக்களையும் மேன்மைகளையும் பாதுகாத்திடவும் செய்யும் தொழிலையும் பிறந்த குலத்தையும் வைத்து மனிதர்களிடையே ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தவும் வேதகாலந்தொட்டே சாதியப் பாகுபாடுகள் தலை தூக்கிவிட்டன.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டு வாக்கில் இந்தியாவில் பிராமண நாகரிகம் நிலைபெற்றது. அதில் இந்திய சமூகத்துக்கென்று புதியதோர் அடையாளம் வைக்கப்பட்டது. அதில் அரசியல் மற்றும் சமூக விதிகள் வகுத்தளிக்கப்பட்டிருந்தன. நாடு முழுவதும் அதை மக்கள் ஏற்றுக் கொண்டதால் அதுவே எழுத்து வடிவில் அமைந்த சட்டமாகவும் மதமுடிவாகவும் ஆகிவிட்டது. அதுதான் “மனு சாஸ்திரம்” எனப்படுகிறது இப்போது.

நால்வகை வர்ணங்கள்

இந்த மனு சாஸ்திரம் இந்திய மக்களை நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தி வைத்திருந்தது.

1. பிராமணர்கள்: இவர்கள் ஆளும் வர்க்கம், மதத்தின் உரிமையாளர்கள் எனக் கருதப்பட்டனர்.

2. சத்திரியர்கள்: இவர்கள் போர் செய்திடப் பிறந்தவர்கள்.

3. வைசியர்கள்: விவசாயமும் வியாபாரமும் செய்திடப் பிறந்தவர்கள்.

4. சூத்திரர்கள்: பணிவிடை செய்திடப் பிறந்தவர்கள்.

கடவுள் இந்த உலகத்தில் நலனுக்காக இவ்வுலகம் சீராக இயங்குவதற்காக பிராமணர்களை தன் வாயிலிருந்து படைத்தான். சத்திரியர்களை தன்

புஜத்திலிருந்து படைத்தான். வைசியர்களை தொடையிலிருந்தும் சூத்திரர்களை காலிலிருந்தும் படைத்தான்.

ஒவ்வொரு சாதியினரும் என்னென்ன செய்திட வேண்டும் என்பதையும் கடவுளே நிர்ணயித்துள்ளான். வேதங்களைக் கற்றுக் கொடுப்பதும் கடவுள்களுக்கு நேர்த்திக் கடன்களை முன் வைப்பதும் தர்மங்களைப் பெற்றுக் கொள்வதும் பிராமணர்களின் வேலை.

மக்களைப் பாதுகாப்பதும் தர்மம் கொடுப்பதும் நேர்த்திக்கடன்களை முன் வைப்பதும் வேதம் கற்பதும் சத்ரியர்களின் பணி. இச்சைகளை அடக்கிவாழ்வதும்.

கால்நடைகளை மேய்ப்பதும் அவற்றைப் பராமரிப்பதும் வேதம் படிப்பதும் விவசாயம் வியாபாரம் செய்வதும் வைசியர்களின் வேலை.

மேற் கூறப்பட்ட மூன்று பிரிவினருக்கும் பணிவிடை செய்வது மட்டுமே சூத்திரர்களின் பணி. இது தவிர வேறு வேலைகளை இவர்கள் செய்திடக் கூடாது (ஆதாரம்: மனு சாஸ்திரம் முதல் அத்தியாயம்).

## பிராமணர்களின் சிறப்புக்கள்

இந்த மனு சாஸ்திரம் பிராமணர்களுக்கு பல சிறப்புக்களையும் உரிமைகளையும் வழங்கி அவர்களைக் கடவுளுடன் இணைக்கிறது.

பிராமணர்கள் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த படைப்புக்கள். இதரப் படைப்புக்களை ஆளப் பிறந்தவர்கள். இந்த உலகில் உள்ள அனைத்தும் பிராமணர்களுக்கே சொந்தம். எல்லாப் படைப்புக்களிலும் மேன்மக்கள் பிராமணர்களே. பூமியின் தலைவர்களும் அவர்களே, என்கிறது மனு. (ஆதாரம்: மனு சாஸ்திரம், அத்தியாயம் ஒன்று)

சூத்திரர்கள் அனைவரும் பிராமணர்களின் அடிமைகள் என்பதால் சூத்திரர்களின் செல்வங்களையெல்லாம் பிராமணர்கள் தம் விருப்பப்படி அபகரித்துக் கொள்ளலாம் தவறில்லை. ஏனெனில் அடிமைகளின் செல்வங்கள் எஜமானுக்குரியவை தானே.! (மனு சாஸ்திரம், அத்தியாயம் எட்டு).

புனித வேதமான ரிக் வேதத்தை மனனம் செய்துள்ள பிராமணர் அப்பழுக்கற்றவர். தம் செயல்களாலும் பாவங்களாலும் மூன்று உலகையும் அவர் அழித்தாலும் சரிதான் (மனு, அத்தியாயம் ஒன்பது).

நாட்டில் எவ்வளவு பெரிய நெருக்கடி, பஞ்சம் ஏற்பட்டாலும் பிராமணர்கள் மீது வரி விதிக்கக் கூடாது அரசன். அதே நேரத்தில் ஒரு பிராமணன் கூட பசியால் செத்தான் என்ற நிலையும் வரக்கூடாது. (மனு, அத்தியாயம் ஒன்பது).

மரண தண்டனைக்குரிய குற்றத்தை மற்ற சாதியினர் செய்துவிட்டால் அவர்களைக் கொல்ல வேண்டும். பிராமணர்கள் மரண தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்து விட்டால் அவர்களின் தலைமுடியை சிரைப்பதைத் தவிர வேறு தண்டனை தந்திட நீதிபதிக்கே உரிமையில்லை. (மனு, அத்தியாயம் இரண்டு).

வைசியர்கள் சூத்திரர்களைவிட சத்திரியர்கள் உயர்ந்தவர்கள் தான் எனினும் பிராமணர்களைவிட பல படிகள் கீழே இருப்பவர்களே. பிள்ளையை விட தந்தைதான் உயர்ந்தவன் என்பது போல் நூறு வயதைக் கடந்த சத்திரியனை விட பத்து வயதை எட்டிய பிராமணனே உயர்ந்தவன் (மனு, அத்தியாயம் பதினொன்று).

## தாழ்த்தப்பட்டவர்கள் மீதான இழிவு

மிருகத்தை விட மட்டமாக நாயினும் கீழாக இந்திய சமூகத்தில் சூத்திரர்கள் இழிவுபடுத்தப்பட்டனர் இதை மதமும் சமூகமும் அங்கீகரித்தன. இஃதன்றி, பிராமணர்களுக்கு சேவகம் செய்வது சூத்திரனுக்குக் கிடைத்த பாக்கியம். நற்கூலியும் பலாபலனையும் அடைந்திட இதைவிட சிறந்தவழி சூத்திரனுக்கு இல்லை. எனகிறது மனு (அத்தியாயம் பதினொன்று).

சூத்திரர்கள் செல்வங்களைச் சேகரிப்பதோ சொத்துக்கள் வைத்திருப்பதோ பிராமணர்களை மனம் புண்படச் செய்யும் என்பதால் அவ்வாறு சூத்திரர்கள் நடந்து கொள்ளக் கூடாது. என்கிறது மனு சாஸ்திரம் (அத்தியாயம் பத்து).

பிராமணனை கம்பாலோ கையாலோ ஒரு சூத்திரன் தாக்கினால் சூத்திரனின் கை துண்டிக்கப்பட வேண்டும் கோபத்தில் காலால் உதைத்தால் கால் வெட்டப்பட வேண்டும். பிராமணனுக்குச் சமமாக

**நாய், பூனை, தவளை, பல்லி, காகம், ஆந்தை ஆகியவற்றைக் கொன்றால் என்ன பரிகாரமோ அதுதான் சூத்திரன் கொல்லப்பட்டதற்குப் பரிகாரம் .**

அவனருகில் ஒரு சூத்திரன் அமர்ந்து விட்டால் சூத்திரனின் அமர்விடத்தில் (பின்பக்கத்தில்) சூடு போட்டு நாடு கடத்த வேண்டும். இதை அரசன் செய்ய வேண்டும். (மனு, அத்தியாயம் பத்து).

பிராமணனைத் தொட்டாலோ திட்டினாலோ சூத்திரனின் நாக்கை முழுவதுமாக வெட்டி எறிய வேண்டும். பிராமணனுக்குக் கற்றுக் கொடுக்கும் அளவுக்கு எனக்கு ஞானம் உள்ளது என்று ஒரு சூத்திரன் கூறினால் சூடான எண்ணெய் அவன் வாயில் ஊற்ற வேண்டும்.

நாய், பூனை, தவளை, பல்லி, காகம், ஆந்தை ஆகியவற்றைக் கொன்றால் என்ன பரிகாரமோ அதுதான் சூத்திரன் கொல்லப்பட்டதற்குப் பரிகாரம் . (ஆதாரம்: R.C. Dutt. 342 - 343)

## இந்துச் சமூகத்தில் பெண்கள் நிலை

இந்துச் சமூகத்தில் பெண்கள் அடிமைகளாகவே நடத்தப்பட்டார்கள். சூதாட்டத்தில் தன் மனைவியை பந்தயப் பொருளாக வைத்து சூதாடித் தோற்றுள்ளான் அவள் கணவன். ஒரு பெண்ணுக்கே பல கணவன்மார்கள் என்ற இழிநிலை கூட இருந்துள்ளது (Source: R.C. Dutt. P.331)

கணவன் இறந்துவிட்டால் மனைவி மறுமணம் செய்திட முடியாது. இழிவுக்கும் அவமானத்துக்கும் ஆட்பட்டு தன்னுள் தானே புதைந்து கிடப்பாள். இறந்துபோன தன் கணவனின் குடும்ப உறுப்பினர்களுக்கு அடிமைச் சேவகம் செய்து கொண்டிருக்க வேண்டும். இதெல்லாம் அவள் கணவனின் மரணத்துக்குப் பின் உயிர் வாழ்ந்திட அனுமதிக்கப்பட்டால் தான்.

இறந்துபோன கணவனின் உடல் எரிக்கப்படும் அந்தத் தீயிலேயே தானும் விழுந்து மாய்ந்து இந்த உலகின் இழிவிலிருந்தும் அவமானத்திலிருந்தும் தப்பிக்காமல் வாழ்ந்து கொண்டிருந்தால்தான். இழிவோடு வாழ்வதா? நெருப்பில் வீழ்வதா? இவை தவிர மூன்றாவது ஒரு முடிவு பெண்ணுக்கு இல்லை.

(சதி என்றும் உடன்கட்டை என்றும் பெயர் கூறப்படும் இந்த அநீதி அக்கால இந்திய சமூகத்தில் மனைவி தன் கணவனுக்குச் செய்யும் மரியாதை என்றும் மனைவியின் கடமை என்றும் கருதப்பட்டது. உயர்சாதியினர் இதை ஒரு மேன்மை மிக்க செயல் என்று கருதிச் செய்தனர். இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சி வந்தபோது முஸ்லிம் ஆட்சியாளர்கள் தலையிட்டு இத்தீய பழக்கத்தை நிறுத்திட அரும்பாடுபட்டதில் 'சதி'யின் எண்ணிக்கை குறைந்தது என்கிறார் ஃபிரான்ஸ் நாட்டைச் சார்ந்த உலகப் பயணி டாக்டர் பிரீட்டர் அவர்கள். பின்னர் இங்கிலாந்து அரசு இதை முழுவதுமாக நிறுத்தியது - மூல நூலின் அடிக்குறிப்பு).

ஃபிரான்ஸ் நாட்டைச் சார்ந்த ஸாயித் அல் அந்துலுசி என்பவர் (பிறப்பு: 462 கி.பி.) தாம் எழுதியுள்ள 'தபகாத்துல் உமம்' எனும் நூலில் பக்கம் 11 ல், "ஞானச் சுரங்கம், நீதியின் ஊற்று, அரசியல் நீரோடை, அறிவில் சிறந்தோர், ஞானத்தில் சிறந்தோர் வாழும் பூமி" என்று இந்தியாவை புகழ்ந்தேற்றுகிறார்.

ஒரு காலத்தில் இப்படி நிலத்தின் செழிப்பிலும் அறிவின் எடுப்பிலும் ஓங்கி நின்ற இந்தியா, வரலாறு கண்ட எந்த சமுதாயத்துடனும் ஒப்பிடமுடியாத அளவுக்கு இழிந்த அறியாமையின் வேட்டைக் காடாக, தரந்தாழ்ந்த இணைவைப்பு முரட்டுத்தரமான அரக்கத்தனம் சமுக அநீதி ஆகியவை அரங்கேறும் மேடையாக மாறிவிட்டது.

இதற்கெல்லாம் காரணம் சத்திய மார்க்கத்துடன் எவ்வித தொடர்பையும் இநதியா வைத்துக் கொள்ளவில்லை. சன்மார்க்கத்தின் அடிப்படைகள் அங்கே பாழ்பட்டுக் கிடந்தன. மதவாதிகள் சன்மார்க்கத்தைச் சிதைத்திருந்தனர்.

பொது மக்கள் சிற்றின்ப வேட்கையைத் தணிப்பதிலும் மனோ இச்சைகள் படி வாழ்வதிலும் பேரின்பம் கண்டிருந்தனர். வெறும் யூகங்களும் மன விருப்பங்களுமே மார்க்கம் என்றாகியிருந்தது இந்தியாவில்.

இதுவே இந்தியா சீரழிந்திடக் காரணம்.

- தமிழ்வடிவம் - இல்யாஸ் ரியாஜி.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

# பஷீருல் உலூம் அரபிக் காலேஜ்

காஜாமலை திருச்சி-2 போன்: 9790797635. 9894442333 .9786606661

## அன்புடையீர்: அஸ்ஸலாமு அலைக்கும்(வரஹ்)

குடும்பத்தில் 10 நபரை சுவனத்திற்கு அழைத்துச்செல்ல உங்களுக்கான ஓர் அரிய வாய்ப்பு

நவீனகால கல்விப்புரட்சிக்கேற்ப ஷரீஅத்தின் வட்டத்திலிருந்து சற்றும் விலகாமல் உருவாக்கப்பட்ட பள்ளிப்படிப்புடன் கூடிய மதரஸா

5ம்வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை அல்ஸாதிக் மெட்ரிகுலேஷன் பள்ளியில் முழு நேரப் படிப்புடனே குர்ஆனையும் மனனம் செய்து ஹாபிழ் ஆக ஓர் அரிய வாய்ப்பு.

இதமான இஸ்லாமிய சூழ்நிலையில் பாதுகாப்பான சுற்றுச் சூழல் ஆரோக்கியமாக அமைந்துள்ள இடம்..

தமிழகத்தின் தலைசிறந்த மார்க்க அறிஞர்கள் பேராசிரியர்களின் ஆலோசனையும் கண்காணிப்பும் ஒருங்கே பெற்றதுடன் கல்வித்தரமும் ஒழுக்கமும் உருவாக்கிட கனிவும் கண்டிப்பும் கூடிய ஆசிரியர்கள், மினரல் வாட்டர், தேவைக்கு வெந்நீர், ஏசி அறை தரமான உணவு மருத்துவ வசதியும் குறைந்த கட்டணத்தில் சிறப்பாக அளிக்கப்படுகிறது.

கல்வித்தகுதி : குர்ஆன் நன்கு பார்த்து ஓத தெரிந்திருப்பது மிக அவசியமாகும்.

மௌலவி ஆலிம் பாஜில் 5 வருட பாடத்திட்டத்துடன் படிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் 10ம் வகுப்பு தேர்ச்சிபெற்றவர்கள் சேர்க்கப்பட்டு 12 ம் வகுப்பு தேர்ச்சி பெற வைத்த பிறகு BA, B.COM, BBA, BCA படித்திடவும் ஆவன செய்யப்பட உள்ளது.

தமிழ் ஆங்கிலம் அரபி உருது பார்ஸி ஆகிய மொழிகளில் தேர்ச்சியுடையவர்களாக உருவாக்கப்பட உள்ளது

குறிப்பு: நேரில் அல்லது அஞ்சல் வழியாக ரூ 100 செலுத்தி 10.5.2012 தேதிக்குள் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளவும். பூர்த்தி செய்த விண்ணப்பங்களுடன் 23.5.2012 அன்று நேரில் நடைபெறும் நுழைவுத்தேர்வின் தகுதிக்குப்பிறகு கல்லூரியில் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள்

*ஒழுக்கம் சார்ந்த உலகவியல் கல்வி*

*மறுமை சார்ந்த சுவனக்கல்வி*

*இரண்டும் சேர்ந்த உயரிய கல்வி*

# தலைநகர் டெல்லியை இராணுவம் முற்றுகை இட்டதா?

அந்த செய்தி நாட்டையே ஓர் உலுக்கு உலுக்கிற்று! அது, நமது தலைநகர் டெல்லியை நமது இராணுவமே முற்றுகை இட்டதா? இன்னும் விரிவாகச் சொன்னால் நமது இராணுவம் ஓர் ஆட்சி கவிழ்ப்புக்கு முயற்சி செய்ததா? - என்பதே அந்தச் செய்தி.



பாமரர்களும் கேட்கும் கேள்வி, இராணுவ ஆட்சி நம்மை நெருங்குகின்றதா?

இத்தனைக்கும் காரணமாக அமைந்தது டெல்லியிலிருந்து வெளிவரும் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" என்ற தொன்மைமிக்க நாளேடு தனது ஏப்ரல் 4, 2012 இதழில் அதிகாலையில் வெளியிட்டச் செய்திதான்.

அந்தச் செய்தியில், இந்த வருடம் ஜனவரி பதினாறாம் நாள் (ஜனவரி 16, 2012) காலையில் நமது இராணுவத்தின் இரு பிரிவுகள் மிகவும் வேகமாக, டெல்லியை நோக்கி நகர்ந்தன.

இந்த இராணுவப் பிரிவுகள் டெல்லிக்கு முன்னாலும் பின்னாலும் 150 கிலோ மீட்டருக்கு அப்பால் முகாமிட்டிருந்தவை. ஒரு பிரிவு ஹிஸார் HISAR (ஹரியானா)விலிருந்தது. இன்னொரு பிரிவு ஆக்ராவில் முகாமிட்டிருந்தது. ஹிஸாரும் - ஆக்ராவும் இரு வேறு திசைகளில் இருக்கின்றன. ஆக்கிராவுக்கும் டெல்லிக்கும் ஏறத்தாழ 150 கிலோ மீட்டர் தூரம்.

ஹிஸ்ஸார் ஆக்ராவை விட டெல்லிக்கு சற்று பக்கத்தில் இருக்கின்றது.

இந்த இரு இராணுவப்பிரிவும் டெல்லியை நோக்கி, அதிரடியாக நகர்ந்தன என்பதை நமது உளவுத்துறை கண்டுபிடித்து நமது இராணுவ தலைமையகத்திற்கு சொல்லுகின்றன. அல்லாமல் அரசுக்கோ - இராணுவ அமைச்சகத்திற்கோ இராணுவம் சொல்ல வில்லை.

நமது அரசுக்கு குறிப்பாக 'MOD-Ministry of Defence' என்ற பாதுகாப்பு அமைச்சகத்தின் செயலாளருக்கும் தகவல் சொல்லாமல் இராணுவத்தின் எந்தப் பிரிவும், தங்களது பாசறையிலிருந்து நகரக்கூட கூடாது என்பது விதி. இந்த விதி இதுவரை முறையாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது.

1984-இல் சீக்கியப்படைகள், ஒரு சிப்பாய் கலகத்தை நடத்தியதால், இந்த விதிகள் இன்னும் இறுக்கமாய்ப் பின்பற்றப்பட்டு வந்தன. ஆனால் அதையும் மீறி 16.1.2012இல் இராணுவம் நகர்ந்திருக்கின்றது.

உளவுத் துறைதான் அதை அமைச்சகத்திற்கு சொல்லி இருக்கின்றது (ஆதாரம் இந்தியன் எக்ஸ்பிரஸ் (டெல்லி) ஏப்ரல் 4, 2012 - முதல் பக்க கட்டுரை). இராணுவம் டெல்லியை நோக்கி நகர்ந்த போது நமது பாதுகாப்பு செயலாளர் சசிகாந்த் ஷர்மா நம் நாட்டில் இல்லை. அவர் மலேசியா சென்றிருந்தார்.

உடனேயே நமது பாதுகாப்பு செயலாளர் நம் நாட்டுக்கு வரவழைக்கப் பட்டார். அவர் மலேசியா சென்றிருந்த பணிகளை அப்படியே விட்டுவிட்டு ஓடோடி வந்தார்.

## அபார உத்தி

அவர் மலேசியாவிலிருந்து டெல்லி வருவதற்குள் இந்த இராணுவப் பிரிவுகள் டெல்லிக்குள் புகுந்துவிடாமல் தடுப்பதற்கு ஒரு புதிய உத்தியைக் கையாண்டார்கள் நமது உள்துறை அதிகாரிகள். அந்த உத்தி, டெல்லிக் காவல்துறையினருக்கு Terror Alert - என்ற தீவிரவாத தாக்குதல் அதிரடி செய்தி ஒன்றை அனுப்பினர். டெல்லிக்குள் புகுந்திடும் எல்லா வாகனங்களையும் முழுமையான கூர்மையான சோதனைகளுக்குள்ளாக்கும்படி அந்தச் செய்தியில் குறிப்பிட்டார்கள்.

இப்படி ஆணை இட்டதன் நோக்கம், டெல்லிக்குள் வரும் லட்சக்கணக்கான, வாகனங்களை முற்றாக சோதனை செய்வதால் போக்குவரத்து ஸ்தம்பிக்கும், வாகனங்கள் ஊர்வதில் தாமதம் ஏற்படும். இதனால் பாய்ந்துவரும் இராணுவம் டெல்லிக்குள் புகுந்திட பல மணி நேரங்கள் வெளியே காத்து நின்றிட வேண்டியது வரும்.

இந்தக் கணக்கு சரியாக வேலை செய்தது. மலேசியாவிலிருந்து இராணுவ செயலாளர் சசிகாந்த் ஷர்மா வந்தார். தலைமை செயல் இராணுவ தளபதி A.K.சவ்திரி இடம்: உடனேயே அந்தப் படைப்பிரிவுகள் தங்களுடைய பாசறைகளுக்குத் திரும்பிட வேண்டும் என உத்தரவிட்டார். படைப்பிரிவுகள் பாசறைக்குத் திரும்பின. இந்த A.K. சவ்திரி (Lt. Gen) தான் DIRECTOR GENERAL MILITARY OPERATIONS:(DGMO) இராணுவ இயக்கத்திற்கான முதன்மை இயக்குனர்.

## இராணுவத்தின் பதில்

இராணுவத் தளபதியிடம் இதற்கான விளக்கம் அதாவது படைப்பிரிவுகள் பாசறைகளிலிருந்து வெளிப்போந்து தலைநகரை நோக்கி நகர்ந்ததற்கான காரணம் (விளக்கம்) வேண்டும் எனக் கேட்டார். ஒரு சாக்குப் போக்கை விளக்கமாக எழுதித் தந்தார்கள். அதாவது வழமையான பயிற்சிகளுள் ஒன்று தான் அது என்பதே. அதை பாதுகாப்புத்துறை செயலாளர் சசிகாந்த் ஷர்மா வாங்கி வைத்துக் கொண்டார். அவர் அன்று இரவு நெடுநேரம் வரை தன் அலுவலகத்திலேயே இருந்தார். விவகாரம் ஜனவரி 16/17 ஆம் நாளோடு முடிந்தது. முழு செய்தியும் அமுங்கியும் விட்டது.

ஆனால் இந்த மொத்த விவகாரமும், சுமார் நான்கு மாதங்களுக்குப் பின்னர் (ஜனவரி 6 முதல் ஏப்ரல் 4 வரை) தான் வெளியானது. இந்தியன் எக்ஸ்பிரஸ் தனது டெல்லி பதிப்பின் முழு பக்கத்தில் வெளியிட்டது. இதன் பின்னரே நாடு பரபரப்பானது.

## இராணுவ முற்றுகை செய்தி ஏன் தாமதமாக வந்தது?

இப்போது ஒரு வினா: ஏன் ஜனவரி 16 ஆம் நாள் நடந்த நிகழ்வு நான்கு மாதங்கள் கழிந்து அவைக்கு வருகின்றது.

இதில்தான் இந்தியன் எக்ஸ்பிரஸ் காட்டிய பொறுமையைப் பாராட்டிட வேண்டியதுள்ளது.

இராணுவத்தின் அசைவை திடுதிப்பென்று செய்தியாக வெளிவிடுவதும், நமது கற்பனைகளைக் கொட்டி கட்டுரைகளை வெளியிடுவதும் பொறுப்பற்ற செயல். அப்படிச் செய்தால் இராணுவத்தின் மீதான நம்பிக்கையை மக்கள் இழந்து விடுவார்கள். மக்கள் நாம் இராணுவ ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டு விடுவோமோ என்ற பீதிக்கும் உள்ளாக்கப்படுவார்கள். அரசுக்கும் அது ஒரு பெரிய 'இடியாக' அமையும்.

அதே நேரத்தில் இராணுவம் ஒரு முற்றுகைக்கும், ஓர் ஆட்சி கவிழ்ப்பிற்கும், முயற்சிகளை மேற்கொண்டிருக்குமேயானால் அதனை நாட்டை ஆள்வோருக்கும் குடி மக்களுக்கும் தெரிவித்து விடுவதே சிறந்தது என்ற எண்ணங்கள், இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழின் மனதை பல நாட்களாக அலைக்கழித்திருக்கின்றன.

இந்த எண்ணங்களை அந்தப் பத்திரிகையில் கட்டுரையை எழுதிய, ஷேகர் குப்தா (SHEKHER GUPTA), ரிட்டு சாரின் (RITU SARIN), பிரனாப் சாமன்ந்தா (PRANAB SAMANTA), அமிர்சிங் (AMIR SINGH) ஆகியோர் அந்தக் கட்டுரையின் முதல் வரியிலேயே குறிப்பிடுகின்றார்கள். "**இன்னும் தெளிவாக - "டெல்லியை இராணுவம் கைப்பற்றிட முனைந்ததா? என்ற வினாவை நாங்கள் ஒரு குழுவாக, ஆய்வு செய்தோம். இராணுவ அதிகாரிகளிடமும் பேசினோம். அதன் பின்னரே இந்தக் கட்டுரையை இடம் பெற செய்தோம். இந்த ஆய்வுக்காக**

The Indian EXPRESS
www.indianexpress.com
JOURNALISM OF COURAGE
Daily from AHMEDABAD | CHANDIGARH | DELHI | JAMMU | KOLKATA | LUCKNOW | MUMBAI | NAGPUR | PUNE | VADODARA
LATE CITY | NEW DELHI | WEDNESDAY | APRIL 4 | 2012 | 20+6 (NEWSLINE) PAGES | Rs. 4.00



## Go after Saeed: India to Pakistan

Govt determined not to allow US move on JuD chief cloud Zardari visit P3

EDIT& OP-ED PAGES 10-11

**Letter to Sonia Gandhi**
by Pratap Bhanu Mehta

Decision on Saeed welcome, India must watch Pak dynamic

**SPORT**

## IPL begins, CSK vs MI today

PAGE 19





# The January night Raisina Hill was spooked: Two key Army units moved towards Delhi without notifying Govt

## Army called it routine fog-time exercise but so deep is distrust, so many questions around the movement, that alarm bells rang at highest levels in Govt



PTI

Defence Minister A K Antony and Army Chief Gen. V K Singh at the new gravestone of Field Marshal Sam Manekshaw in Ooty on Tuesday.

**SHEKHAR GUPTA with RITU SARIN & PRANAB DHAL SAMANTA**
NEW DELHI, APRIL 3

THIS is a story you would tell with extreme care and caution. But it so starkly characterises the current state of top-level politico-military relations that it is a folly to keep it under wraps, as the entire establishment has tried to do for a full 11 weeks now.

It has also taken this team of *The Indian Express* reporters that long to establish the story and the dramatic developments during, say, about 18 very difficult hours on January 16-17 earlier this year.

While many, including the spokesmen for the defence establishment, say it was much ado about nothing *(see box)*, it is a story of a most unusual night when Raisina Hill was spooked as never before in peace time.

Essentially, late on the night of January 16 (the day Army Chief General V K Singh approached the Supreme Court on his date of birth issue), central intelligence agencies reported an unexpected (and non-notified) movement by a key military unit, from the mechanised infantry based in Hisar (Haryana) as a part of the 33rd Armoured Division (which is a part of 1 Corps, a strike formation based in Mathura and commanded by Lt Gen. A K Singh) in the direction of the capital, 150 km away.

Any suspicion was still considered much too implausible, but lookouts were alerted as a routine step. This was part of a protocol put in place in June 1984 when some mutineers from Sikh units had moved towards the capital in the wake of Operation Bluestar.

The lookouts confirmed the movement of what looked like a sizeable unit. It was soon identified as an entire unit of Mechanised Infantry, with its Russian-made Armoured Fighting Vehicles (AFVs), carried on 48 tank transporters. The movement was towards the capital, which was odd.

No such thing had been notified. The Army Day celebrations had ended just the previous day (January 15).

It was still a cause for curiosity and some confusion — more than much concern — because, over the decades, New Delhi has come to be totally relaxed and trustful of the apolitical and professionally correct nature of its military leadership.

The situation changed rapidly, though. Reports came in of yet another military movement "towards" Delhi. This unit was identified as a large element of the airborne 50 Para Brigade based at Agra.

The lookouts were activated south of Delhi as well and the column was identified.

By this time, both columns were being tracked and "watched". A bemused establishment raised an alert of sorts. The Defence Minister was informed. Immediately, the Centre put in motion an old contingency plan to delay just such a move.

It issued a terror alert with instructions to police to carefully check all vehicles on the highways leading to Delhi. The objective was to slow down traffic. The Prime Minister was informed at the crack of dawn on January 17. Quiet checks carried out on the location and status of key formations and their commanders, particularly in the northwestern region, revealed nothing abnormal at all. Defence Secretary Shashi Kant Sharma was asked to cut short his visit to Malaysia. He returned.

After the briefing, he opened his office late at night and asked Lt Gen. A K Choudhary, Director General Military Operations, to see him and explain what was going on. Gen. Choudhary, it seems, knew about the move of the Paras (the Para Brigade is controlled directly by the DGMO) and said it was a routine exercise.

He was asked to return with full facts about the mechanised unit. This he did soon enough. The explanation was still the same: the Army was carrying out exercises to check its ability to make quick deployments of key units during fog. He was told to send the units back immediately. Both formations were halted, and sent back within hours.

The mechanised unit, sources said, had parked itself at an industrial park near Bahadurgarh abutting West Delhi's Najafgarh. The Paras were staying put in the barracks of an artillery regiment — 79 Medium —not far from Palam.

The Army's explanation that it was all a simple fog-time exercise was then viewed with scepticism at the highest level. The question: Why was the well-set protocol, that any military movement, at any time, in the NCR (National Capital Region) has to be pre-notified to MoD (Ministry of Defence) not followed?

> **PM was informed at the crack of dawn on January 17. Quiet checks carried out on the location and status of key formations and their commanders, particularly in the northwestern region, revealed nothing abnormal.**

The Army's justification for the specific movements did sound plausible though. The mechanised units, they said, were checking out their ability to move and deploy rapidly in fog, should a contingency arrive. It could not have driven westwards (towards Ferozepur or Fazilka) as that would have alarmed Pakistan since the move had not been notified to them.

There was a more elaborate explanation for the paratroopers' movement. The mandated time for the Agra-based Paras to get airborne in an emergency is just two hours. It was simpler when they were transported by aircraft based "in situ", at the same military complex in Agra.

The new designated transport for them is the faster, bigger and brand new C-130J Hercules. The IAF has based the C-130s at Hindon, across the Yamuna, east of Delhi. Since fog lifts in Agra much later (11.30 am) than at Hindon (8.30 am) in January, the Army was checking out the possibility of transporting the paratroopers to Hindon by road to "marry" them with the C-130s, rather than wait for the planes to land at Agra, and thereby save time.

In the process, the Army said, they discovered many glitches. These are now being ironed out. For example, it was found that the shoulder-fired missiles, standard equipment with Para units, were stored not in Agra, as decided several years earlier, but at Bharatpur as was the case originally.

So the columns were delayed by that detour and the stop at Bharatpur to pick up their missiles, and thereby also forced to take a longer route to Delhi. The good lesson learnt: all of the Paras' equipment must now be based where their home is, at Agra.

But this was questioned too. Did the mechanised units have to come as far as the outskirts of Delhi to check out their readiness? And Hindon is a long distance from Palam/Gurgaon. Even on a reasonable day, an Army convoy might take longer moving from here to Hindon given the snarls on Outer Ring Road and NH-24, than if only it had crossed the Yamuna at Agra itself and driven through Uttar Pradesh, parallel to GT Road. Why was the IAF not informed of this exercise? Again, the Army's explanation is they did not want to hold an elaborate exercise involving the IAF etc, or cause alarm.

The government also noted the fact that the C-130s were not even in Hindon then. They were in Jaisalmer, rehearsing at their staging base for the Republic Day flypast. Yet another reason some in the government were curious was that between Army Day (January 15), and Republic Day (January 26), when so many Army units are involved in parades, such exercises are rare, particularly around the capital.

*The Indian Express* has had detailed conversations with key people and sources at the very top of the political, civil and military leadership. There is unanimity over General V K Singh's impeccable reputation as a sound, professional soldier, earned over nearly 42 years of distinguished service to the Army. Nobody is using the "C" word to imply anything other than "curious". All else is considered an impossibility.

But so strained has the political-military relationship been these weeks, that nothing is easily dismissed as a routine misdemeanour. The timing — the Chief's petition on his date of birth was filed on the morning of January 16 — did not help.

> **There is unanimity over Gen. Singh's impeccable reputation as a professional soldier, earned over nearly 42 years of distinguished service. Nobody is using the 'C' word to imply anything other than 'curious'.**

Sources speak of confusion and unease in the government. To be fair, the MoD's considered view now seems to be that it was a false alarm, caused by some non-adherence to Standard Operating Procedures (SoPs) by the Army and an alarmist civil/political reaction on a particularly distrustful day.

We learn, however, as a consequence, that certain "important correctives" have been put in place. Incidentally, the Home Ministry has turned down the Army Headquarters' recommendation (subsequent to the events of January 16/17) to appoint Lt Gen. Choudhary as D-G Assam Rifles, the paramilitary force it controls.

These are the bare facts of an unusual set of events. It is too early to answer all the 'hows, whys and the what-nexts' of this. Or to say whether it was an avoidable case of neurosis the Indian establishment is — mercifully — not familiar with.

These facts may indeed be officially denied for now. But these will be debated for a long time, forcing the UPA to introspect on its mismanagement of the delicate civil-military relationship, bruised as it is now by charges of corruption, bribes and bribe offers and indiscipline. These will also have a bearing on the future course of higher defence organisation and control in India.

**(AJMER SINGH contributed to this report)**





### WHAT HAPPENED

- On Jan 16, an entire unit of mechanised infantry based in Hisar with its fighting vehicles began moving towards Delhi. It parked near Najafgarh
- Sizeable section of the Agra-based 50 Para Brigade also moved to near Palam
- Both were stopped and ordered to be moved back

### WHAT ARMY SAYS

- These were exercises to check effectiveness in fog
- Troops moved towards Delhi, not outward, westward since Pakistan hadn't been notified
- The Paras were being moved to check out possibility of their "marrying" with the C-130s in Hindon

### UNANSWERED QUESTIONS

- Why wasn't Ministry of Defence notified?
- Did the units have to come so far towards Delhi?
- Why was the IAF not informed?

### BASELESS REPORTS, SAYS MINISTRY OF DEFENCE

**Defence Ministry spokesperson Sitanshu Kar:**

"Such reports are completely baseless and we categorically deny the same."

### ARMY DOES NOT DENY MOVEMENT: ROUTINE TRAINING

**Maj Gen S L Narasimhan, Additional Director General, Public Information,** did not deny the movements, but said these were routine.

"These were routine training at the formation-level to check the effectiveness of mobilisation as per Standard Operating Procedure of local formations. Almost all units of the Army carry out a number of such training at different times of the year."

- Asked if mobilisation from the two cantonments were authorised, Narasimhan said: "Such routine training does not need authorisation."
- Why were the troops suddenly called back? "Once the effectiveness of the mobilisation was checked, the troops were called back as per Standard Operating Procedure."
- When was the last time that troops were moved on this scale? "Even formation-level (higher than this scale) mobilisation practices are carried out routinely."
- Asked if the Ministry of Defence sought written reports from the commanders, Narasimhan said: "No such explanation has been asked by the MoD."

**நாங்கள் ஏறத்தாழ நான்கு மாதங்கள் குறிப்பாக 11 வாரங்கள் எடுத்துக் கொண்டோம். எங்களுக்கு நன்றாகத் தெரியும் இது ஒரு பெரும் பரபரப்பை ஏற்படுத்தும். இது எல்லா நிலைகளிலும் விவாதங்களுக்கு உள்ளாகும். இன்றைக்கும், நாளைக்குமல்ல இனிவரும் பல வருடங்களுக்கு இஃது விவாதிக்கப்படும். அதனால் மிகவும் கவனமாகவே இதனை எழுதுகின்றோம்"** *என்றெல்லாம் பொட்டில் அறைந்தாற்போல் கூறியுள்ளார்கள் கட்டுரையாளர்கள்.*

*ஆதாரம் முதல் பத்தி. இந்தியன் எக்ஸ்பிரஸ் (டெல்லி) கட்டுரை:* The January Night Raisina Hill was Spooked: Two key army units, moved towards Delhi without notifying Govt.

*ஆதலால், வைகறை ஆசிரியர் குழுமம், இதனை இந்தியன் எக்ஸ்பிரஸ்-சின் பொறுப்பற்ற செயலாகப் பார்க்கவில்லை மாறாக, நாட்டின் இராணுவம் இனிவரும் நாளில் டெல்லியைக் கைப்பற்றி ஆட்சியை அமைத்திட வழிவிடக்கூடாது என்ற உயர்ந்த எண்ணத்தில் எழுதப்பட்டதாகவே, எடுத்துக் கொள்கின்றது.*

## இந்தியன் எக்ஸ்பிரசுக்கு ஏற்பட்ட சந்தேகம்:

*ஜனவரி 16ஆம் நாள், இராணுவத்தின் இரண்டு படைப்பிரிவுகள் டெல்லி நோக்கி வேகமாக நகருவதற்கு எந்த காரணமுமில்லை என்பது இந்தியன் எக்ஸ்பிரசின் முதல் முடிவு. ஏனெனில் ஜனவரி 15ஆம் நாள்தான்.* Army Day Celeberations *இராணுவ நாள் விழாக்கள் நடந்து முடிந்திருந்தன. இதற்காகப் பல நாள்கள் பயிற்சிகள், தயாரிப்புகள் என ஈடுபட்டதால், இராணுவத்தினரும் அதிகாரிகளும் சற்று ஓய்வெடுக்க விரும்பும் நாள். அன்று ஏன் இராணுவத்தின் இரண்டு பிரிவுகள் டெல்லியை நோக்கி வேகமாக நகர்ந்திட வேண்டும்?... குறிப்பாக பாதுகாப்பு செயலாளர் வெளிநாடு சென்றிருக்கும்போது.*

*இந்த வினாவை இன்னும் வலுப்படுத்துவது, இவர்கள் அடுத்து ஒரு அணியாக பல தயாரிப்புகளை மேற்கொள்ள வேண்டியதிருக்கும் குடியரசு தினத்திற்காக! (அது ஜனவரி 26-இல்).*

*இப்படி முன்னும் பின்னும், விழாக்கள் இருக்கும்போது இராணுவத்தின் இரண்டு பிரிவினர் ஏன் டெல்லியை நோக்கி அதிக வேகத்தில் நகர்ந்திட வேண்டும்?*

*இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுவின் இந்த வினாக்களைத் தொடர்ந்து, இன்னொரு நிகழ்வு.*

*ஹரியானாவிலிருந்து டெல்லி நோக்கி வந்த இராணுவ பிரிவு, அதி நுட்பம் வாய்ந்த பிரிவு. போரில் பயன்படுத்தப்படக் கூடிய கனரக வாகனங்களைக் கொண்டது. இவை ரஷ்யாவில் தயாரிக்கப்பட்டவை. இராணுவப் பிரிவின் ஒரு பகுதிக்கு மட்டும் தான் இந்த வாகனங்கள் சொந்தம். இந்தப் போர் வாகனங்களை* 'AFVs' ARMOURED FIGHTING VEHICLES. *ஆயுதங்கள் பொருத்தப்பெற்ற சண்டையிடும் வாகனங்கள் என்றழைக்கின்றார்கள்.*

*ஒவ்வொரு இராணுவ வண்டியும் 48 பீரங்கிகளைச் சுமப்பன.*

*இராணுவத்தின் இந்தப் பிரிவை* UNIT OF MECHANISED INFANTRY: *"இயந்திர மயமாக்கப்பட்ட காலாட்படை" என அழைக்கின்றார்கள்.*

*போர்களம் நோக்கி மட்டுமே நகர்ந்திட வேண்டிய இந்த இயந்திர மயமாக்கப்பட்ட காலாட்படை, ஏன் டெல்லியை நோக்கி நகர்ந்திட வேண்டும்?*

*இதன் நோக்கம் சந்தேகமானதே!*

*இதனை மெத்த ஆதங்கத்தோடு, ஆங்கிலத்தில் இப்படிக் குறிப்பிடுகின்றார்* (The Movement Towards Capital was odd) (Source: Indian Express: 4/4/2012. front page para 6).

*இதுபோன்ற வினாக்களுக்கு முறையான விடை இராணுவ அதிகாரிகளிடமிருந்து கிடைக்கவில்லை இதனால் தான் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஓர் ஆய்வை நடத்திற்று. அதனால் தான் நாட்டு மக்களின் பார்வைக்கும் நாட்டை பரிபாலனம் செய்பவர்களின் பார்வைக்கும் இதனை கொண்டுவந்தது.*

## இராணுவத்தின் விளக்கம்:

*இராணுவ தளபதிகள், மூச்சுவிடாமல் ஒரே பதிலைத்தான் சொல்லி வருகின்றார்கள். அது, பனி மூட்டத்தில் நமது படைகள் போதிய வேகத்தில் நகர்ந்திட முடியுமா? என்பதை சோதிக்கவே, அன்று அந்த*

நடவடிக்கை. இதை ஒரு வழக்கமான பயிற்சி என்றும் சொல்லி வருகின்றார்கள்.

அன்று இராணுவ செயலாளர் “DEFENCE SECRETARY” இடமும் அதையே சொன்னார்கள். பின்னர் தங்களிடம் பேசிட வந்த இந்தியன் எக்ஸ்பிரஸ் கட்டுரையாளரிடமும் அதையே சொன்னார்கள்.

இராணுவத்தின் இந்த விளக்கத்தை அன்றே நமது மேல்மட்ட அதிகாரிகளே ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களே அதை சந்தேகக்கண் கொண்டே பார்த்தார்கள் Viewed with skepticism என்றே இந்தியன் எக்ஸ்பிரஸ் கூறுகின்றது.

ஆனாலும் ஒரு பெரிய கேள்வி தொக்கி நிற்கின்றது.

அதாவது ஓர் அழுத்தமான - இறுக்கமான விதி ஒன்று இராணுவ ஒழுங்குடன் நம் நாட்டில் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. அது, தலைநகர் டெல்லியை நோக்கி எந்தப் படையாவது நகர்ந்திட வேண்டும் என்றால் அது முறையான அரசின் அனுமதியின் கீழ் தான் நகர்ந்திட வேண்டும் என்பதே! அந்த விதி ஜனவரி 16ஆம் நாள் நகர்ந்த படைகளால் ஏன் கடைபிடிக்கப்படவில்லை. இதற்கு இராணுவம் இன்றளவும் எந்த திருப்தியான பதிலையும் சொல்லவில்லை.

இனி இந்தப் படைகள் 150 கிலோ மீட்டம் தூரம் வரை வந்துதான் தங்கள் திறமையை சோதிக்க வேண்டுமா? அதுவும் டெல்லி நோக்கித்தான் வந்திட வேண்டுமா?

இது வழக்கமான ஒரு பயிற்சிதான் என்றால் முக்கிய பயணமாக மலேசியா சென்றிருந்த இராணுவ தளபதி ஏன் வரவழைக்கப்பட வேண்டும். அவர் ஏன் நடு இரவுக்கு பின்னும் தனது அலுவலகத்தில் இயங்கிட வேண்டும்.

## இராணுவத்தின் தலைமைக்கும் - அரசியல் தலைமைக்குமிடையே நிலவும் உறவு:

இது அண்மையில் மிகவும் நெருடல் நிறைந்ததாக ஆகி விட்டது. குறிப்பாக தளபதி A.K.சிங் - இன் பிறந்த தேதி எது என்ற பிரச்னை. இதில் ஜனுவரி 16ஆம் தேதி தான் தளபதி A.K.சிங் நமது உச்ச நீதிமன்றத்தை அணுகுகின்றார். அன்று இந்த இராணுவ முற்றுகை நடக்கவுமிருந்திருக்கின்றது.

ஆனால், இந்த இரண்டு நிகழ்வுகளுக்கும் எந்தச் சம்மந்தமுமில்லை என்கின்றது இந்தியன் எக்ஸ்பிரஸ், வேறு நோக்கம் இதற்கிருக்கலாம் என்கிறது கட்டுரை. உச்சநீதிமன்றத்தில் தீர்வு தேடிடும் ஒருவர் வேறு தீர்வுகளை தேடமாட்டார் என்பதே பொது அறிவு.

உண்மையில் இந்தியன் எக்ஸ்பிரஸ் கட்டுரை ஒரு முன்னெச்சரிக்கை என்பதை அரசு உணர்ந்திட வேண்டும். நிச்சயமாக நமது அரசு அதை உணர்ந்திருக்கும் என்றே நாம் நம்புகின்றோம்.

அதே நேரத்தில் அரசுக்கிருக்கும் நெருக்கடியையும் நம்மால் உணர முடிகின்றது. உண்மையிலேயே அங்கே ஓர் ஆட்சி கவிழ்ப்பிற்கு ஏற்பாடுகள் நடந்திருந்தால் அதை அரசு வெளியே சொல்ல முடியாது. காரணம் மக்கள் நெஞ்சுடைந்து போவார்கள். ஆனால் அரசு நிச்சயமாக உள்ளுக்குள் தேவையான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கும் என்றே நாம் நம்புகின்றோம். அது நடக்கவில்லை என்றால் உண்மையிலேயே நாம் ஓர் ஆபத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றோம் என்றே பொருள்.

## அபிநவ் பாரத்-இன் சதியா?

நம் நாட்டில் ஓர் உண்மை முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது. அது சங்கப்பரிவாரத்தின், அவதாரங்களுள் ஒன்றான அபிநவ் பாரத்தின் நடவடிக்கைகள்.

இந்த அபிநவ் பாரத், என்ற அமைப்பு தேச தந்தை காந்தியைக் கொலை செய்த கோட்சேயின் குடும்பத்தினரால் நடத்தப்பட்டு வருகின்றது.

இவர்கள் இந்தியாவை இந்து ராஷ்டிரமாக ஆக்கிடும் சதி திட்டம் ஒன்றை தீட்டி முழுவேகத்தில் அதனை செயல்படுத்தி வருகின்றார்கள். அபிநவ்பாரத், நமது அரசியல் நிர்ணயச்சட்டத்தை எடுத்து வீசி விட்டு அந்த இடத்தில், இந்துத்துவ சட்டம் ஒன்றை யாத்து தயாராக வைத்திருக்கின்றது.

அது “இந்துராஷ்டிராவின் அரசியல் சாசனம்” அதில் ஜனநாயகம் மக்கள் பிரதிநிதித்துவம் என்பவையெல்லாம் இல்லை. மக்களால் இப்போது தேர்ந்தெடுக்கப் பெற்று,






நடந்து கொண்டிரும் ஆட்சியையும் அரசையும் கவிழ்த்துவிட்டு ஒரு சர்வாதிகார ஆட்சியை நிலை நாட்டிட திட்டம். நீண்ட நெடுநாள்களாக இதற்கான முயற்சிகள் தயாரிப்புகள் இவற்றை செய்து வருகின்றார்கள், செயல்பட்டு வருகின்றார்கள்.

இந்து ராஷ்டிராவுக்கான தலைமைச் செயலகம் ஒன்றை யூதர்களின் ஆட்சி நடக்கும் இஸ்ரேலின் நகர் டெல் அவீவில் அமைத்துள்ளார்கள்.

இந்து இராஷ்டிராவுக்கான தேசிய சின்னம் ஒன்றும் புனையப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

அவர்கள் அந்த அரசை "THE HINDU RASHTRA- In Exile" வெளியிலிருந்து யெல்படும் இந்துராஷ்டிரம் என்று அழைத்து வருகின்றார்கள்.

இந்தியாவில் இந்து ராஷ்டிராவை அவர்கள், ஒரு இராணுவப் புரட்சியின் வழி கொண்டு வந்திட திட்டம் தீட்டியுள்ளார்கள்.

அபிநவ் பாரத்-ஐ சார்ந்தவர்கள் இராணுவப் புரட்சி எனப் பேசிக் கொண்டு வாளாவிருக்கவில்லை. மாறாக அதற்கான ஆக்கப்பூர்வமான பயிற்சி கூடங்களை நடத்தி வருகின்றார்கள். அவற்றுள் தலையாயது மராட்டிய மாநிலத்தில் நாக்பூர் மற்றும் நாசிக் ஆகிய இடங்களில் நடந்துவரும் போன்சாலா.

## (பௌசர்) போன்சாலா இந்து இராணுவப்பள்ளி BHONSALA MILITARY SCHOOL - தீவிரவாதம்

இந்த போன்சாலா இந்து மிலிட்டரி பள்ளியில் இந்து இளைஞர்களைச் சேர்க்கின்றார்கள். அவர்களுக்கு மூளைச் சலவைச் செய்யப்பட்டு இந்துத்துவா தலையில் ஏற்றப்படுகின்றது. பின்னர் இராணுவப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. பயிற்சிகளில் தேறிவருபவர்கள் இராணுவத்தில் சேர்க்கப்படுகின்றார்கள். நமது இராணுவத்தில் பணியாற்றுபவர்களே இந்தக் கல்விக்கூடத்தில் பாடம் பயிற்றுவிக்கின்றார்கள். இராணுவத்தில் ஓய்வு பெறுபவர்கள், இதில் பெருவாரியாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றார்கள்.

இந்த இந்து இராணுவ பள்ளியை தொடங்கியவர், அப்போதைய இந்து மகாசபையின் தலைவர் டாக்டர் மூஞ்சே என்பவர்தான். ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பைத் தொடங்கியவர்களில் இவரும் ஒருவர். இராணுவப் பள்ளிக்காக நிறுவப்பட்ட அமைப்பே CENTRAL HINDU MILITARY EDUCATION SOCIETY (1937) "மத்திய ஹிந்து இராணுவப் பயிற்சி சங்கம்".

இந்த வருடம் இந்த கல்வி நிலையம் தனது 75ஆவது ஆண்டை எட்டுகின்றது. இதற்கு சிறப்பான விழாக்கள் எடுக்கப்பட வருகின்றன.

நமது இராணுவத்தில் Lt.Colonel. லெப்டினட் கலோனலாக இருந்த, பிரசாந்த் புரோகித் இந்த பள்ளிக்கூட வளாகத்தில் தான் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு குண்டுகளைச் செய்யவும், முஸ்லிம்கள் குழுமுமிடத்தில் வைத்திடவும் பயிற்சிகளைத் தந்தான்.

இதே புரோகித் தான் இந்து ராஷ்டிராவை அமைத்திட நமது இராணுவ செலவிலேயே இஸ்ரேல் சென்று வந்தான்.

இந்த போன்சாலா இந்து இராணுவப் பள்ளியை போலவே மகாராஷ்டிரா மிலிட்டரி ஃபவுண்டேஷன் என்ற இராணுவப்பள்ளியும், இந்து இளைஞர்கள் வழி இராணுவத்தை இந்து மயமாக்கி வருகின்றது.

இந்த உண்மைகளையெல்லாம் முன்னாள் மராட்டிய மாநில தீவிரவாத

தடுப்புப்படையின் தலைவர் தியாகி ஹேமந்த் கர்கரே கண்டுபிடித்தார். இந்து ராஷ்டிரா ஒன்று இராணுவப் புரட்சி மூலம் நமது நாட்டில் ஏற்படும் ஆபத்து இருக்கின்றது என்பதைக் கண்டுபிடித்து விட்டதாலேயே அவர் கொலை செய்யப்பட்டார்.

தான் கொலை செய்யப்படுவதற்கு முன், இந்த உண்மைகளையெல்லாம் உள்துறை அமைச்சரிடம் ஹேமந்த் கர்கரே கூறி இருக்கின்றார். இதற்கு உள்துறை அமைச்சர் சொன்ன பதில், “இதை யாரிடமும் சொல்ல வேண்டாம்” என்பதே.

ஆனால் பிற்றை நாள்களில் இந்துத்துவ வாதிகள் கைது செய்யப்படுவதற்குப் பதிலாக, ஹேமந்த் கர்கரே கொலை செய்யப்படுகின்றார்.

இந்த உண்மைகளையெல்லாம் “கர்கரேயைக் கொலை செய்தது யார்? இந்திய தீவிரவாதத்தின் உண்மைமுகம்” என்ற நூலில் விளக்கமாக முன்னாள் மராட்டிய காவல்துறை அதிகாரி எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள் பதிவு செய்துள்ளார்கள்.

இவற்றையெல்லாம் நீதிமன்றங்கள் வரை கொண்டு சென்றுள்ளார்கள். எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்களும், பிஹார் மாநில முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இராதாகாந்த் யாதவ் அவர்களும் இப்போது மும்பை உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கும், உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கும் நடைபெற்றுவருகின்றன.

ஆனால் இந்த எச்சரிக்கைகளை யெல்லாம் நமது மத்திய அரசு முற்றாகப் புறக்கணித்து வருகின்றது.

## இராணுவப் புரட்சியைத் தடுக்க அரசு செய்ய வேண்டியது

இராணுவத்தில், இந்து இராணுவ பயிற்சி கூடங்களில் பயிற்சி பெற்றவர்கள், எத்தனை பேர் இருக்கின்றார்கள், என்ற கணக்கொன்று எடுக்கப்பட வேண்டும். அவர்களை வெளியேற்றிட வேண்டும்.

திட்டமிட்டு சிறுபான்மையினரை குறிப்பாக முஸ்லிம்களை இராணுவத்திலிருந்து வெளியே வைத்திட மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளை முறியடிக்க வேண்டும்.

இராணுவத்தில் எத்தனை முஸ்லிம்கள் இருக்கின்றார்கள் என்ற கணக்கெடுப்பை முறியடித்த ராணுவ அதிகாரிக்கும் இந்துத்துவ வாதிகளுக்கும் தொடர்பிருந்தது என்ற உண்மை பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. இதுவே ஒரு பெரும் ஆபத்து. இதனால் இராணுவம் ஒரு தலைபட்சமாக ஆகிவிடாமல் காப்பாற்றிட வேண்டும்.

இந்துத்துவ அமைப்புகள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாகத் தடைசெய்ய வேண்டும். இனிமேலும் இதில் புதைந்து கிடக்கும் ஆபத்தை புறக்கணிக்கக்கூடாது.

## எச்சரிக்கை:

சங்கபரிவாரத்தினர் அரசியல் வலுவை இழந்து வருகின்றார்கள். இதற்கு உத்திரப் பிரதேச தேர்தல், குஜராத் இடைத்தேர்தல் கன்னட இடைத்தேர்தல் இவையெல்லாம் சாட்சி. இனி அவர்களுக்கு அரசியல் எதிர் காலமில்லை.

அதேபோல் நாட்டில் நடந்த பல்வேறு குண்டுவெடிப்புகளிலும் இதுவரை **16** குண்டு வெடிப்புகளை நடத்தியது சங்கப் பரிவாரத்தினர் தாம் என்பது நிரூபிக்கப்பட்டு சங்கப்பரிவாரத்தின் அடிமட்ட தொண்டர்களிலிருந்து, செயலாளர்கள் முழுநேர ஊழியர்கள் இவர்களெல்லாம் கைதாகி வருகின்றார்கள்.

அபிநவ் பாரத்-ஐ சார்ந்த புரோகித், பிரக்யா சிங் தாக்கூர் ஆகியோர் சிறையில் விபரீத எண்ணங்களோடு உலவிக் கொண்டிருக்கின்றார்கள். விரக்தியில் உழலுகின்றார்கள்.

தங்கள் விரக்திக்கு மருந்தாக தீர்வாக அவர்கள் தாங்கள் ஏற்கெனவே திட்டமிட்ட, இராணுவப் புரட்சியை நிகழ்த்திடலாம். - ஆகவே அரசு அதிக கவனத்துடன் செயல்பட வேண்டும்.

Source : THE INDIAN EXPRESS - NEW DELHI: 4/4/2012.

Who killed Karkare: The real face of Terrorism in India By S.M. Mushrif : Vergal Publication

MG 1 - 15 April: 2012

***

# இந்தியன் எக்ஸ்பிரஸ் கட்டுரைக்கு எதிர் கருத்துக்கள்

நமது இராணுவ அமைச்சர், இது வழக்கமாக மேற்கொள்ளப்படும் பயிற்சி எனக் கூறினார். அத்தோடு இராணுவத்தின் தேசப்பக்தியைக் குறைத்துக் காண்பது தவறு என்றார்.

ஒரு பொறுப்பான இராணுவ அமைச்சர் இப்படித்தான் பேசிட வேண்டும். ஆனால் நமது இராணுவ அமைச்சர் இதற்கு முன்னால் எப்போதெல்லாம் இராணுவம் பயிற்சியின் ஒரு பகுதியாக ஏக காலத்தில் டெல்லியை நோக்கி நகர்ந்தது என்பதைக் குறிப்பிடவில்லை.

எல்லோரும் ஓர் உண்மையை ஒத்துக்கொள்கின்றார்கள். அஃது, இராணுவம் பாதுகாப்புத்துறை செயலாளருக்கும், இராணுவ அமைச்சருக்கும் தகவல் தராமல்தான் டெல்லியை நோக்கி நகர்ந்தது என்பது தான் அந்த உண்மை.

ஒரு கட்டுப்பாடான ஒரு இராணுவம் இப்படி நடந்திடலாமா? அதற்கு தரும் விளக்கம் என்ன?

அதேபோல் "National Capital Region" என்ற தலைநகர் பகுதியை நோக்கி முன் அனுமதி இல்லாமல் இராணுவம் நகரக் கூடாது என்ற விதி ஒரு இராணுவ கட்டுப்பாடு கடைபிடிக்கப்பட்டு வருகின்றது.

இதையும் இராணுவம் மீறி இருக்கின்றது. இதற்கும் தெளிவான விளக்கங்கள் இல்லை.

இராணுவம் சொல்லும் விளக்கங்களுக்கு சப்பைக்கட்டு கட்டிட வந்த பத்திரிக்கைகளும் இந்த விஷயத்தை தொடவில்லை.

இதனால் இராணுவம் விதிகளுக்கெதிராகவே பாசறைகளிலிருந்து வெளிப்போந்து தலைநகரை நோக்கிப் பாய்ந்திருக்கின்றது.

## பத்திரிக்கைகள்:

இந்து பத்திரிக்கை இப்படியொரு கட்டுரையை எழுதும் உரிமை; இந்தியன் எக்ஸ்பிரசுக்கு உண்டு என எழுதும் உரிமையை அங்கீகரிக்கின்றது.

ஆனால் தொடர்ந்து கட்டுரையை எழுதியவர்கள் எல்லாவற்றையும் மிகைப்படுத்தி எழுதிவிட்டார்கள். இது அடாத செயல் எனச் சாடுகின்றது.

இஃது முன்னுக்குப் பின் முரணான கருத்து. இது இந்து பத்திரிகையின் தலையங்கம் 5/4/2012இல் வந்திருக்கின்றது. தலையங்கத்தில் இந்து பத்திரிக்கை இப்படி தடுமாறியதே இல்லை இதுவரை.

'தி இந்து' பத்திரிக்கை, தனது தலையங்கத்தில் இராணுவ தளபதி வந்துதான் படைகளை மீண்டும் பாசறைக்குள் அனுப்பிட வேண்டும் என்றில்லை. இஃது மிகைப்படுத்திய எழுத்து எனக் கூறிற்று.

இதில் "தி இந்து" பத்திரிக்கை எந்த ஆதாரத்தையும் காட்டிடவில்லை, அன்றைய தினம் பாதுகாப்புச் செயலாளர் மலேசியா சென்றிருந்தார் என்பதையோ, அவர் திடுதிப்பென இந்தியா வரைவழைக்கப் பட்டார் என்பதையோ அவர் வந்துதான் இராணுவத்தை மீண்டும் பாசறைக்கு அனுப்பினார் என்பதையோ இந்து பத்திரிக்கை மறுக்கவில்லை.

சாதாரணமாக இந்து பத்திரிக்கை இதுபோன்ற விவகாரங்களில், இராணுவ தளபதி பாதுகாப்பு செயலர், அமைச்சர் ஆகியோரின் கருத்துக்களைக் கேட்டறிந்து, அவற்றையும் தான் எழுதிய கட்டுரையில் வெளியிடும். அப்படி எதையும் இந்த விவகாரத்தில் சொன்னதாகத் தெரியவில்லை.


## டெக்கான் கிரானிக்கிள் தலையங்கம்

இந்த தலையங்கமும், இராணுவத்தின் கூற்றுக்கு வக்காலத்து வாங்கி வாதாடி இருந்தது. ஒரு இராணுவ புரட்சி, ஆட்சிக் கவிழ்ப்புக்கு முயற்சி என்பவையெல்லாம் மிகைப்படுத்துதல். ஓர் இராணுவப் புரட்சிக்கு ஒரு கொள்கையின் கீழ் ஒன்றுபட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தது.

ஆனால் டெக்கான் கிரானிக்கிள் பத்திரிகைக்கு இந்து இராஷ்டிராவைப் பற்றியோ, ஓர் இந்து ராஷ்டிராவுக்காக

தொடர்ச்சி 42ம் பக்கம்

# மருத்துவம்



எப்போதாவது கடுமையான வலி ஏற்பட்டு அவசரம், வேலைப்பளு அல்லது மருத்துவச் செலவு காரணம் அதை அலட்சியப் படுத்தியிருக்கிறீகளா? ஜாக்கிரதை! சில வலிகள் பெரும் ஆபத்தின் எச்சரிக்கைகளாக வரும். அப்படிப்பட்ட வலிகளை மருத்துவர்கள் அடையாளம் காட்டியிருக்கிறார்கள் தொடர்ந்து படியுங்கள்.

## 1. மிகமோசமான தலைவலி

தலைவலிக்கு பல எளிய காரணங்கள் இருந்தாலும் சில ஆபத்தான நோய்களும் காரணமாக இருக்கலாம். வெறும் காய்ச்சல் ஜல தோசத்தாலும் தலவலி வரும். ஆனால் வாழ்க்கையிலேயே மறக்க முடியாத தலைவலி, மூளையில் இரத்தப்போக்கு, மூளைக்கட்டி போன்ற நோய்களாலும் ஏற்படலாம். காரணம் தெரியாத கடுமையான் வலிக்கு உடனே மருத்துவப் பரிசோதனை செய்து காரணம் தெரிந்து கொள்வது உயிர் காக்கும்.

## 2. நெஞ்சு, தொண்டை, தாடை, தோள்கள், கைகள், வயிறு ஆகியவற்றில் ஏற்படும் வலி அல்லது சுகவீனம்

பொதுவாக நெஞ்சு வலி என்றாலே ஹார்ட் அட்டாக் தான் நினைவுக்கு வரும். ஆனால் பல வேளைகளில் வலி வருவதில்லை ஒரு மாதிரியான நெஞ்சடைப்பு போலத்தான் ஹார்ட் அட்டாக் வரும். இதய நோயாளிகள் இதயத்தில் ஏதோ அழுத்துவது போல் உணர்வார்கள். நெஞ்சைக் கையால் பிடித்துக் கொண்டே நெஞ்சைப் பிசைவது போல் உணர்வார்கள். ஒரு யானை நெஞ்சில்

ஏறி உட்கார்ந்திருப்பதாக கூறுவார்கள். நெஞ்சு, தொண்டை, தாடை, இடது தோள் அல்லது கை வயிறு ஆகியவற்றில் வலி ஏற்பட்டு அதோடு மயக்கம் போல் வந்தால் அது இதயநோயாக இருக்கலாம்.

அனேக மக்கள் இதை சாதாரண நெஞ்செரிச்சல் என் அலட்சியப்படுத்தி ஆபத்தில் மாட்டிக் கொள்வார்கள். தாமதிக்காமல் மருத்துவ உதவி தேடவும். மேற்கண்ட வலியையும் அது உண்டான சூழலையும் பார்க்க வேண்டும்.

இத்தகைய வலி அதிக உற்சாகம் அல்லது அதிக உணர்ச்சி வசப்படுவதால் ஏற்படலாம். உதாரணமாக தோட்ட வேலை செய்யும் போது அத்தகைய வலி ஏற்பட்டு, சற்று ரெஸ்ட் எடுத்தவுடன் வலி குறைந்தால் அது ஆஞ்ஜைனாவாக (Angina) இருக்கலாம். சாதாரணமாக குளிர் காலங்களில் இது மோசமாகும்.

## 3. கீழ் முதுகு வலி அல்லது தோள் பட்டைகளுக்கிடையே வலி

அனேகமாக இது arthritis ஆக இருக்கலாம்.

## 4. கடுமையான வயிற்று வலி

வயிற்றிலுள்ள குடல் வால் (appendix) பகுதியில் அடைப்பு ஏற்பட்டு பாக்டீரியாக்கள் பெருகியிருக்கும். அந்நிலையில் அதில் அழற்சி ஏற்பட்டு கடுமையான வலி ஏற்படும். இது தான் appendicitis எனப்படுகிறது. மருத்துவரிடம் சென்றால் அதை உடனே ஆப்பரேசன் செய்து எடுத்து விடுவார்கள்.

இல்லாவிட்டால் இந்த குடல் வால் உடைந்து பாக்டீரியாக்கள் மற்ற உள் உறுப்புகளுக்கு பரவி விடும். Gallbladder மற்றும் pancreas பாதிப்புகள் குடல் புண்,குடலில் அடைப்பு போன்ற பிற ஆபத்தான காரணங்களாலும் வயிற்று வலி வரலாம்.

## 5. கெண்டைக்கால் வலி

கெண்டைக்கால் பகுதியில் வலி அல்லது வீக்கம் இருந்தால் உடனே மருத்துவரைப் பார்க்கவும். சில வேளை இரத்தக்குழாய்களில் இரத்தம் உறைந்து அடைப்பு ஏற்படுத்தும். ஆபத்தானது. இது போன்ற உறைந்த இரத்தத் துணுக்குகள் நுரை ஈரலில் கடும் பாதிப்பு ஏற்படுத்தலாம்.

## 6. கால் அல்லது பாதங்களில் எரிச்சல் வலி

கால் அல்லது பாதங்களில் நரம்புகள் பழுதடைந்தால் ஊசி குத்துவது போல் வலி ஏற்படும். இது சர்க்கரை நோயின் அடையாளமாக இருக்கலாம்.

## 7. என்னவென்று நிச்சயிக்க முடியாத வலி

சிலருக்கு மனச்சோர்வு(dippression) காரணமாக உடலின் பல இடங்களில் இன்னதென்று சொல்ல முடியாத கடுமையான வலி உணர்வார்கள். டாக்டர் " கழுத்து வலிக்கிறது, கை வலிக்கிறது, வயிறு வலிக்கிறது "என்று போவார்கள் ஆனால் மருத்துவர் சோதனை செய்து பார்த்தால் எதுவும் கண்டு பிடிக்க முடியாது எல்லாம் நார்மல் என்று சொல்வார்கள். கடும் மன உளைச்சலும் மனச்சோர்வும் இத்தகைய வலிக்கு காரணமாக இருக்கலாம். உரிய நேரத்தில் அதற்கான சிகிட்சை எடுத்துக் கொள்ளாவிட்டால் வாழ்க்கை கசந்து விடும், அதோடு மூளையையும் பாதித்து விடும்.

சின்ன வேதனை பெரிய வேதனை என்று பார்க்காமல் எந்த வலி ஏற்பட்டாலும் உடனே அதன் காரணத்தை தெரிந்து கொள்வது எப்போதும் நல்லது. வலி என்பது உடல் நமக்கு தரும் எச்சரிக்கை மணி. அதை அலட்சியப்படுத்தாமல் விழித்துக் கொண்டால் உயிருக்கு பாதுகாப்பு. வாழ்க நலமுடன்.

## 8. தொடை, கால், பாதம் போன்ற பகுதியில் வலி

வயதானால் முதுகெலும்பைச் சுற்றியுள்ள மூட்டுகள் எல்லாமே பெருத்து, திசுக்களின் எலாஸ்டிக் தன்மை குறைந்து கடினமடைகின்றது. மேலும் எலும்புகளின் அடர்த்தி குறைந்து அதிர்வுகளைத் தாங்கும் சக்தி குறைகிறது. இதனால் முதுகெலும்பின் நடுவில் உள்ள தண்டுவடத்திலிருந்து நரம்பு வெளியேறும் துவாரங்கள் தடைப்படுகின்றன. இதைத் தொடர்ந்து அந்த நரம்புக்கு வந்து செல்லும் ரத்தத்தின் அளவும் குறைகிறது. எனவே தொடை, கால் மூட்டின் பின்புறம் ஆகியவை இழுத்தது போல் வலியுடன் கொஞ்சம் மரத்தும் போகிறது.

இந்த வலிக்குப் பலரும் காலில் கட்டுப் போட்டுக் கொண்டு தன்னையே ஏமாற்றிக் கொள்கிறார்கள்.சில சமயம் கால் மரத்துப்

போவது போல் இருக்கும் போது தாங்களாகவே நியூரோபியான் போன்ற மாத்திரைகளை விழுங்கி ஏமாந்தவர்களும் உண்டு. காலில் கட்டுப் போடுவது அபத்தம். இதனால் உங்கள் காலுக்கு வந்து செல்ல வேண்டிய ரத்த ஓட்டம் தடைப்படுகிறது. அவஸ்தைகள் அதிகரிக்கும். இது தங்களது சர்க்கரை நோயினால் ஏற்பட்ட நிலை என்று தவறாக எண்ணும் மக்களும் உண்டு. (அப்படி எண்ணி சில மருத்துவர்களும் தவறான சிகிச்சை அளித்திருக்கிறார்கள்!).

நம் உடலில் மூளை தொடங்கி கால் நுனி வரை ஒவ்வொரு பாகத்துக்கும் குறிப்பிட்ட நரம்புகள் செல்கின்றன. தொடை, கால், பாதம் போன்ற பகுதியில் வலி என்றால் அங்கு உணர்ச்சிகளை எடுத்துச் செல்லும் குறிப்பிட்ட நரம்பு ஏதோ ஒருவித அழுத்தத்தைச் சந்திக்கிறது என்று அர்த்தம்.

இந்த அழுத்தம் ஓரளவுக்கு மேல் அதிகமானால் அதைக் காலில் வலியாக உணர்கிறீர்கள். காலில் பச்சிலைக் கட்டிக்கொண்டாலோ ஏதாவது ஆயின்மெண்ட் தேய்த்துக் கொண்டாலோ இந்த வலி மறைவதில்லை. களிம்பு தயாரிக்கும் நிறுவனத்துக்குத்தான் லாபம்.

## 9. காரணம் அறிதல்

பரிசோதனைக்குப் பிறகு எக்ஸ்ரேயில் முதுகு, இடுப்புக்கட்டு ஆகியவற்றைப் பார்க்கும் போது மூட்டுப்பிடிப்பு நோயினால் வரும் தொடை வலியா அல்லது இடுப்பு மூட்டுத் தேய்மானத்தால் வந்த வலியா என்பதைப் பெரும்பாலும் கண்டு பிடித்துவிட முடியும்.

இடுப்பு மூட்டு தேய்மானத்தின் காரணமாகத் தொந்தரவு என்றால் தொடையின் உள்பகுதியிலோ, கால்மூட்டின் உள்ளேயோ வலி ஏற்படக்கூடும். ஆனால் தொடை வலியுடன் மரத்துப் போகாது. நின்றாலும், நடந்தாலும், உட்கார்ந்தாலும் அங்கே பிடித்துக் கொள்வதுபோல் இருந்து நடக்க நடக்க வலி அதிகமாகலாம்.

ஆனால் முதுகுச் சிக்கலால் ஏற்பட்டால் தொடையிலிருந்து கால் வரை 'சுரீர்' என்று இழுக்கும் உணர்வு ஏற்படும். கணுக்கால் வரை பரவும். முதுகைச் சற்று திருப்பினாலோ குனிந்து வேலை செய்தாலோ இது அதிகமாகும்.

ஸியாடிகா எனும் இந்த வலி இருமினாலோ தும்மினாலோ அதிகரிக்கும். படுத்த பிறகு கொஞ்சம் குறைந்து, புரண்டு விட்டு எழுந்திருக்கும் போது இந்த வலி அதிகரிக்கும். காலில் "ஜிவ்" எனத் தோன்றிய இந்த வலி, காலைச் சற்று மடித்து வைத்தால் குறைந்தது போல் இருக்கும்.

முதுகுக்கு பிஸியோதெரபி தருவது மூலமாகவோ, மாத்திரைகள் மூலமாகவோ இந்த வலியைக் குறைக்க முடியும். வலி குறைந்தவுடன் தொப்பை இருப்பவர்கள் அதைக் குறைக்க வேண்டும். முன்பு வலி ஏற்பட்டதே என்பதையே நினைத்துக் கொண்டு சோம்பலாக இருக்காமல் வேலைகளை இயன்ற அளவு சுறுசுறுப்பாகப் பார்த்து ஊளைச்சதையை ஏற்றிக் கொள்ளாமல் இருந்தாலே சிலருக்குத் தானாகவே சரியாகிவிடும்.

## 10. சிறப்பு சிகிட்சை

மேலே குறிப்பிட்ட அத்தனையையும் செய்து, கால் வலியும் தொடர்ந்தால் சிறப்பு சிகிச்சைதான் செய்தாக வேண்டும். முன்பெல்லாம் முதுகில் ஊசியால் குத்தி, மைலோகிராம் எனப்படும் ஒருவித வேதனையான சோதனையைச் செய்வது தவிர்க்க முடியாததாக இருந்தது.


நல்லவேளையாக இப்போது எம்.ஆர்.ஐ. தொழில்நுட்பம் வந்துவிட்டது.முதுகெலும்பின் உள்ளே உள்ள நரம்புகள், தசை மற்றும் தசைநார்களின் தன்மையை இதன் மூலம் அறிய முடியும். நரம்புக்குள்ளும் பாதிப்பு இருந்தாலோ, நரம்புக் குழாயின் அளவு குறித்தோ இதன் மூலம் கண்டறிய முடியும்.

ஜவ்வு மிகவும் விலகி இருந்தாலோ, நரம்புக்குள் ரத்த ஓட்டம் குறைந்து தண்டு வடத்தில் கட்டி போல் உருவாகியிருந்தாலோ எம்.ஆர்.ஐ. ஸ்கானின் மூலம் துல்லியமாகக் கண்டுபிடித்துவிடலாம். இலேசான வலி என்றால் முதுகில் எபிட்யூரல் ஸ்டீராய்ட் எனும் ஊசி மருந்தைச் செலுத்தி சிலரது கால் வலியைக் குறைக்க முடியும்.

ஆனால் தொடைவலி அல்லது கால் வலி மிகவும் அதிகமாகப் போய்த் தூங்கமுடியாத அளவு வலி அதிகமானாலோ கூடவே கால் மரத்துப் போனாலோ கீழ்முதுகில் ஒரு சிறிய ஆப்பரேஷன் செய்வது அவசியமாகிறது. நகர்ந்து போன ஜவ்வை அகற்ற வேண்டியிருக்கும். அல்லது முதுகெலும்பிலிருந்து குறிப்பிட்ட நரம்பு வெளியேறும் துவாரத்தை அடைத்திருக்கும் திசுக்களை அகற்ற வேண்டியிருக்கும்.

- கே.டிக் இணைய குழுமத்திலிருந்து

# ஆபாசம்: பாரதீய ஜனதா கட்சியின் மறுபெயர்



சட்டமன்றத்தில் ஆபாசபடம் பார்த்த பா.ஜ.க எம்.எல்.ஏக்கள்

"நாட்டில் நாளொன்றுக்கு மூன்று விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கின்றார்கள்.

நகரங்களில் காணும் வளர்ச்சிகளும், வானுயர்ந்த கட்டடங்களும், விவசாயிகளின் வாட்டம் போக்கவில்லை. அவர்களின் காய்ந்த வயிற்றுக்குக் கஞ்சி வார்த்திடவில்லை".

வறுமைக்கும் பஞ்சத்திற்கும் உள்ளாகி மக்கள் மாண்டது போதாதா. காவிகளே நீங்கள் ஆண்டது போதாதா என எதிர்கட்சியினர் ஆவேசப்பட்டனர் கன்னட மாநிலத்தில்!.

ஆளுங்கட்டிசியினர் பட்டினிச் சாவுகளுக்கு பதில் சொல்லிட இயலாமல் திணறிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் பாரதீய ஜனதா கட்சியின் மூன்று அமைச்சர்கள் அமைச்சர்களுக்கான முன் வரிசையில் அமர்ந்து தங்களது உயர்தர கைப்பேசிகளில் ஆபாசக்காட்சிகளைப் (அவர்கள் பார்த்தவற்றை வைகறையில் விவரித்திட இயலாத அளவுக்கு அசிங்கமானவை) பார்த்துக் கொண்டிருந்தார்கள். என்னே! இவர்களின் நாட்டுப்பற்று.

இதனை விளக்கமாக வைகறை வெளிச்சம் பிப்ருவரி மார்ச்சு 2012, இதழில் வெளியிட்டிருந்தோம்.

ஆனால் சங்கப் பரிவாரத்தினர் நாங்கள் எல்லா இடங்களிலும் அப்படித்தான் இருப்போம் என்பதைப் பிரகடனப்படுத்தி இருக்கின்றார்கள். குஜராத்திலும் கன்னடத்து பாஜக போல் நடந்துள்ளனர் பாஜக எம்.எல்.ஏ.க்கள்.

பிணம் தின்னும் முதலமைச்சர் நரேந்திர மோடியின் மாநிலத்தில் இது நடந்தது ஒன்றும் பெரிதுபடுத்தும் அளவில் இல்லை என்றே பாரதீய ஜனதாக் கட்சியினர் நினைக்கின்றார்கள். நாட்டை உலுக்கிய கர்நாடகா நிகழ்வைப் பற்றியே அவர்கள் கவலைப் படவில்லை.

அதனால்தான், மக்கள் மன்றத்தில் அமர்ந்து மக்கள் வரிப்பணத்தில் பயணச் செலவிலிருந்து படுக்கை செலவுவரைப் பெற்றுக் கொள்ளும் இவர்கள் படுக்கை அறை காட்சிகளைப் பார்க்கின்றார்கள். கர்னாடாகா மாநில கட்சி தலைமையும், சட்டசபையின் மாண்பைக் காப்பாற்றிட வேண்டிய சபாநாயகரும் மூன்று அமைச்சர்களில் ஒருவர் மட்டும்தான் தவறு செய்தார் ஏனைய இருவரும் ஒத்து ஊதியவர்கள். ஆகவே அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் தேவை இல்லை எனக் கூறிவிட்டார்.

குஜராத்தின் டென்பூர் தொகுதி, பா.ஜ.க கட்சி சட்டமன்ற உறுப்பினர் ஷங்கர் சிவகிரி தனது செல்போனில் சல்லாப காட்சிகளைப் பார்த்திருக்கின்றார். அந்த பலான காட்சிகளைப் பெரிதுபடுத்திக் காட்டேன் என மன்றாடி இருக்கின்றார், மற்றொரு பாரதீய ஜனதா கட்சி சட்டமன்ற உறுப்பினர். இவர் ஷெரா ஷெத்தா என்ற குஜராத் சட்டமன்ற பா.ஜ.க உறுப்பினர். இவர்கள் சட்ட சபையில் அமர்ந்து சல்லாபத்தில் ஈடுபட்ட நிகழ்வு 22/3/2012 இல் நடைபெற்றது.

இங்கேயும் இருவரில் ஒருவரை விட்டு விட்டார்கள். ஒருவரை மட்டும் அதாவது சங்கர் சவ்திரியை மட்டும் விசாரணைக்கு உட்படுத்தப் போவதாகக் கூறி இருக்கின்றார்கள். சட்டமன்ற செயலாளர் ஷங்கர் சவ்திரியின், செல்போனைக் (I Pad) கைப்பற்றி இருக்கின்றார்.

விசாரணையை முடிப்பதற்கு முன்னால், (பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்த) சபாநாயகர், கண்பத்வாகவி வரிந்து கட்டிக் கொண்டு அந்த ஆபாச சட்டமன்ற உறுப்பினரைக் காப்பாற்றிட முன் வந்துள்ளார்.



எங்கள் சட்டசபையை அவமானப் படுத்திட மேற்கொள்ளப்படும் மாபெரும் சதி இது என சதுரங்கமாடி இருக்கின்றார்.

அடுத்த நாளே ஆபாச சட்டமன்ற உறுப்பினர் சங்கர் சவ்திரியின் 'I Pad' என்ற கைப்பேசி மற்றும் கம்ப்யூட்டரை சோதித்துப் பார்த்து விட்டதாகவும் அதில் ஆபாசமாக ஒன்றுமில்லை என்றும் ஓர் அறிவிப்பைச் செய்துள்ளார். மோடி பாணியில் ஒரு மோசடியைச் செய்து தடவியல் குழுமத்திலிருந்து ஓர் அறிக்கையை பெற்றுள்ளார்கள். அந்த அறிக்கையை கொணர்ந்து, மொத்த நிர்வாணக் காட்சிகளையும் மூடி மறைத்து விட்டார்கள்.

இதே குஜராத்-இல் தான் முன்னாள் பாரதீய ஜனதா செயலாளர் ஜோஷி என்பவர், தன்னை பிரம்மச்சாரி எனக் காட்டிக் கொண்டே வேலைக்காரியோடு இருந்த குறுந்தட்டு புழக்கத்தில் வந்தது.

அப்போது ஜோஷியைப் பிடிக்காத மோடி அவரை தனது கட்சியிலிருந்து அப்புறப்படுத்த இதை உருவாக்கினார் ஆனால், ஜோஷி அப்படிப்பட்டவரல்ல என்று புரட்டினார்கள், பாரதீய ஜனதா கட்சியினர்.

இப்போது எங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் பார்த்தது நிர்வாண காட்சிகள் தாம், சல்லாப காட்சிகளல்ல என சப்பைக் கட்டுக் கட்டி இருக்கின்றார்கள்.

**பத்திரிக்கைகள் பாரதீய ஜனதா கட்சியைக் காப்பாற்றிட மேற்கொண்ட முயற்சிகள்.**

முதல் முதலில் இதிலுள்ள செய்திகளை பாரதீய ஜனதா கட்சிக்கு அவமானம் என்ற மட்டில் நிறுத்திக் கொண்டன.

மக்கள் நலனை விவாதிக்க வேண்டிய அவை சட்டசபை. இதற்காக மணிநேரம் ஒன்றுக்கு பல லட்சம் ரூபாய் மக்கள் வரிப்பணத்திலிருந்து வாரிக் கொட்டப் படுகின்றது. அங்கே அமர்ந்து நீலவண்ணப் படம் பார்ப்பவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அவர்கள் பொது வாழ்க்கையில் இருந்து முற்றாக அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

பாரதீய ஜனதா கட்சியினர் சர்வதேசிய அளவில் விபச்சாரத்தில் ஈடுபடுபவர்கள் என்பதை வைகறை வெளிச்சம் பிப்ருவரி மார்ச்சு இதழ்களில் தெளிவுபடுத்தி இருந்தோம்.

அவர்களிடம் ஒழுக்கங்களை எதிர் பார்ப்பது வடிகட்டின முட்டாள்தனம்.

அவர்களின் கட்சியே அரசியல் நிர்ணயச் சட்டத்திற்கு எதிரானது என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இவற்றையெல்லாம் மக்களுக்கு நினைவுபடுத்திட வேண்டிய மீடியாக்கள் அவர்களை காப்பாற்றிடும் முயற்சியில் ஈடுபடுகின்றன. அவர்கள் முற்றாக இந்துக்களால் மட்டுமல்ல, இந்திய குடிமக்கள் அனைவராலும் புறக்கணிக்கப்பட வேண்டியவர்கள் என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும். ஆனால் மீடியாக்கள் இதைச் செய்யவில்லை.

இப்போது பரபரப்பான
விற்பனையில்......
....யுவான்னி ரிட்லி எழுதிய....

தாலிபானின் பிடியில்

9/11 பிறகு பின்லேடன் அவர்களை சந்தித்து விட வேண்டும். ஏன் இந்தத் தாக்குதலை நடத்தினீர்கள் என்று கேட்டுவிட வேண்டும் என ஆசைப்பட்ட ஒரு பத்திரிகையாளர்.

கள ஆய்விற்குப் பிறகு இந்த ஈனச் செயலை செய்யும் அளவிற்கு இவர்கள் ஈரமில்லாதவர்கள் அல்ல என்றுகூறி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட வரலாறு.

மு. குலாம் முஹம்மது அவர்களின்
இனிய தமிழ் நடையில்....

வேர்கள் வெளியீட்டகம்
சென்னை.

# திருப்பூரில்
## “தாருல் இஸ்லாம்”, “வைகறை வாசிகர் வட்டம்” ஆகியவற்றின் சார்பில்
# “ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம்” நூல் அறிமுக விழா!

திருப்பூர் மாநகரில், 19.01.2012 அன்று மாலை 7 மணிக்கு “ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம்” என்ற நூலின் அறிமுக நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு திருப்பூர் ஐக்கிய ஜமாஅத் தலைவர் V.K.M. ஐக்கரிய்யா அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

நிகழ்ச்சியை: சகோதரர் சிராஜ் கிராஅத் ஓதி தொடங்கி வைத்தார். சகோதரர் நஜீருதீன் சரவேற்புரை நிகழ்த்தினார்.

பிரபல வழக்கறிஞர், பவானி மோகன் அவர்கள் நூலை அறிமுகப்படுத்தினார்கள்.

தெளிந்த நீரோடை போல் அமைந்த அந்த அறிமுக உரையில், ஜாதிக் கொடுமையின் நீண்ட வரலாற்றை எடுத்துரைத்தார். இருக்கின்ற தீர்வுகளில் சிறந்ததாக இஸ்லாம் இருப்பதையும் விரித்துரைத்தார்.

எப்போதும் போல் பவானி மோகன் தான் ஓர் அர்த்தமுள்ள ஆய்வாளர் என்பதை நிரூபித்தார். நூல் அறிமுகம் ஓர் ஆழ்ந்த ஆய்வுரையாகவே அமைந்தது.

அடுத்து தோழர் பாலமுருகன் அவர்கள், நூலின் தார தம்மியங்களையும், இஸ்லாம் எந்த அளவிற்கு ஜாதியை ஒழிக்கப் பயன்படுகின்றது என்பதை ஆய்ந்திட வேண்டும். அன்வர் பாலசிங்கம் என்பவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பல பெண்கள் திருமணமாகாமல் இருக்கின்றார்கள் என்றொரு தகவலைச் சொல்லி இருக்கின்றார்கள். அதையும் இஸ்லாத்தைத் தீர்வாக, பரிந்துரைப்பவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றார்.

நீதிபதி கோபால கிருஷ்ணன் அவர்கள் எழுதிய நூலில் கீழவெண்மணியில், கம்யூனிஸ்ட்டுகள் என்ன செய்தார்கள் என்றொரு கேள்வியைக் கேட்டிருக்கின்றார்கள். அந்த மொத்தப் பிரச்சனையையும் நாங்கள் தாம் கையாண்டோம், என்ற வரலாற்றை எடுத்துக் காட்டினார்.

ஜிஸ்யா என்றொரு மதவரி எந்த அளவுக்கு நியாயம் எனபதை முஸ்லிம்கள் கருத்தில் கொள்ள வேண்டும். அதே நேரத்தில் இந்திய சூழலில் அக்பரின் தீனுல் இலாஹி போன்ற சமரச கொள்கைகள் இந்தியாவிற்கு பொருத்தமாக இருக்குமா? என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

எல்லாவற்றையும் சமரசம் கொள்ளும் அளவில் குருநாணக் அவர்கள் கொண்டு வந்த போதனைகளையும், நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இஸ்லாத்திலும், ஜாதி அமைப்பு முறை இருப்பதாக செய்திகள் வருகின்றன என்ற ஐயத்தையும் குறிப்பிட்டார்கள்.

அடுத்து உரையாற்றிய சக்திவேல் அவர்கள் காரல் மார்க்ஸ் அவர்களையும், அவரது கொள்கைகளையும் விரிவாகப் பேசினார்கள்.

நிகழ்ச்சியை தலைமை ஏற்று நடத்திக் கொண்டிருந்த சமுதாய ஆர்வலர், ஐக்கிய ஜமாஅத் தலைவர் V.K.M. ஐக்கரிய்யா அவர்கள், அடுத்து உரையாற்றுபவரை அழைக்குமுன், இஸ்லாத்தில் எந்த நிலையிலேயும் ஜாதிய முறை இல்லை என்பதை அழுத்தமாகக் குறிப்பிட்டார்கள்.

அடுத்து நீலப்புலிகளின் நிறுவனரும் ஐம்பத்தைந்து ஆண்டுகளாக தீண்டாமை கொடுமைகளுக்கெதிராக போராடி வரும் கள வீரர் T.M. உமர் பாஃரூக் அவர்கள் உரையாற்றினார்கள்.

அவர்கள், வணக்கம் எனக் கூறி என்னால் என் உரையைத் தொடங்கிட இயலவில்லை, ஏனெனில் என்னுடைய மார்க்கம் இஸ்லாம் - மனிதனை மனிதன் வணங்குவதைத் தடை செய்துள்ளது. ஆகவே எல்லோர் மீதும் இறைவனின் சாந்தியும் சமாதானமும் உண்டாகட்டும் எனக் கூறி என் உரையைத் தொடங்குகின்றேன் எனக் கூறி தன் உரையைத் தொடங்கினார்.

கீழவெண்மணியில் 44 பேர் ஒரு வீட்டிற்குள் வைத்து எரித்துக் கொலை செய்யப்பட்டார்கள். அஃது அன்று இடதுசாரிகளால் பண்ணையார்களுக்கும், பாட்டாளிகளுக்குமிடையே நடந்த பெரும் போர் எனச் சித்தரிக்கப்பட்டது. கம்யூனிஸ்ட்டுகளும் இந்த மாபாதகத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தங்களால் இயன்றதைச் செய்தார்கள், என்று ஒத்துக்கொண்டால் கூட, சிலபல கேள்விகளுக்கு இன்றும் பதில் கிடைக்கவில்லை.

கீழவெண்மணியில் எரிக்கப்பட்ட 44 பேர்களும் தலீத்களாகவே இருந்தார்கள் என்பது மிகவும் கசப்பான செய்தி. இந்த ஒரு உண்மையே கீழவெண்மணியில் நடந்தது வர்க்கப் போராட்டமல்ல, மாறாக அது ஜாதிவெறியின், தாண்டவம் என்பதை நாம் புரிந்திட இயலும் என்றார்கள். இஸ்லாத்தில் ஜாதியம் எள்ளவுமில்லை என்பதை நான் அனுபவரீதியாக உணர்ந்து வருகின்றேன், என்பதையும் தெளிவுபடுத்தினார்கள்.

ஆகவே தீண்டாமையை ஒழிப்பதற்கு இருக்கின்ற ஒரேவழி இஸ்லாம்தான். இங்கே வந்திருக்கின்ற தலீத் சகோதரர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு, தீண்டாமையை நிரந்தரமாக ஒழித்திட முன்வந்திட வேண்டும் என அனைவரையும் இஸ்லாத்தின் பக்கம் அழைத்தார்கள்.

அடுத்து பேசிய வைகறை வெளிச்சம். ஆசிரியர், மு.குலாம் முஹம்மத் அவர்கள்,

தீண்டாமை மனநிலையை மனிதர்களில் மனதிலிருந்து துடைத்தெறிந்திட இருக்கும் ஒரேவழி, இஸ்லாம்தான். இஸ்லாம், தூய்மையானது. எளிதானது. அது சர்கரவர்த்தி அக்பர் போன்றவர்களின் அறியாமைக்கு அப்பாற்பட்டது. இஸ்லாம் இஸ்லாமாகவே இருக்கின்றது. அக்பரின் தீனுல் இலாஹி மார்க்கத்திற்கும் அதற்கும் எந்தத் தொடர்புமில்லை.

அதேபோல் ஜிஸ்யா என்பது ஒரு பாதுகாப்பு வரியே, அல்லாமல் அது மாற்று மதத்தவர்களின் மீது திணிக்கப்படுகின்ற வரியல்ல.

அந்த வரி கூட போரில் கலந்து கொள்ளும் அளவில் உடல்வாகும் வரியைச் செலுத்தும் அளவில் வளமும் உடையவர் களிடமிருந்து மட்டுமே வசூலிக்கப்படும். வயோதிகர்களிடமிருந்தோ, சன்னியாசி களிடமிருந்தோ, சன்னியாசிகளுக்குப் பணிவிடை செய்பவர்களிடமிருந்தோ அஃது வசூலிக்கப் பட மாட்டாது.

ஏதேனும் காரணங்களுக்காக மாற்று மதத்தைச் சார்ந்த இளைஞர்கள் போரில் கலந்து கொள்ள முஸ்லிம்களால் அழைக்கப்பட்டால், அவர்கள் முஸ்லிம்களுடன் போரில் கலந்து கொண்டால், இந்தவரி அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட மாட்டாது. மாற்று மதத்தைச் சார்ந்தவர்களிடம் ஜிஸ்யாவை வசூலிக்க செல்பவர்கள் அவர்களிடம் மிகவும் மென்மையாக நடந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

ஜிஸ்யாவை வசூலிக்க நியமிக்கப்பட்ட ஒருவர், கலீபா - இஸ்லாமிய ஆட்சியாளர் - உமர்(ரழி) அவர்களிடம், மாற்று மதத்தினரிடம் மென்மையாக நடந்துக் கொண்டால், அவர்கள் வரியைத் தரமாட்டார்கள் என வாதிட்ட போது கலீபா உமர்(ரழி) அவர்கள் சொன்னார்கள், நீ வெறுங்கையோடு வந்தாலும் சரி அவர்களின் மனங்களைப் புண்படுத்திவிட்டு வந்து விடாதே என்று கூறியதை நினைவு கூர்ந்தார்கள்.

ஆனால் முஸ்லிம்கள் மீது கடமையாகி ஜக்காத் என்ற ஏழைவரியை தரமறுப்பவர், ஏழைகளுக்குச் சொந்தமானதை அபகரித்துக் கொண்டார், அவரிடம் போர் தொடுத்து அதைப் பெற்றுக் கொள்ளுங்கள் என பெருமானார்(ஸல்) அவர்கள் வலியுறுத்தியதையும் அதைப் பின்னணியாகக் கொண்டு, கலீபா - இஸ்லாமிய ஆட்சியாளர் - அபூபக்கர்(ரழி) அவர்கள், ஒருவர் ஒரு ஒட்டகத்தையும், அதைக் கட்டுகின்ற கயிறையும் ஜக்காத்தாக தரவேண்டிய திருந்து, ஒட்டகத்தைத் தந்துவிட்டார். ஆனால், கயிற்றைத் தர மறுத்தார் என்றால் அதைப் போர் செய்து பெற்றுக் கொள்வேன் எனக் கூறியதையும், நினைவு கூர்ந்தார்.

அன்வர் பாலசிங்கம் அவர்களின் கருப்பாயி என்கிற நூர்ஜஹான் என்ற நாவலைப் பொறுத்தவரை நிலைமையை ஆய்வு செய்யவும் சீர்செய்யவும் முடிவு செய்துள்ளோம்.

ஆனால் அவரோடு நமது திருப்பூர் களவீரர் காதர் அவர்கள் தொலைபேசியில் பேசியபோது, அவர் நவீனத்திற்காக சிலவற்றை மிகைப்படுத்தி எழுதியுள்ளேன்.

இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பது எனது கருத்தல்ல எனக் கூறியுள்ளார் என்பதை எடுத்துக் கூறினார், வைகறை ஆசிரியர்.

ஆனால் வரதட்சணை கொடுமை முஸ்லிம் சமுதாயத்தைப் பீடித்துள்ள பெரும் நோய். அதனால் சமுதாயத்திலுள்ள இளம்பெண்கள் வடிக்கும் கண்ணீருக்கும் அனுபவிக்கும் வேதனைக்கும் அளவே இல்லை, என்பதையும் குறிப்பிட்டார். இதனை முஸ்லிம்கள் மனதிற்கொண்டு தாங்கள் போக்கை மாற்றிட முன்வந்திட வேண்டும். இல்லையேல் சமுதாயத்திலிருக்கும் பெண்களைப் பாதிப்பது மட்டுமல்ல, இஸ்லாத்தின் பரவலையும் அது தடுக்கும் எனக் குறிப்பிட்டார்.

குருநானக் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட சீக்கியமதம் ஒரு மதமாகியதற்கு இஸ்லாத்தின் போதனைகள் பெரிதும் உதவின. ஆனால் சீக்கிய மதத்தின் கடைசி குருவான குருகோவிந்த் சிங் அவர்கள், ஒரு தகராறில் ஒரு முஸ்லிமால் கொலை செய்யப்பட்டுவிட்டார். இந்த சூழலைப் பயன்படுத்தி ஆங்கிலேயர்கள், இராஜா ரஞ்சித் சிங்-ஐ ஏவிட்டு, இந்தியாவின் விடுதலைக்காகப் போராடிய செய்யீத் அஹ்மத் அவர்களுக்கெதிராக ஏவிவிட்டார்கள். இறுதியில் செய்யீத் அஹ்மத் அவர்கள் ஷஹீத் என்ற வீரமரணத்தை அடைந்தார்கள்.

இருப்போர் இஸ்லாத்தைப்பற்றி ஆய்வு செய்யுங்கள் இறைவன் ஒருவனே என்பதை ஏற்று - நிரந்தரமாகத் தீண்டாமையிலிருந்து விடுதலை அடையுங்கள் என முடித்தார். தொடர்ந்து ஆடிட்டர் அப்துல்லாஹ் அவர்கள் உரையாற்றினார்கள் இறுதியில் நீதிபதி பா.கோபால கிருஷ்ணன், இப்போது மு.குலாம் முஹம்மத் - ஏற்புரை வழங்கினார்கள்.

திருப்பூர் தாருல் இஸ்லாம் களப் பணியாளர் அப்துல் காதர் அவர்கள் நன்றி கூறினார்கள்.

- தி.ந.நீ. -

## உருது மொழி அரசு அலுவலக மொழி மேற்கு வங்கத்தில்

சிறுபான்மையினருக்கு எதிராக தொடர்ந்து செயல்பட்டு வருபவர் மம்தா பானர்ஜி என்ற மேற்கு வங்க முதல்வர். இவர், வகுப்புவாத வன்முறை தடுப்புச் சட்டத்தைத் தொடர்து எதிர்த்து வருகின்றார்.

ஆனால் முஸ்லிம்களின் ஓட்டுகளுக்காக சில சில்லரை அறிவிப்புகளையும் செய்து வருகின்றார். அந்த அறிவிப்புகளுள் ஒன்று, உருது மொழியை அரசு அலுவலக மொழியாக அறிவித்துள்ளது.

அதுவும் ஒட்டுமொத்த மேற்குவங்க மாநிலத்திற்கும் இல்லை. மாறாக, அது பத்து சதவீதத்திற்கு அதிகமாக உருது பேசும் மக்கள் வாழும் மாவட்டங்களில் மட்டுந்தான்.

- MGM -

Source: THE HINDU: 2nd April 2012.

இன்ஷா அல்லாஹ்....
விரைவில் வெளிவருகிறது!

ஷஹீத் செய்யித் குத்துப் அவர்களின்

இஸ்லாமிய எழுச்சியின்
மைல் கற்கள்

எகிப்தில் இஸ்லாமிய எழுச்சிக்கு வித்திட்ட நூல்!
தலைமுறை தாண்டியும் புரட்சிகளை விளைவிக்கும் நூல்!
பல லட்சம் போராளிகளை உருவாக்கிய நூல்!!

மு. குலாம் முஹம்மது அவர்களின் விறுவிறுப்பான மொழிநடையில்

வேர்கள் வெளியீட்டகம்
2/1 மண்ணடி தெரு, 4வது தளம்
மண்ணடி சென்னை -1
அலை: 9444239594, : 044-45566909

# கஷ்மீரின் பாதி விதவைகள்



அநியாயம் இழைப்பவர்களை சட்டத்தின் முன் நிறுத்திட அனுமதி கேட்டு நமது உள்துறை அமைச்சகத்திற்குக் கடிதங்களை எழுதவே செய்கின்றார்கள்.

ஆனால் உள்துறை அமைச்சகம் எப்படிச் செயல்பட்டது, எப்படி அநியாயத்திற்கு உள்ளாகி நிற்கும் மக்களை விரக்தியிலும் தற்கொலையின் விளிம்பிலும் கொண்டு நிறுத்தியது என்பதை, அண்மையில் வெளிவந்த ஆய்வு ஒன்று தெளிவுபடுத்துகின்றது.

## கஷ்மீரில் உள்துறை அமைச்சகத்தின் சதுரங்கம்

கஷ்மீரில் பட்டவர்த்தனமான படுகொலைகள் நடந்து வருகின்றன. பெண்களைக் கடத்திச் சென்று கற்பழித்துக் கொலைசெய்தல், இளம் ஆண்களைக் குறிவைத்து கடத்திக் கொலை செய்தல் இவற்றையெல்லாம் நமது இராணுவமே செய்கின்றது. இவற்றையெல்லாம் செய்யும் நமது இராணுவத்தினர் மிகவும் எளிதாகத் தப்பித்துக் கொள்கின்றார்கள். காரணம், அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்திட முடியாது. அவர்களைப் பாதுகாக்கும் சட்டந்தான் அதற்கு காரணம். ஆயுதந்தாங்கிய படைகளின் சிறப்பு அதிகாரச் சட்டம், என்ற ARMED FORCES SPECIAL POWER ACT: 'AFSPA' சட்டமே அது.

இதையும் மீறி கொலைகள், கற்பழித்துக் கொலை செய்தல் இவற்றில் ஈடுபடுகின்றவர்களைத் தண்டித்திட வேண்டும் என்றால், நமது உள்துறை அமைச்சகம் அதற்கான அனுமதியை வழங்கிட வேண்டும்.

கஷ்மீர் மக்கள் தங்களுக்கேற்படும் பஞ்சமா பாதகங்களுக்கு ஆயுதந்தாங்கிய படையினரை தண்டிக்கவே விரும்புகின்றார்கள். ஆகவே தங்களுக்கு

கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் உள்துறை அமைச்சகம் 42 மனுக்களை - அதாவது ஆயுத படைகளின் மேல் சட்டப்படி நடவடிக்கை எடுக்க அனுமதி கோரிய மனுக்களை - நிராகரித்திருக்கின்றது.

கற்பழிப்பவர்களையும், கொலை செய்பவர்களையும் அவர்கள் இராணுவத்தினர் என்பதால் பாதுகாக்கும், உள்துறை அமைச்சகத்தின், முடிவை எதிர்த்து உச்சநீதிமன்றம் சென்றபோது நமது உச்சநீதிமன்றம், கற்பழிப்பு, கற்பழித்துக் கொலை இவற்றை செய்யும் இராணுவத்தை சட்டத்தின் முன் நிறுத்த யாருடைய அனுமதியும் தேவை இல்லை என்றே கூறியுள்ளது. இதுபோன்ற குரூரமான குற்றங்களைச் செய்பவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அனுமதி கேட்ட மனுக்களில், 32 மனுக்கள் கற்பழிப்பு குற்றங்களைச் செய்தவர்கள் சம்பந்தப்பட்டது. ஆனால் ஒரு வழக்கில் கூட நமது மத்திய உள்துறை அமைச்சகம் அனுமதி வழங்கிடவில்லை.

இந்தக் கற்பழிப்புகளுக்குப் பலியானவர்கள், தீவிரவாதத்தோடு தொடர்புடையவர்களா, என்றொரு ஆய்வை தி ஹிந்து 'The Hindu' பத்திரிக்கை நடத்தி

இருக்கின்றது. நிச்சயமாக பலியானவர்களில் யாரும் தீவிரவாதத்தோடு தொடர்புடையவர் களல்ல என்ற முடிவுக்கு அது வந்துள்ளது.

எடுத்துக்காட்டாக 1991-இல், முஹம்மத் அய்யூப் பாட் என்பவரின் உடல் தால் ஏரி ‘Dal Lake’ என்ற ஏரியில் மிதந்தது. அவனுடைய செயல்பாடுகள் பற்றிய ஆய்வு பின்னர் மேற்கொள்ளப்பட்டது. அவன் எந்தத் தீவிரவாத செயல்களோடும் சம்மந்தப் பட்டனல்ல என்பது தெளிவாயிற்று. ஆனால் அவனைக்கொலை செய்த இராணுவத்தினரை சட்டத்தின் முன் நிறுத்திட அனுமதி வழங்கப்படவில்லை.

மிருகங்களை வேட்டையாடுவதைப் போல் அவனை வேட்டையாடியவர் பிரிகேடியர் (இது இராணுவத்திலுள்ள ஓர் அணி பதவி) குல்சான் ராவ் என்பவர்தான். இவர் கஷ்மீரில் கள துப்பாக்கி பிரிவில் பணியாற்றுபவர் [Field Ordinance Depot] இவரை சட்டத்தின் முன் நிறுத்திட வேண்டும் என மார்ச்சு திங்கள் 2003 ஆம் ஆண்டு வரை 1991 - 2003, 12 ஆண்டுகள், மத்திய உள்துறை அமைச்சகத்திடம் போட்ட மனுக்க ளெல்லாம் குப்பை தொட்டிக்கே சென்றன.

1997-இல் பீர்வா என்னுமிடத்திலுள்ள ஒரு பெண் கற்பழிக்கப்பட்டாள், இதில் இராணுவத்திலுள்ள பெரிய அதிகாரி ஒருவர் குற்றஞ்சாட்டப் பட்டார். ஆனால் அவரைச் சட்டத்தின் முன் நிறுத்திட, மத்திய உள்துறை அனுமதிக்கவில்லை.

2001அம் ஆண்டு அது தொடர்பான அத்தனைக் கோப்புக்களும் மூடப்பட்டுவிட்டன, என அறிவித்தது. காரணம் கற்பழிப்புக்கு உள்ளான பெண், இராணுவ உயர் அதிகாரியின் அங்க அடையாளங்களை சரியாகச் சொல்ல வில்லையாம். ஒரு இராணுவ அதிகாரி தன்னைக் கற்பழிக்க முயற்சி செய்கின்றான் என்றால் அதைப் பெண் தப்பிக்க முயற்சி செய்வாளா? அல்லது அவனது அங்க அடையாளங்களை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருப்பாளா? இனி அவர் இராணுவத்தின் உயர் அதிகாரி என்பதால் அவருக்குப் பலர் பாதுகாப்பிற்கு செல்வார்கள். அவர்கள் தங்கள் உயர் அதிகாரியை பலியாகும் பெண் அடையாளங்கண்டு கொள்ளாமலும்,



புகார்களைச் செய்துவிடாமலும் தற்காத்துக் கொள்வதில் மிகவும் கவனமாக இருந்தார்கள். இத்தனைக்கு பிறகும் அந்தப் பெண்மணி இதர தடயங்கள் வழி அவர்தான் குற்றவாளி எனபதை நிரூபித்துள்ளாள்.

ஆனாலும் நமது மத்திய உள்துறை அமைச்சகம் அவர்மீது நடவடிக்கை எடுக்க அனுமதி வழங்கமுடியாது எனக் கூறிவிட்டது.

எப்படி இருக்கின்றது, உள்துறை அமைச்சகத்தின் அணுகுமுறை. மக்களை காப்பாற்றிட மக்கள் வரிபணத்தில் சம்பளம் வாங்கிடும், அதிகாரி அப்பாவி மங்கை ஒருத்தியைக் கற்பழித்தது தவறில்லையாம் - குற்றமில்லையாம், ஆனால் அவள், அந்த அதிகாரியின் அங்க அடையாளங்களை சரிவர தெரிந்து வைத்திராதது குற்றமாம், நமது உள்துறை அமைச்சகத்திற்கு.

விடவில்லை கஷ்மீர் மக்கள். இவன்தான் அந்த ஈனச்செயலை செய்தவன் என்பதை நிரூபிக்கும் அளவில் அவனை அன்று காத்து நின்றவர்களில் ஒருவரையும், சாட்சியமாக்கி னார்கள், தேவையான ஆவணங்களையும் கண்டெடுத்தார்கள்.

பின்னர் இந்த ஆவணங்களையும், சாட்சிகளையும் உள்துறை அமைச்சகத்திடம் தந்து அந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க அனுமதிக் கேட்டார்கள். அப்போதும் உள்துறை அமைச்சகம் அனுமதி மறுத்தது. கடைசி மறுப்பு ஜுன் 3, 2011ல் வந்தது.

மீண்டும் மத்திய உள்துறை அமைச்சகம், கேட்ட கேள்விகளுக்கெல்லாம், பதில் தந்து, அவர்கள் கேட்ட ஆவணங்களையெல்லாம் ஓடி ஆடி கண்டுபிடித்துத் தந்தார்கள்.

எந்த நிமிடமும், உள்துறை அமைச்சகம் அனுமதி தந்துவிடும் அதைக்கொண்டு

இராணுவ அதிகாரியைச் சட்டத்தின் முன் நிறுத்திடலாம் என பலியானவர்கள் நினைத்தார்கள்.

ஆனால் நமது உள்துறை அமைச்சகம். செப்டம்பர் **12, 2011** ஆம் நாள் எல்லா சாட்சியங்களையும் ஆவணங்களையும் ஒட்டுமொத்தமாக நிராகரித்தது. இனி இதில் அனுமதி என்ற பேச்சுக்கே இடமில்லை எனக் கூறிவிட்டது.

இது ஜனநாயக நாடாம், இங்கே கற்பழிக்கும் இராணு அதிகாரியை காப்பாற்றுவதற்கு ஓர் அமைச்சகமே வரிந்து கட்டிக்கொண்டு பணியாற்றுமாம்.

இந்தப் பாதகங்களைப் பொறுத்துக் கொள்ள முடியாத ஆத்மாக்கள் ஏதேனும் வெகுண்டெழுந்தால், அதன் மீது தீவிரவாதி என்ற முத்திரைக் குத்தப்படும். அழிக்கப்படும். அதன் உற்றார் உறவினர்கள், அனைவரும் அழிக்கப்படுவார்கள்.

**1997**-இல் அப்துல் ஹாலிக் லோனி என்ற இளைஞனை "3 கோனிபிரிவு" என்ற இராணுவப் பிரிவினர் அடித்தே கொன்றார்கள், மக்கள் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே இதனை செய்தார்கள். ஏராளமானோர் கண்ணால் கண்ட சாட்சியங்கள் என்று சாட்சியம் சொல்லிட முன்வந்தபோதும், "3 கோனிபிரிவு" இராணுவத்தினர் மீது நடவடிக்கை எடுப்பதற்கான அனுமதி வழங்கப்படவில்லை.

கல்தோன்றி மண்தோன்றா காலத்திலே கூட, இது போன்ற கொடுமைகளும், அநியாயங்களும் நடந்ததில்லை **22** ஆம் நூற்றாண்டில் உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டில் இஃது சர்வசாதாரணமாக நடைபெறுகின்றது. பாதிக்கப்படுபவர்கள், பலியாபவர்கள், இவர்களெல்லாம் முஸ்லிம்கள், என்பதால்தான் இவையெல்லாம், கேட்பார் கேள்வி இன்றி நடைபெறுகின்றன. Source: TH: 7/2/2012.

இது தொடர்பாக இராணுவத்தினரைக் கேட்டால், நாங்கள், இதுபோன்ற அநியாயங்களைச் செய்பவர்களை ஒன்றும் "சும்மா" விட்டுவிடுவதில்லை. பலரை நாங்கள், இராணுவ நீதிமன்றத்தில் (Court Martial) விசாரித்துத் தண்டித்திருக்கின்றோம் என்று கூறுகின்றார்கள். அப்படி, நீங்கள் எந்தெந்த வழக்குகளில் இராணுவத்தினரைத் தண்டித்திருக்கின்றீர்கள்? அந்த விபரங்களைத் தந்தால் நாங்கள் மக்கள் மன்றத்தில் சமர்ப்பிப்போம், அது கஷ்மீரில் இராணுவத்தினர் தப்பு செய்பவர்களைத் தண்டிப்பார்கள் என்ற எண்ணம் ஏற்பட்டிட வழிவகுக்கும் எனக் கேட்டபோது இராணுவத்தினர் முரட்டுத்தனமாக எந்தத் தகவலையும் தந்திட முடியாது எனக் கூறிவிட்டார்கள்.

இதிலிருந்து அவர்கள் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. எல்லாவற்றையும் மறைக்கின்றார்கள் என்பது தெளிவாகின்றது.

இதற்கு மேலும் ஒருபடி மேலே சென்று நடவடிக்கை எடுத்திருக்கின்றோம், எனப் பொய்யும் சொல்லுகின்றார்கள். இதிலிருந்து சுயப்பிரசவமாக வெளிவரும் உண்மை என்னவென்றால் இராணுவத்தினர் தினமும் அத்துமீறல்களில் ஈடுபடுகின்றார்கள் என்பது தெளிவாகின்றது. அதேபோல் இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதைப் போல் நடித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதும் உண்மையாகின்றது.

சுருங்கச் சொன்னால் கஷ்மீரில் இராணுவத்தினர் ஒரு முழு அளவுப் போரை முஸ்லிம்கள் மீது நடத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்பதும் தெளிவாகின்றது.

நமது உள்துறையைக் கேட்டால், அவர்கள், வாய்திறக்க மாட்டேன் என்கின்றார்கள்.

உள்துறையிடம், அனுமதி கேட்டுவரும் மனுக்களை முதலில், "அது" இல்லை "இது" இல்லை எனத் திருப்பி அனுப்பும் உள்துறை இறுதியாக ஒற்றைவரியில் "No case is made out" எந்த வழக்கும் இதிலில்லை எனக் கூறி நிராகரித்து விடுகின்றது.

இந்தியாவிலேயே அதிகமாகக் கொலை நடக்கும் கஷ்மீரில் கொலைக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்படுகின்றவர்களின் எண்ணிக்கை இந்தியாவிலேயே மிகவும் குறைவு.

கொலைக் குற்றங்களில், நாடு முழுவதும் தண்டிக்கப்படுபவர்கள், **36.7%**. அதாவது நூறு கொலைக் குற்ற வழக்குகள் பதிவானால் அதில் **36.7** வழக்குகளில் குற்றம்

செய்தவர்கள் தண்டிக்கப்படுகின்றார்கள்.

ஆனால் கஷ்மீரில் 100 கொலையாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டால் 17 பேர்தான் 17.1% தண்டிக்கப்படுகின்றார்கள்.

இந்தியாவின் இதரப் பகுதிகளில் கற்பழிப்பு குற்றங்களைச் செய்தவர்கள் என 100 பேர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டால், 26.6% குற்றவாளிகள் தண்டனை பெறுகின்றார்கள். ஆனால் கஷ்மீரில், (2.1%) இரண்டு பேர்தான் தண்டிக்கப்படுகின்றார்கள்.

கஷ்மீரில் இந்தக் குற்றங்களுக்கு பலியாகின்றவர்கள், முஸ்லிம்கள் தாம் என்பதும் ஒரு காரணமா? எனக் கேட்கின்றார்கள் வல்லுநர்கள்.

மேலே நாம் எழுதிய கட்டுரைக்கு, தகவல்களைத் தந்ததில் THE HINDU, FEBRUARY 7, 2012-இல் இடம்பெற்ற கட்டுரையும் ஒன்று. அதில் இந்தக் கட்டுரையை எழுதியவர், பிரவின்சாமி.

பிரவின்சாமி, காலா காலமாக முஸ்லிம்களுக்கு எதிராகக் கட்டுரைகளை எழுதிக் கொண்டிருப்பவர்.

இந்த நூற்றாண்டின் இணையற்ற மார்க்க அறிஞர்களான மௌலானா மௌதூதி. இமாம் ஹஸன் அல்பன்னா ஷஹீத், செய்யித் குதுப் ஷஹீத், டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி போன்றவர்கள் தாம் ஜிஹாத்-ஐ பரப்பியவர்கள். இவர்கள் தாம் தீவிரவாதத்தின் ஊற்றுக்கண் என்றெல்லாம் எழுதுபவர்.

அதேபோல், இன்று இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைப்பதில் முன்னணியில் நிற்கும், டாக்டர் ஜாஹிர் நாயக், அவர்களைப் பழைமைவாதி என்றும் இன்றைய தீவிரவாதத்திற்கு வித்திட்டவர் என்றும் தன் பேனாக்களால் ‘’ “தி ஹிந்து” போன்ற பத்திரிகைகளில் பக்கங்களை நிரப்பியவர்.

டாக்டர் ஜாஹிர் நாயிக் அவர்களுக்கு ஆங்கில அரசு, ஆங்கில நாட்டில் நுழைய அனுமதி மறுத்ததற்கு, இவருடைய எழுத்துக்கள் மிகவும், முக்கியமான காரணம்.

ஆனால் இவருடைய எழுத்துக்கள் பலமுறை பொய்த்துப் போயிருக்கின்றன.

சகோதரி இர்ஷத் ஜஹானும் இன்னும் ஐந்து பேரும் காவல்துறையினரால் குறிப்பாகச் சொன்னால் எதிர்தாக்குதல் என்ற பெயரில் குஜராத் அரசின் தீவிரவாத தடுப்படை கொலை செய்தபோது அது உளவுத் துறையின் அபார சாதனை எனக் கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதினார்.

இந்த கட்டுரைகளைத் தி இந்துப் பத்திரிக்கை முதல் பக்கத்தில் எட்டுக் காலம் (Eight Column) தலைப்பிட்டு, செய்தியைப் போட்டது.

நாள்கள் நகர்ந்தன பல விசாரணைகள் நடைபெற்றன. அந்த பெண் இர்ஷத் ஜஹான் உட்பட அனைவரும் கொலை செய்யப்பட்டது அப்பட்டமான படுகொலை என்பதும் அங்கே எதிர்தாக்குதல் எதுவுமில்லை என்பதும் தெளிவுபடுத்தப்பட்டன. இர்ஷத் ஜஹானும் இன்னும் நான்கு ஆண்களும் முந்தைய நாளே ஒரு பண்ணை வீட்டில் வைத்துக் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்ற செய்தி உண்மைப் படுத்தப்பட்டது.


இர்ஷத் ஜஹானையும் இன்னும் நான்கு பெண்களையும் கொலை செய்த காவலர்கள் இன்று சிறையில் அடைக்கப் பட்டுள்ளார்கள்.

இப்படி பொய்களை எழுதி குவிக்கும், இவருக்கு எதிராக, முஸ்லிம்கள் நடத்தும் மில்லி கெஜட் போன்ற ஆங்கில பத்திரிகைகள், உருது பத்திரிகைகள், தமிழில் வைகறை வெளிச்சம் ஆகிய ஒரு பெரும் போரை நடத்தி வருகின்றன. சில பத்திரிக்கைகள் பச்சையான, கொச்சையான கேள்விகளை அவர் முன் வைத்தன. இவற்றினால் பெருமளவில் பாதிக்கப்பட்ட அவர், இப்போது கஷ்மீர் பற்றி ஒரு கட்டுரையை எழுதி சற்றே முஸ்லிம்களின் கோபத்தைத் தணித்திருக்கின்றார்.

இத்தனையையும் சொல்லும் இவர், கஷ்மீரில் அத்தனை அநியாயங்களுக்கும் வழிவகுக்கும் கஷ்மீரின் ஆயுதந்தாங்கி படையினரின் சிறப்பு அதிகாரம் பின் வாங்கப்பட வேண்டும், என்பதை சொல்லவே இல்லை.

எனினும் நமது பிரச்சாரம், இந்த சிறப்பு அதிகாரம் பின் வாங்கப்படும் வரையும், பாதுகாப்புப் படையினர் என்ற பெயரில், கொலைகளையும், கற்பழிப்புகளையும் செய்து கொண்டிருக்கும் இராணுவத்தினர் தண்டிக்கப்படும் வரையும் தொடரும். இன்ஷா அல்லாஹ் .

# கஷ்மீரில் இராணுவ ஆட்சியை அகற்றுங்கள்: (AFSPA) பற்றி ஐ.நா. சபை அறிக்கை




கஷ்மீரில் மக்கள் சொல்லொண்ணா துயரங்களுக்கு ஆட்படுத்தப்பட்டு வருகின்றார்கள். இதனை நாம் கஷ்மீரின் பாதி விதவைகள் - கஷ்மீரின் அவலம் என்றெல்லாம் வரிசைப்படுத்தி வைகறை வெளிச்சம் வாசகர்களுக்குத் தந்து வருகின்றோம்.

கஷ்மீரில், நடக்கும் கற்பழிப்புகள், படுகொலைகள் இவற்றை இராணுவத்தினரே முன்னின்று செய்து வருகின்றார்கள். ஆனால் அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க முடிவதில்லை, காரணம், அவர்களைப் பாதுகாத்திட சிறப்புச் சட்டம் ஒன்று இருந்து வருகின்றது, அதைத்தான் ஆயுதப் படைகளின் சிறப்பு அதிகார சட்டம் என அழைக்கின்றார்கள். "ARMED FORCES SPECIAL POWERS ACT:" இதனை சுருக்கமாக "AFSPA" என ஆங்கிலத்தில் அழைக்கின்றார்கள். நாம் அதை "ஆபசிஅச" என தமிழில் அழைக்கின்றோம்.

இந்த சட்டத்தை அகற்றி விட்டு கஷ்மீரில் கொலைகளையும் கற்பழிப்புகளையும் நடத்தும், இராணுவத்தின் மீது நடவடிக்கைகளை எடுங்கள். இளைஞர்களை உயிரோடு வாழவிடுங்கள், பெண்களை கற்போடு வாழ விடுங்கள், என்றொரு எதிர் முழக்கத்தை நாம் வெகுநாள்களுக்கு முன்னரே எழுப்பி வருகின்றோம்.

இதனை இப்போது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பிரிவும், எழுப்பியுள்ளது.

கஷ்மீரில் நடக்கும் கொலைகளை விசாரிக்கவும் அறிக்கைகளை வெளியிடவும் ஒரு தனி அதிகாரியை ஐக்கிய நாடுகள் அவை நியமித்துள்ளது.

இந்த தனி அதிகாரியின் பெயர் 'UNITED NATIONS SPECIAL REPORTER ON EXTRA JUDICIAL, SUMMARY OF ARBITRARY EXECUTIONS'.

இதனை அல்லது இந்த அதிகாரியின் பொறுப்பை இப்படி விரித்துரைக்கலாம்: நீதிக்குப் புறம்பாகவும் அநியாயமாக கூட்டாகவும், தங்கள் விருப்பங்களைத் தணித்துக் கொள்ளவும் செய்யப்படும் கொலைகளை ஆய்வு செய்யும் அதிகாரி.

இப்போது ஐக்கிய நாடுகள் சபையால் நியமிக்கப்பட்டுள்ள இந்தத் தனியதிகாரியின் பெயர் கிறிஸ்தோப் ஹெய்ன்ஸ்.

இவர் விரிவான ஆய்வு ஒன்றை மேற்கொண்டு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், இப்படிக் கூறியுள்ளார்.

கஷ்மீரில் செயலிலிருக்கும் ஆயுதந்தாங்கிய படைகளின் சிறப்பு அதிகாரம், மக்களின் அடிப்படை உரிமைகள் அனைத்தையும் பிடிங்கிக் கொள்கின்றது. மக்களின் "RIGHT TO LIFE" உயிர் வாழும் உரிமையை முற்றாக மறுத்துவிடுகின்றது. ஜனநாயக நாடு எனச் சொல்லிக் கொள்ளும் ஒரு நாட்டில் இதற்கு எந்த வேலையுமில்லை.

இந்த சட்டத்தை நீக்கிடுவதன் மூலம் இராணுவ அணுகுமுறையை அரசு விரும்புவதில்லை. மாறாக, அரசு மக்களின் வாழும் உரிமையை மதிக்கின்றது என்ற செய்தியை மக்கள் மனதில் நிலைபெஷ் செய்யலாம்" எனக் கூறியுள்ளார்.

செய்தி ஆதாரம்: THE HINDU: March 31. 2012. P-19).

# மராட்டிய மாநிலத்தில் டாக்டர் அம்பேத்கரை ஏளனம் செய்த கார்ட்டூன்! பொங்கியெழுந்த தலித்கள்!

டாக்டர் பாபா சஹேப் அம்பேத்கர் அவர்கள்தாம் நாட்டின் அரசியல் சாசனத்தை எழுதியவர்கள்.

மராட்டிய மாநிலத்தில் பள்ளிக் கூடங்களில் படித்துக் கொடுக்கும் பாடங்களுள் ஒன்று "அரசியல் அறிவியல்" "Political Science" இதில் பதினோராம் வகுப்புக்கு ஒரு பாடநூல் தயாரிக்கப் பட்டுள்ளது. அதில் பக்கம் 18-இல் ஒரு (கார்ட்டூன்) கேலி சித்திரம் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த கேலி சித்திரத்தில், டாக்டர் அம்பேத்கர் அவர்கள் ஒரு ஆமையின் மேல் அமர்ந்து பயணம் செய்வது போல் சித்தரித்துள்ளனர்.

ஆமையில் அமர்ந்திருக்கும் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் ஆமையை சாட்டையால் அடிப்பது போலவும் அந்த கார்ட்டூன் சித்தரித்துள்ளது.

ஆமையின் பின்னால் பண்டித ஜெவஹர்லால் நேரு அவர்கள் சாட்டையை ஓங்கிக் கொண்டு நிற்பது போலவும் அந்த கேலி சித்திரம் சித்தரிக்கின்றது.

இந்த கேலி சித்திரத்தின் நோக்கம், டாக்டர் அம்பேத்கர் அவர்கள் ஆமை வேகத்தில்தான் நமது அரசியல் நிர்ணயச் சட்டத்தை எழுதினார் என்பதை எடுத்துக் காட்டுவதே!

ஆனால் பரந்து விரிந்த, இந்த நாட்டில், பல்வேறு மொழி, கலாச்சாரம், இன்னும் அடிமை முறைகள் இப்படி பல குழப்பமான சமூகச்சூழலைக் கொண்ட நாட்டின் அரசியல் நிர்ணயச் சட்டத்தை எழுதுவதற்கு டாக்டர் அம்பேத்கர் அவர்கள் எடுத்துக் கொண்டது மூன்றே வருடங்கள்தாம் என்பதை அரசியல் நிர்ணயச்சட்டத்தின் வரலாற்றை நன்றாக அறிந்தவர்கள் அறிவார்கள்.

இந்த பாடபுத்தகம், NCERT: NATIONAL COUNCIL FOR EDUCATIONAL RESEARCH & TRAINING என்ற தேசிய பாடத்துறையால் தயாரிக்கப்பட்டது.

இந்தத் துறையின் தலைவராக, HRD என்ற மனிதவள மேம்பாட்டுத்துறை, அமைச்சர் கபில் சிபால் தான் இருக்கின்றார்.

இந்த கேலி சித்திரங்களால் புண்பட்ட தலித் மக்கள் மராட்டிய மாநிலத்தில் இயங்கிவரும் மக்கள் குடியரசு கட்சி தலைவர், இராம்தாஸ் அத்தவாலி அவர்களின் தலைமையில் ஒன்று திரண்டார்கள். 1st April 2012 அன்று ஒரு பத்திரிகையாளர்கள் சந்திப்பிற்கும் ஏற்பாடு செய்தார்கள்.

பத்திரிகையாளர் சந்திப்பின் போது ஒருவர் அன்று தென்னிந்தியர்களுக்கு எதிராக சிவசேனா என்ற இயக்கத்தைத் தொடங்கி நடத்திய பால்தாக்கரேக்கு எதிராக கோஷங்களை எழுப்பினார்.

அதனால் அங்கே பெரும் கலவரங்கள் மூண்டன. தலித் மக்கள் மனிதவள மேம்பாட்டு அமைச்சர் கபில் சிபால் அவர்கள் பதவி விலக வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

செய்தி ஆதாரம்: THE HINDU: 2nd April, 2012.

---

*28ம் பக்க தொடர்ச்சி*

இரகசிய திட்டம் ஒன்று தீட்டப்பட்டிருந்தது என்பதோ ஏனோ தெரியவில்லை.

தெரியாமலிருக்க வாய்ப்பில்லை. காரணம், இந்து ராஷ்டிராப் பற்றிய புரோகித்-இன் லேப்டாப் செய்திகள், பத்திரிக்கை உலகு நன்றாக அறிந்த ஒன்று.

அதேபோல் எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்களின் நூலும் எல்லோரும் அறிந்த ஒன்று. அதே நேரத்தில் மொத்தப் பத்திரிக்கை உலகமும், ஒட்டுமொத்தமாக மூடி மறைத்த செய்தியும் இது.

இராணுவத்தின் அசைவுக்குப் பின் இந்து ராஷ்டிரா என்றொரு கொள்கையின் உந்துதல் இல்லாமலிருந்தால், நாட்டுக்கு நல்லது மட்டுமல்ல. அப்படி இல்லை என்பதை ஊர்ஜிதம் செய்திட வேண்டியது, நமது பாதுகாப்பு அமைச்சர் பிரதம அமைச்சர் ஆகியோரின் தலையாயக் கடமை.

-எம்.ஜி.எம்-

# குஜராத் - பத்தாண்டு அவமானம்


ஏறிக்கப்பட்ட குல்பர்க் சொஸைட்டி

பெப்ருவரி 27 / 28 2012-இல் குஜராத் இனப்படுகொலைகள் நிறைவுபெற்று 10 ஆண்டுகள் நிறைவுபெருகின்றன.

இந்த பத்து ஆண்டுகளில் குஜராத் முதலமைச்சர் மோடியைத் தண்டிக்க கிடைத்த அடுக்கடுக்கான ஆதாரங்களை உச்ச நீதிமன்றம் பல்வேறு சாக்குப் போக்குகளையும் சொல்லி மோடியைக் காப்பாற்றிவிட்டது.

இந்திய தண்டனை சட்டங்கள், மும்பாயில் தொடக்க காலத்தில் தென்னியத்தியர்களையும் பின்னர் முஸ்லிம்களையும் கொலை செய்த பால் தாக்கரேயைத் தண்டிக்க முடியாதவையாக ஆகிவிட்டன.

அதே சட்டங்களால் பாபரி மஸ்ஜித் இடித்த அத்வானி வகையறாக்களைத் தண்டிக்க இயலவில்லை.

அதே சட்டங்களால் மோடியையும் சீண்ட முடியவில்லை. அதே நேரத்தில் எந்த முகாந்திரமுமில்லாமல், அப்பாவி முஸ்லிம்கள் கைது செய்யப்படுகின்றார்கள். சிறைகளில் ஆண்டாண்டு காலமாக அடைக்கப் படுகின்றார்கள்.

ஆனால் அன்புச் சகோதரி டீஸ்டா செட்டல்வாட் அவர்கள் 2002 குஜராத் இனப்படுகொலைகளுக்கு ஆளான முஸ்லிம்களுக்கு நீதி தேடிடும் பெரும் பயணத்தில் தன்னை இணைத்துக் கொண்டதால் இந்த இனப்படுகொலைகள், இன்றும் உயிர் பெற்று வருகின்றன.

மக்கள் மன்றத்தில் பேசப்பட்டு வருகின்றன. சிலபல வழக்குகளில், சங்கப் பரிவாரத்தினர் தண்டிக்கப்பட்டும் உள்ளனர்.

இவற்றிற்கெல்லாம் மேலாக மோடியை ஓர் அருவருக்கத்தக்க பொருளாக மக்கள் பார்க்கத்தொடங்கி இருக்கின்றார்கள். இதனால் தான் பிகார் தேர்தல்களின் போது மோடியை அவரது பாரதீய ஜனதா கட்சியை ஆதரித்தே பிரச்சாரத்திற்கு வரக்கூடாது எனக் கூறிவிட்டார்கள்.

அதையும் அவர்களின் பாரதீய ஜனதா கட்சியின் கூட்டணியைச் சார்ந்தவர்களே கூறிவிட்டார்கள். அதேபோல் கன்னடா மத்திய பிரதேசம் இங்கேயும் மோடி தேர்தல் பிரச்சாரம் செய்ய தடைவிதிக்கப்பட்டது.

இப்போது நடந்த உத்திரப்பிரதேச தேர்தலிலும் மோடியைப் பிரச்சாரத்திற்கு அனுமதிக்கவில்லை.

நமது தமிழக முதல்வர் மட்டுந்தான் குஜராத்திற்கு வெளியே அவரை அடிக்கடி அழைத்து விருந்தும், மதிப்பும் வழங்கி வருகின்றார். இங்கேயுள்ள சில பதர்களும் அதற்குப் பக்கத்தாளம் போட்டு வருகின்றார்கள்.

இந்நிலையில் டீஸ்டா செட்டல்வாட் மட்டுந்தான் மோடியை சட்டத்தின் முன்



குல்பர்க சொஸைட்டி நினைவிடத்தில் டீஸ்டா மற்றவர்களுடன்

நிறுத்துவதில் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார் என்ற உண்மை மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப் படுகின்றது.

## டீஸ்டா உருவாக்கிய நினைவிடங்கள்:

குஜராத் இனப்படுகொலைகளின் போது கொலை செய்யப்பட்ட 20,000 முஸ்லிம்களில் ஒருவர், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், இஹ்ஷான் ஜாபரீ. இவருடன் இன்னும் 20 பேர் அதே வளாகத்தில் கண்ட துண்டமாக வெட்டிப் போடப்பட்டார்கள். பின்னர் நெருப்பிட்டு கொளுத்தப் பட்டார்கள்.

இவர்கள், குடியிருந்த குடியிருப்புக்கு "குல்பர்க் சொசைட்டி" எனப் பெயர். அதனை இப்போது குஜராத் இனப்படுகொலைகள் 2002-இன் நினைவிடமாக மாற்றி இருக்கின்றார் சகோதரி டீஸ்டா செட்டல் வாட்.

குஜராத் இனப்படுகொலைகள் 10ஆம் ஆண்டு நிறைவு நாளில், டீஸ்டா செட்டல் வாட்டுடன் துணை நின்ற அனைத்து மக்களும் அங்கே கூடினார்கள்.

"Weeping Wall" என்ற அழுகை சுவர்:

2002 குஜராத் இனப்படு கொலைகளின்போது, பல முஸ்லிம் குழந்தைகளை மோடியின் அடியாட்களான சங்கப்பரிவாரத்தினர் கடத்திச் சென்றார்கள். அவர்களைப் பற்றிய தகவல்கள் எதையும் இன்றளவும் பெற முடியவில்லை. காரணம் மோடியின் ஆட்சியில் அரசின் கடைசி ஊழியனிலிருந்து தொடங்கி முதன்மை அதிகாரிகள் வரை அனைவரும் இந்துத்துவாவைத் தூக்கிப் பிடிப்பவர்களாகவே இருந்து வருகின்றார்கள்.

அந்த காணமற்போன மக்களுக்காக ஓர் "அழுகை சுவரை" எழுப்பி உள்ளார்கள்.

இவையெல்லாம் 2002-இல் இறந்தவர்கள் காணாமற்போனவர்கள் இவர்களின் நினைவை மட்டுமல்ல, மோடி - சங்கப்பரிவாரம் - வாஜ்பேயின் ஆட்சி, ஆகியவற்றின் கோர தாண்டவங்களின் நினைவாகவும் நின்று நிலவும்.

அந்த மக்களின் நினைவாக நாடெங்கும் நடத்தப்பெற்ற நிகழ்வுகளை பின்வரும் முகவரிகளில், இணையதளத்தில் காணலாம்.

அவை 1. www.cjponline.org. 2.www.sabrang.com

இந்த நிகழ்வுகளை தமிழகத்தில் பரவலாக்கும் பொறுப்பை, தாருல் இஸ்லாம் மனித உரிமை தளம், வைகறை வாசகர் வட்டம் ஆகியவை,

(அ) குஜராத்-இல் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும்வரை,

(ஆ) மோடியை நீதியின் முன் நிறுத்தும்வரை தொடரும்.

இன்ஷா அல்லாஹ்.

இந்த இதழ் வைகறை வெளிச்சத்தை இதற்காக அர்ப்பணித்திருக்கின்றோம்.

## பத்தாண்டு அவமானம்

அரசு அறிவிப்பின்படி 1000க்கும் அதிகமான பேர் கொலை செய்யப்பட்டதாக அறிவித்தாலும் ஐயாயிரத்துக்கும் அதிகமான பேர் கொலை செய்யப்பட்ட குஜராத் கலவரம் நடந்து முடிந்து பத்தாண்டுகளாகிவிட்டன. 2000 மேற்பட்ட குழந்தைகள் அநாதைகளாகி நிற்கின்றன. அரசு அறிவிப்பின்படியே 400க்கும் மேற்பட்ட குழந்தைகளை காணவில்லை (எரித்து கொன்று விட்டனர்). இன்னமும் இந்த காயங்கள் ஆறாத காயங்களாகவே உள்ளன.

பத்தாண்டுகளுக்கு பின்னும் வழக்குகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த கலவரங்களை எல்லாம் முன்னின்று நடத்தியது மோடி என்பது உலகத்துக்கே தெரிந்தாலும் உச்சநீதிமன்றத்திற்கு அது தெரியாது.

10 வருடங்களாக நீதிமன்றத்திற்கு அலைந்து கொண்டிருக்கும் சய்ராபென் சந்தி என்ற பெண்ணும் ரூபா மோடி என்ற பெண்ணும் கூறுவதை கேளுங்கள்," நாங்கள் இந்த வழக்கின் எல்லா விசாரணைக்கும் வந்துள்ளோம், நாங்கள் உயிருடன் உள்ளவரை இதை விடப்போவதில்லை. அவரையும் (மோடியை) விடப்போவதில்லை. இன்னும் 10 வருடங்கள் ஆனாலும் சரி நீதியை அடைந்தே தீருவோம்"







"We come for every hearing in this case. Until we are alive we are not going to give up. We are not going to leave him (Chief Minister Narendra Modi). We know we will get justice even if it takes another 10 years" (Frontline March 9 2012)

ஆனால் இந்த வழக்குகள் தற்போதைக்கு முடிவதாகத் தெரியவில்லை. சர்தார்புராவில் 33 முஸ்லிம்கள் ஒரு வீட்டில் வைத்து எரித்துக் கொள்ளப்பட்ட வழக்கில் மட்டும் 31 பேருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

ஸகியா ஜாஃபரியின் கண் முன்னாலேயே அவரது கணவர் இஹ்ஷான் ஜாஃபரியும் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்) 69 முஸ்லிம்களும் வெட்டிக்கொல்லப்பட்டு பின்னர் எரிக்கப்பட்டனர். இதில் ரூபா மோடி என்ற பெண்ணின் 13 வயது செல்ல மகன் காணாமல்போனான். இன்று வரை கிடைக்கவில்லை.

கடந்த பத்தாண்டுகளாக நீதிகேட்டு போராடி வரும் இந்த பெண்மணியின் மன உறுதி ஆச்சரியமளிக்கக் கூடியது.

"இந்த நிலையில் நாங்கள் இந்த வழக்கை அவ்வளவு சுலபமாக முடிக்க விடப்போவதில்லை. எவ்வளவு நாட்களானாலும் நீதிகிடைக்கும் வரை நாங்கள் இதை நடத்திக் கொண்டேயிருப்போம். இந்த 10 வருடத்தில் எதுவுமே நடக்கவில்லை என்று கூறமுடியாது. மோடியின் பெயர் பயங்கர கலவர வழக்கில் இணைக்கப்பட்டுள்ளது. மோடியின் பெயர் உலகெங்கும் அசிங்கப்பட்டுபோய் உள்ளது. இந்த வழக்கிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதன் மூலம் மோடியின்

## குஜராத் கலவர வழக்குகள் சிலவற்றின் நிலைகள்:

### ☞ நரோதா பாட்டியா

இதுவரை 285 சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டுள்ளன,

அரசு தரப்பு வாதம் தொடர்கிறது.

முடிவதற்கு குறைந்த பட்சம் நான்கு மாதங்களாகும்.

குற்றம் சாட்டப்பட்டவர்களில் 49 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குற்றம் சாட்டப்பட்டவர்களில் 13 பேர் சிறையில் உள்ளனர்.

### ☞ குல்பர்க் சொஸைட்டி

இதுவரை 338 சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டுள்ளன.

எதிர்தரப்பு வாதம் தொடர்கிறது.

தீர்ப்பளிக்க மீது உச்சநீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

குற்றம் சாட்டப்பட்டவர்களில் 56 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குற்றம் சாட்டப்பட்டவர்களில் 10 பேர் சிறையில் உள்ளனர்.

### ☞ ODH வழக்கு ஒன்று

இதுவரை 67 சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டுள்ளன.

குற்றம் சாட்டப்பட்டவர்களின் இறுதி அறிக்கை வாங்கப்படுகிறது.

மூன்று மாதங்களில் முடிவடையக்கூடும்.

### ☞ ODH வழக்கு இரண்டு

இதுவரை 158 சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டுள்ளன.

தீர்ப்பு அளிக்கப்பட உள்ளது.

குற்றம் சாட்டப்பட்டவர்களில் அனைவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

### ☞ நரோதா காம் வழக்கு

இதுவரை 168 சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டுள்ளன.

விசாரணை அதிகாரியும் குறுந்தகடும் (சிடி) பரிசோதிக்கப்பட உள்ளனர்.

வழக்கு விசாரணை முடிய குறைந்தது 6 மாதங்களாகும்.
குற்றம் சாட்டப்பட்டவர்களில் அனைவரும் (85 பேர்) பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

### ☞ சர்தார்புரா வழக்கு

இதுவரை 112 சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டுள்ளன.
நவம்பர் 9 2012ல் தீர்ப்பு அளிக்கப்பட்டது.
31 பேர் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளனர்.
பெப்ரவரி 2012ல் குற்றவாளிகள் மேல் முறையீடு செய்துள்ளனர். தற்போது அனைவரும் பிணையில் உள்ளனர்.

*உண்மை நிறத்தை அனைவரும் அறிந்து கொண்டனர். உண்மை என்னவெனில் மோடியின் கைகளில் இரத்தக்கறை படிந்துள்ளது. அவ்வளவு சுலபமாக அதனை அவர் அழிக்க முடியாது" என்று கூறும் ஸகியா ஜாஃபரிக்கு 70 வயது. ஸகியா இன்னமும் மோடி ஆளும் சூரத்நகரில் தான் தன் மகனுடன் வசித்து வருகிறார்.*

"Now, at this stage, we won't let them close the case so easily. We will keep it going for however long it takes to get justice, You cannot say that in 10 years nothing has happened. Modi's name is linked to terrible communal riots. His name is badnaamed (sullied) all over the world. Everyone knows his true colours since this case has got so much attention. The fact that he has blood on his hands… he cannot wipe that off so easily" (Frontline March 9 2012)

*ரூபா மோடியும் அவரது கணவர் தாரா மோடியும் இன்னும் அவரது இரண்டு பிள்ளைகளும் குல்பர்க் சொஸைட்டியில்*



வசித்து வந்த முஸ்லிம் அல்லாதோர்.

கலவரம் நடந்த 28 பெப்ரவரி 2002 தான் ரூபா மோடி தன் மகன் அசாரை கடைசியாக பார்த்தது. இன்று வரை அசாரை தேடிக்கொண்டிருக்கிறார் ரூபா மோடி. அவனும் குல்பர்க் சொஸைட்டியில் காணாமல் போன 28 பேர்களில் ஒருவனாகிப் போனான். கண்ணின் இமைப்போல காத்து காத்து வளர்த்த ஒரே மகன்.

அவன் பிணத்தை கண்ணால் காணும் வரை அவன் இறந்து போனதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறி இன்று வரை அவனை தேடிவருகிறார் ரூபா. எல்லா மருத்துவமனை பிணவறைகளையும் தேடியாகிவிட்டது. எல்லா காவல்நிலையப் படிகட்டுகளையும் ஏறியாகிவிட்டது. பல முறை போஸ்டர்கள் ஒட்டியாகிவிட்டது. ஆனால் அசாரை கண்டுபிடிக்கமுடியவில்லை.

ஆத்திரத்தில் கண்கள் சிவக்க கண்ணீர் கொட்டிய வண்ணம் ,"மோடியும் அவரது வெறி கும்பலும் தண்டணை பெறும் வரை எனக்கு மரணம் வந்தாலும் விடப்போவதில்லை. ஜாஃபரி சாஹேப் வீட்டில் இருந்தபோது உதவி கேட்டு நாங்கள் அழுத அழுகை எவ்வாறு மோடியாலும் அவரது காவல்துறையாலும் உதாசீனப்படுத்தப்பட்டது என்பதை பார்த்து விட்டோம். அவர்கள் இதற்கு பதில் சொல்லியே ஆக வேண்டும்."

என்று கூறுகிறார் ரூபா மோடி.

இவரது வாழ்க்கையை தான் "பர்சானியா" என்று படமாக எடுத்தார்கள்.

கலவரம் நடந்த அன்று என்ன நிகழ்ந்தது என்பதை ரூபா மோடி கூறுகிறார்.

"அன்று தொலைக்காட்சியில் கோத்ராவில் ரயில் எரிக்கப்பட்டது என்ற செய்தியை காட்டினார்கள். நான் அந்த செய்திக்கு அவ்வளவாக முக்கியத்துவம் தரவில்லை. என்னுடைய இரண்டு பிள்ளைகளும் டியூஷன் சென்றிருந்தார்கள். என் கணவர் அவரது அலுவலகத்தில் இருந்து எனக்கு போன் செய்து ஆங்காங்கே கலவரங்கள் நடந்து வருகின்றன. கவனமாக இருங்கள் என்று கூறினார். நான் என் பிள்ளைகளை வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டேன். எங்களது பக்கத்து வீடுகளின் மாடிகளில் பலர் கும்பலாக குழுமத் தொடங்கினர். அப்போது அவர்களில் ஒருவன் ஒரு கோடாரியை எங்களை நோக்கி தூக்கிக் காட்டினான். எங்களுக்கு பயம் வந்து விட்டது.

நாங்கள் எல்லோரும் ஜாஃபரி சாஹேப்

வீட்டில் குழுமினோம். அவரால் எங்களுக்கு உதவ முடியும் என்று நம்பினோம். அதற்குள்ளாகவே அவரது வீட்டின் முன் நூற்றுக்கணக்கில் ஆட்கள் குழுமத்தொடங்கி விட்டனர். அவர்கள் நெயில் பாலிஷை போன்ற ஒரு இரசாயணப் பொருளை வீட்டிற்குள் தூக்கி எறிந்தனர். அதற்கு முன்னதாகவே வீட்டிற்குள் வரும் தண்ணீர் குழாயை துண்டித்துவிட்டனர். அந்த இரசாயணம் வீட்டிற்குள் வந்து விழுந்ததும் வெடித்து எரியத்தொடங்கியது.

அதே சமயம் அக்கம்பக்கத்து வீடுகளில் பெண்கள் அலறும் சத்தம் கேட்ட வண்ணம் இருந்தது. பல பெண்கள் கற்பழிக்கப் பட்டது பின்னர் எங்களுக்கு தெரிய வந்தது.

அன்று மாலைக்குள் கிட்டத்தட்ட அனைத்து அறைகளும் எரிந்து விட்டன. மாடிக்கு செல்ல ஓர் ஏணி இருந்தது. அதை பிடித்து ஏற முயன்றோம். அப்போது பல பேர் நெருப்பினால் எழுந்த புகையால் மயக்கமுற்று கீழே விழுந்தனர். "என் மரணம் உங்களை காப்பாற்றும் என்றால் நான் இறந்து போகிறேன்" என்று ஜாஃபரி சாஹேப் கூறியது என் காதில் விழுந்தது. அது தான் அவர் கடைசியாக கூறியது. அவர் அந்த வெறி கும்பலால் கொலை செய்யப்பட்டார்.

அதுவரை என் இரண்டு பிள்ளைகளும் என்னுடன் தான் இருந்தனர். கடைசியாக ஜாஃபரி கொல்லப்பட்ட இந்த களேபரத்தில் நான் கீழே விழுந்துவிட்டேன். அம்மா எழுந்திரு! அம்மா எழுந்திரு! என்று என் மகள் கத்தும் சத்தம் எனக்கு கேட்டது. அவள் தான் என் மகனின் கையை முதலிலிருந்தே பிடித்துக் கொண்டிருந்தாள். என்னை காப்பாற்றுவதற்காக அவள் அவன் கையை விட்டு விட்டாள். நான் எழுந்து பார்த்த போது என் மகள் மட்டுமே நின்று கொண்டிருந்தாள். நாங்கள் அசு! அசு! என்று என் மகன் அசாரை கூப்பிட்டுக்கொண்டே இருந்தோம். நாங்கள் மேல் தளத்திற்கும் ஒரு வழியாக சென்று விட்டோம். அங்கிருந்தும் அசாரை தேடினோம். எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

நான் கீழே செல்ல முயன்றேன். எல்லோரும் வேண்டாம் அந்த கூட்டம் உங்களை கொன்றுவிடும் என்று கூறினார்கள். ஸகியா அவர்கள் மட்டும் " ரூபாவை விட்டுவிடுங்கள் அவள் ஒரு தாய்" என்று கூறினார். கடைசியாக உதவி எங்களை வந்தடைந்த போது என் மகனைப்போன்ற தோற்றமுடைய ஒருவன் சைபாக் காவல் நிலையத்தில் இருப்பதாக தகவல் வந்தது. நான் அசு! அசு! என்று கத்திக் கொண்டே ஓடினேன். ஆனால் அது அசார் அல்ல. இன்று வரை நான் ஓடிக்கொண்டு தான் இருக்கிறேன். என் ஓட்டத்தை நிறுத்தவில்லை.

இரண்டு வாரங்களுக்கு பிறகு நான் குல்பர்க் சொஸைட்டிக்கு சென்றேன். காலனி முழுவதும் எரிந்துவிட்டிருந்தது. என் வீடு மட்டும் தொடப்படவில்லை. என் வீட்டில் வாசலில் மாதாவின் படம் தொங்கிக்கொண்டிருந்தது. அவர்கள் அதனால் இது ஓர் இந்துவின் வீடு என நினைத்திருக்கலாம். சில நேரங்களில் நான் நம் வீட்டை விட்டு போகாமலிருந்தால் நாம் பாதுகாப்பாக இருந்திருப்போம், நம் மகனும் நம்மை விட்டு பிரிந்திருக்கமாட்டான் என்று நினைப்பதுண்டு" என்று தனக்கு நேர்ந்த நிகழ்வை கண்ணீருடன் படம் பிடித்து காட்டுகிறார் ரூபா மோடி.

இந்த இரண்டு பெண் சிங்கங்களும் மோடியையும் அவரது சகாக்களையும் அவ்வளவு சுலபத்தில் விடப்போவதில்லை என்பது மட்டும் தெரிகிறது. இது போன்ற போராட்டங்களில் நமக்கு தேவை எதையும் தாங்குகின்ற மன உறுதி. அது இருந்தால் மட்டுமே இந்த அரக்கர்களை எதிர் கொள்ள முடியும் என்பது ஸகியா ஜாஃபரியும் ரூபா மோடியும் நமக்கு கற்றுத் தரும் பாடம்.

**தாருல் இஸ்லாம் ஃபவுன்டேஷன்**

நடத்தும்
சமுதாய விழிப்புணர்வு பொதுக்கூட்டம்
இன்ஷா அல்லாஹ் வருகின்ற
29.04.2012 அன்று மாலை 7
மணியளவில் பழைய
வண்ணாரப்பேட்டையில் டிபிகே
தெருமுனை சென்னை- 21-ல்
நடைபெற உள்ளது. அனைவரும்கலந்து
கொண்டு பயனடைய விரும்புகிறோம்.

**உரை :**

**மு. குலாம் முஹம்மது**
**இல்யாஸ் ரியாஜி**

# ஸகியா ஜாஃபரியின் பத்தாண்டு போராட்டம்

- பெப்ரவரி 2012ல் குஜராத் கலவரம் நடந்தது.
- ஜூன் 8 2006ல் ஸகியா ஜாஃபரி நீதிமன்றத்தில் மோடியின் மீதும் இன்னும் 61 பேர் பேதும் முதல் தகவல் அறிக்கை (எஃப்.ஐ.ஆர்) பதியப்பட வேண்டி வழக்கு தொடர்ந்தார்.
- நவம்பர் 2007ல் ஸகியா ஜாஃபரியின் மனு தள்ளுபடி செய்யப்பட்டது. ஸகியா ஜாஃபரியும் சி.ஜே.பி என்ற சிடிசன் ஃபார் ஜஸ்டிஸ் அண்டு பீஸ் அமைப்பும் 2008ல் உச்ச நீதிமன்றத்தை சிறப்பு விடுமுறை மனுவில் அணுகினர்.
- மார்ச் 3ல் உச்சநீதிமன்றத்திற்கு உதவியாக பிரசாந்த் பூஷன் என்ற வழக்கறிஞர் நியமிக்கப்பட்டார்.
- ஏபர்ல் 4 2009ல் வழக்கு எஸ்.ஐ.டி என்ற சிறப்பு விசாரணைக் குழுவிடம் விசாரணைக்கு விடப்பட்டது.
- ஜனவரி 2010ல் எல்லா உரைகளும், கோப்புகளும் எஸ்.ஐ.டி இடம் வழங்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.
- மார்ச் 14 2010 எஸ்.ஐ.டி விசாரணை அறிக்கையை தாக்கல் செய்தது.
- சிஜேபி என்ற சிடிசன் ஃபார் ஜஸ்டிஸ் அண்டு பீஸ் அமைப்பு 800 பக்க தொலைபேசி அழைப்பு அறிக்கைகளை வெளியிட்டது. இது நானாவதி கமிஷனிடமும் எஸ்ஐடி இடமும் சிஜேபி அமைப்பால் வழங்கப்பட்டது. எஸ்ஐடி இந்த தொலைபேசி அழைப்பு அறிக்கைகளை கணக்கில் எடுத்துக் கொள்ளவே இல்லை.
- குஜராத் அரசின் எதிர்ப்பை தொடர்ந்து 26 அக்டோபர் 2010ல் பிரசாந்த் பூஷன் பதவி நீக்கப்பட்டு அவ்விடத்தில் ரோஹின்டன் நரிமன் என்பவர் "அமீகஸ் கியூரே" ஆக நியமிக்கப்பட்டார். அதனை அவர் ஏற்றுக்கொள்ளாததால் நவம்பர் 2010ல் ராஜூ ராமசந்திரன் என்பவர் நியமிக்கப்பட்டார்.
- ஜனவரி 2011ல் ராஜூ ராமசந்திரன் தன்னுடைய 10 பக்க அறிக்கையை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.
- 15 மார்ச் 2011ல் உச்சநீதிமன்றம் எஸ்.ஐ.டி என்ற சிறப்பு விசாரணைக்குழுவை மேலும் விசாரிக்க உத்தரவிட்டது.
- ஏப்ரல் 2011 டீஸ்டா செடல்வாட்டின் அறிக்கையும் சஞ்சய் பாட்டின் அறிக்கையும் பதிவு செய்யப்பட்டது.
- 22 ஏப்ரல் 2012ல் பாட் அஃபிடவிட் ஒன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.
- 5 மே 2012ல் உச்சநீதிமன்றம் தனது உதவி வழக்கறிஞரான "அமீகஸ் கியூரே" ஐ சாட்சிகளுடனும் காவல்துறை அதிகாரிகளுடனும் எஸ்ஐடி என்ற சிறப்பு விசாணை குழுவையும் சேர்த்து சந்திக்கும்படி உத்தரவிட்டது.
- ஜூலை 2011ல் ன "அமீகஸ் கியூரே" தனது அறிக்கையை தாக்கல் செய்தார்.
- 12 செப்டம்பர் 2012ல் உச்சநீதிமன்றம் இவ்வழக்கை ஆரம்பநிலை விசாரணை நீதிமன்றத்திற்கு திருப்பியது.
- 15 டிசம்பர் 2011 ஸகியா ஜாபரியும் சிஜேபியும் உச்சநீதிமன்றத்தில் எஸ்.ஐ.டி இன் அதிகப்படியான காலதாமதம் குறித்து மனுதாக்கல் செய்தனர்.
- 8 பெப்ரவரி 2012ல் எஸ்.ஐ.டி வேகவேகமாக ஓர் அறிக்கையை தாக்கல் செய்தது. ஊடகங்கள் இது ஓர் பகுதி அறிக்கையே என செய்தி வெளியிட்டன.
- பெப்ரவரி 9 2012ல் ஸகியா ஜாபரியும் சிஜேபியும் உச்சநீதிமன்றத்தில் இரண்டு மனுக்களை தாக்கல் செய்தனர். ஒன்று எஸ்.ஐ.டி தாக்கல் செய்த அறிக்கையின் நகலினை தங்களுக்கு தர கோரியும் மற்றொன்று உச்சநீதிமன்றத்தின் உத்தரவு(பத்தி 9)க்கு எஸ்.ஐ.டி கட்டுப்படவில்லை என கூறியும் அந்த இரண்டு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன. நீதிபதி எஸ்.ஐ.டிக்கு நோட்டீஸ் அனுப்பினார்.

# குஜராத் கலவர வழக்குகளை நடத்திடும் முஸ்லிம் வழக்கறிஞர்கள்


Advocate Yusuf Shaikh


குஜராத் - இல் நரேந்திர மோடியும், சங்கப் பரிவாரமும் ஏற்படுத்திய பீதியில், இனப்படு கொலைகளுக்கு உள்ளானவர்களைப் பாதுகாத்திட யாரும் முன் வந்திடவில்லை.

முஸ்லிம்கள் துரத்தப்பட்டும், கொலை செய்யப் பட்டும் வந்ததால், அவர்களால் எதுவும் செய்திட இயலவில்லை. பிற்றை நாள்களில் முஸ்லிம்களில் சிலர் நெஞ்சுயர்த்தி நின்றார்கள். அவர்களை ஆட்சியிலிருக்கும் மோடி எல்லா விதமான அல்லல்களுக்கும் ஆளாக்குகின்றார் என்றாலும் எழுந்து நின்று போராடு கின்றார்கள்.


Advocate Aslam Baig

அவர்களில் பெருவாரியாக முஸ்லிம் வழக்கறிஞர்களும் உண்டு இவர்கள் அனைவரும் பீஸ்டா செட்டல் வாட் நடத்திவரும் CITIZENS FOR PEACE AND JUSTICE சிட்டிசன்ஸ், ஃபார் பீஸ் அண்ட் ஜஸ்டிஸ் என்ற அமைப்பின் கீழ் தாம் இந்த வழக்குகளை நடத்திவருகின்றார்கள்.

இந்த அமைப்பின் கீழ் ஒன்றுபட்டு இந்த வழக்கறிஞர்கள், இந்த வழக்குகளை எடுக்கவில்லை என்றால், அந்த மக்களின் அவலங்கள் நீதிமன்றங்களை எட்டி இருக்காது.


Advocate Sameer Mansuri

குஜராத் - நீதிமன்றங்களில் பதிவான வழக்குகள் மிகவும் குறைவு. பதிவான வழக்குகளையும் நிதிமன்றங்கள் வேண்டுமென்றே இழுத்தடித்தன. காரணம் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு ஆதங்கத்தில் காணாமற் போய்விடுவார்கள். அல்லது காணாமற் ஆக்கப்பட்டுவிடுவார்கள்.


Advocate SM Vohra


ஆனால், ஏதுமறியாத - படிப்பறிவற்ற - மக்களின் மன நிலைகளை தளர்ந்தோ, தூர்ந்தோ போகாமல், இந்த வழக்கறிஞர்களே காப்பாற்றினார்கள்.

அந்த வழக்கறிஞர்கள் அனைரும், பெப்ருவரி 27 / 28 2012 - இல் குல்பர்க் சோசைட்டியில் ஒன்று கூடினார்கள். அன்று ஒவ்வொரு வழக்கிலும் என்ன நடந்தது? அவை எப்படி நடந்தன என்பதையும் விவாதித்தார்கள். அதன் சுருக்கத்தை இங்கே தருகின்றோம்.


Advocate Salim Shaikh

வழக்கறிஞர், யூசுஃப் ஷேஹ்:

“பாதிக்கப்பட்டவர்கள் சங்க பரிவாரத்திற்கும், அதன் எடுபிடியாகச் செயல்படும் காவல்துறைக்கம் பயந்து ஓடிவிடாமல், பத்து வருடமாகக் காப்பாற்றுவது பெரும் வேலை. வழக்கறிஞராகிய நானும் சுதந்திரமாக குஜராத்-ஐ சுற்றி வந்திட இயலாது, அவ்வாறு வந்திட வாய்ப்புக் கிடைத்திடும் நாள்


Advocate Sadik Shaikh


Advocate Mohammed Hussain

என் வாழ்வின் திருநாள்”.

யூசுஃப் சேஹ்வும், அவருடைய சக வழக்கறிஞர்கள் அஸ்லம் பேக், ஷமீர் மன்சூரி ஆகியோருந்தான் சர்தார் புரா வழக்கை நடத்தினார்கள்.

இந்த ‘சர்தார் புரா’ வழக்கில் 31 சங்கபரிவாரத்தினருக்கு - இந்துத்துவ தீவிரவாதிகளுக்கு - ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. வழக்கறிஞர்களை தங்கள் ஆட்களை வைத்து மிரட்டிக் கொண்டே இருக்கின்றார்கள்.

ஆனால் அவர்கள் அனைவருக்கும் பிணையும் வழங்கப்பெற்று இந்தத் தண்டனைக்கெதிராக அவர்கள் மேல்முறையீடு செய்துள்ளார்கள்.


Advocate Irshad Mansuri

இந்த மூன்று முஸ்லிம் வழக்கறிஞர்களும், இப்போது மகத்தானதொரு சவாலை எதிர்கொள்கின்றார்கள். அது, 2002 இனப்படுகொலைகள் முன்னரே தீட்டப்பட்ட சதிகளின் வெளிப்பாடு. அதில் மொத்த அரசு இயந்திரமும் உண்டு. முதலமைச்சர் நரேந்திர மோடிக்கு நேரடி தொடர்புண்டு என நிரூபிப்பதே! இவர்கள் அனைவரையும் நீதியின் முன் நிறுத்தித் தண்டிக்க வேண்டும் என்பது தொடர்ந்த சவால் அதுவரை மூச்சுவிடாமல் உழைப்பது, என முடிவு செய்துள்ளார்கள். இதில் அவர்கள் வெற்றிபெற ‘துஆ’ செய்வோம், இன்ஷா அல்லாஹ் துணை நிற்போம்.


Advocate Nasir Shaikh

வழக்கறிஞர் எஸ்.எம். வோஹ்ரா அவர்கள் தாம் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இஹ்ஷான் ஜாஃப்ரி அவர்கள், கொலை செய்யப்பட்ட குல்பர்க் சொசைட்டி வழக்கை கவனித்து வருகின்றார்கள். இவருடன் வழக்கறிஞர்கள். சலீம் ஷேஹ், சாதிக் ஷேஹ் ஆகியோர் இணைந்து பணியாற்றுகின்றார்கள்.


Advocate Altaf Jidran

இவர்கள் நீதிமன்றங்கள் எப்படி பாதிக்கப்பட்டவர்களின் வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சுகின்ற மாபாதகத்தைச் செய்து வருகின்றார்கள்.

சாட்சி கூண்டிலே நிற்கும் முஸ்லிம்கள் தங்கள் உறவினர்கள் தங்களின் கண்களின் முன்னாலேயே எப்படியெல்லாம் கொலை செய்யப்பட்டார்கள் என்பதையெல்லாம் விரித்துரைக்க முற்போடும் போது தங்களால் அடக்கிக்கொள்ள முடியாமல் அழுதுவிடுவார்கள். அப்படி அழுதால், நீதிபதிகள், நீதிமன்ற நடவடிக்கையில் குறுக்கீடு (disruption) என்று பதிவு செய்வார்கள். இது அவர்களின் சாட்சியங்கள் பலவீனமானது எனக் காட்டிட பிற்றை நாள்களில் பயன் படுத்தப்படுகின்றன. இதில் உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட, சிறப்புப் புலனாய்வுப் பிரிவு, எங்களுக்கு எதிராக பெரிய சதிகளைச் செய்தது.


Advocate Rajemohammed Shaikh

Suhel Tirmizi



குல்பர்க் சொசைட்டி என்ற குடியிருப்பு முழுமையாக எரிந்த பின்பும் தீயணைப்புப் படையினர் அங்கே வரவில்லை. இன்று வரை கூட ஒரு

தீயணைப்பு வாகனம் அங்கே வந்ததில்லை.

எந்தக் கட்டணமும் வாங்காமல் பத்து ஆண்டுகளாக இந்த வழக்குகளைக் கவனித்து வருகின்றீர்களே உங்களால் எப்படி முடிகின்றது? எனக் கேட்டபோது, அவர்கள் இது எங்கள் தார்மீகக் கடமை அதனால் மோடிகள் அவிழ்த்துவிடும் அநியாயங்களை நாங்கள் இன்முகத்தோடு ஏற்றுக்கொள்கின்றோம், என்றார்கள்.

**Aparna Bhat**



குல்பர்க் சொசைட்டி-ஐ எதிர்த்தவர்களின் பெயர்களைக் காவல் துறையிடம் எடுத்துச் சென்றபோது காவல்துறையினர், பெயர்களை பதிவுச் செய்யவே மறுத்துவிட்டார்கள்.

கொலை செய்தவர்கள், கற்பழிப்புகளை நடத்தியவர்கள், வீடுகளோடு வைத்துக் குடும்பங்களைக் கொழுத்தியவர்கள், கொள்ளைகளில் ஈடுபட்டவர்கள், இவர்களுக்கெல்லாம் குஜராத்தில் பிணைகள் உடனுக்குடன் கிடைத்துவிட்டன. காரணம், அவர்கள் சங்கப்பரிவாரத்தைச் சார்ந்த வர்கள்.

ஏன், இதுபோன்ற குரூரமான குற்றங்களைச் செய்த சங்கப் பரிவாரத்தினருக்கு முன் ஜாமீன்கூட கிடைத்துவிட்டன.

**Mihir Desai**



ஆனால், முஸ்லிம்கள், அவர்கள் அப்பாவிகள் என்பதை நன்றாகத் தெரிந்திருந்தும், பிணை மறுத்தார்கள். கோத்ராவில் சிறை பிடிக்கப்பட்ட ஒரு முஸ்லிமை புற்றுநோய் பீடித்துக் கொண்டது. எவ்வளவோ போராடியும் அவருக்குப்பிணை கிடைக்கவில்லை. இறுதியில் அவர் பிணமாகத்தான் வந்தார்.

இந்தக் கொடுமைகளை நீதித்துறையே கட்டவிழ்த்து விடுகின்றது.

நரோடா கோயான் என்னுமிடத்தில் 186 முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டார்கள். இந்த கொலைகளை திருமதி மயா கோடானி என்ற முன்னாள் சங்கப்பரிவார அமைச்சரே முன்னே நின்று நடத்தினார். இதில் 86 பேர் குற்றஞ் சாட்டப்பட்டார்கள். அவர்கள் அனைவரும் பிணையில் வெளியே சுற்றிக் கொண்டிருக்கின்றார்கள். வேண்டுமென்றே ஒரு வருட காலமாக வழக்கை நிறுத்தி வைத்திருக்கின்றது நீதிமன்றம்.

வழக்கறிஞர்கள் இர்ஷாத் மன்சூரியும் நசீர் ஷேக்கும் ஓத் காவ்ன் வழக்கை கவனித்து வருகின்றார்கள். ஓத் காவ்ன் என்ற ஊரில் மூன்று இடத்தில் நடத்தப்பட்ட கலவரத்தில் 27 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் இரண்டே பேரின் உடல் மட்டுமே கண்டெடுக்கப்பட்டது. அரசாங்கம் இன்று வரை மற்றவர்களின் இறப்புக்கு இறப்பு சான்றிதழ் கூட தரவில்லை. தர மறுத்துவிட்டது. அப்படி இருக்க இவர்கள் எங்கே இந்த கொலைகளுக்கு நிவாரண நிதி தரப்போகிறார்கள் என்று கேட்கிறார் மன்சூரி.

அரசாங்கம் இறப்பு சான்றிதழ் தராததால் உயிர் பிழைத்த இறந்தவர்களின் வாரிசுகள் சொத்துக்களை தங்கள் பெயருக்கு மாற்ற முடியாமல் போய்விட்டது. இதை விட மோசமான நிலை என்னவென்றால் கலவரம் நடப்பதற்கு முன்னால் படேல்களின் இடத்தில் முஸ்லிம்களின் இடம் இருக்கும். அவர்கள் தண்ணீரை பெற்றுக்கொண்ட பின்னர் முஸ்லிம்களும் அந்த தண்ணீரை உபயோகிப்பார்கள். இப்போது அந்த நிலை மாறிவிட்டது. முஸ்லிம்களுக்கு படேல்கள் தண்ணீர் கூட வழங்குவதில்லை.

இந்த வழக்கும் வேண்டுமென்றே இழுத்தடிக்கப்பட்டது. குல்பர்க் சொசைட்டி நரோதா காவுன் வழக்குகளைப் போல இந்த வழக்கிலும் அரசு தரப்பு வழக்கறிஞர் ராஜினாமா செய்தார். இதனால் வழக்கின் விசாரணை தள்ளிப்போனது. கொடுமையான விஷயம் என்னவெனில் இந்த கலவரம் நடந்து கொண்டிருந்த போதே குற்றவாளிகள் பலபேர் முன்னெச்சரிக்கை ஜாமின் பெற்றுக்கொண்டு இந்த கலவரத்தில் ஈடுபட்டது தான்.

மேலே சொன்ன விஷயங்களை எல்லாம்

கூறும் ஷேக் இன்னொரு விஷயத்தையும் நினைவு கூர்ந்தார். "அஹமதாபாத் நகரை நிர்மாணித்த அஹ்மத் ஷா பாதுஷா தன்னுடைய மருமகனையே தப்பிழைத்த காரணத்திற்காக பத்ரா கோட்டையில் தூக்கில் தொங்கவிட்டு நீதியை நிலைநாட்டினார். ஆனால் இன்று அனைத்தையும் இழந்து நிற்கும் இந்த மக்களுக்கு நீதி கிடைக்க 10 வருடங்களுக்கு மேலாகியும் காத்துக்கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது மிகப் பெரிய கொடுமை" என்று கூறுகிறார்.

வழக்கறிஞர்கள் அல்தாஃப் ஜித்ரான் ராஜாமுஹம்மது ஷேக் ஆகிய இருவரும் நரோதா பாடியா வழக்கை நடத்தி வருகின்றனர். "இவ்வழக்கில் 62 பேர் குற்றவாளிகள். அதில் டெகல்காவின் இரகசிய கேமராவில் சிக்கிய பாபு பஜ்ரங்கி, முன்னாள் அமைச்சர் மாயா கோடானி போன்றோரும் அடங்குவர். இவர்களில் 12 பேர் தற்போது சிறையில் உள்ளனர். இதுவரை 327 பேர் விசாரிக்கப்பட்டு விட்டனர். பாபு பஜ்ரங்கி போன்றோர் டெகல்கா இரகசிய கேமரா முன்பு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் இந்த வழக்கிற்கு மிக உதவியாக இருக்கும். குறைந்த பட்சம் இந்த வழக்கிலாவது நீதி கிடைக்கும் என்று நம்புகிறோம், இதுவரை நீதிபதி நியாயமானவர் என்று நம்பிக்கொண்டிருக்கிறோம்" என்று கூறுகின்றனர் இவ்விரு வழக்கறிஞர்களும்.

"2002 குஜராத் கலவரத்தினால் தேசமே உடைந்து போனது. என்.ஜி.ஓ எனப்படும் அரசு சாரா நிறுவனங்கள் பல குஜராத் வந்தன. சில வருடங்கள் மட்டுமே குஜராத்தில் தங்கி இருந்தன. ஆனால் டீஸ்டா செடல்வாட் மட்டும் பாதிக்கப்பட்டவர்களை இந்த சட்டரீதியான போராட்டத்தில் உற்சாகப்படுத்தும் வேலையை தொடர்ந்து செய்து வருகிறார். எங்களின் திட்டம் இதுதான். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அவர்கள் கண் முன் குற்றவாளிகள் சுதந்திரமாக விடுவிக்கப்பட்டால், பாதிக்கப்பட்டவர்கள் இழந்திருக்கும் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் இழப்பீடு செய்யப்படவில்லையெனில் அவர்கள் பதிலடி தர நேரிடலாம். அதனால் மதசார்பற்ற நாடு கடுமையாக பாதிக்கப்படும்." என்று கூறுகிறார் திர்மிசி.

அபர்ணா பாட், சஞ்சய் பரீக், காமினி ஜெய்ஸ்வால், ரமேஷ் புக்ரம்பம், மிஹிர் தேசாய், கவுதம் படேல் போன்றோர் இந்த நீதிப்போரில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ள சில வழக்கறிஞர்கள்.

இந்த வழக்கறிஞர்களின் எண்ணமெல்லாம் பாதிக்கப்பட்டவர்களுக்கு சரியான நீதி குறித்த நேரத்தில் வழங்கப்பட வேண்டும். இல்லையெனில் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு அந்நியர்களாகவே தங்களை உணர்வார்கள். தங்களை இந்த நாட்டை விட்டு அந்நியப்படுத்திக்கொள்ள முயல்வார்கள். அது இந்நாட்டின் பாதுகாப்பிற்கு நல்லதல்ல.

இந்த நீதிக்கான அறப்போரில் நாம் அனைவரும் பங்கேற்க வேண்டியது கட்டாய கடமை. இல்லையெனில் நாடெங்கும் குஜராத்தை உருவாக்க நினைக்கும் சக்திகள் வெல்ல ஏதுவாகி விடும்.


**இறைவனின் அழகிய வழிகாட்டுதல் அனைவருக்கும்!**

**மனிதன் இந்த உலகில் எப்படி வாழ வேண்டும்?**

இந்த வினாவிற்கு முழுமையான விடையே திருக்குர்ஆன். இதனை அறிந்திட வேண்டியது நமது கடமை.

**அறிந்திட விரும்புவோர் இலவசமாக திருக்குர்ஆன் தமிழ்மொழிபெயர்ப்பைப் பெற்றிட கீழ்க்காணும் முகவரிக்கு எழுதுங்கள்.**

**தாருல் இஸ்லாம் ஃபவுண்டேசன் டிரஸ்ட்**

**52/1, மண்ணடி தெரு,**
**கோனிகா கலர் லேப் பில்டிங்**
**4வது மாடி,அறை எண் 7.**
**மண்ணடி சென்னை-1**

**இந்த இலவச விநியோகம் முஸ்லிம்களுக்கு இல்லை.**

# மீண்டும்! மீண்டும் மோடியைக் காப்பாற்றும் உச்சநீதிமன்றம் ....?

வைகறை வெளிச்சம் வாசகர்களுக்குத் தொடர்ந்து ஒரு செய்தியைச் சொல்லி வருகின்றோம். அது,

நமது உச்சநீதிமன்றம் மோடியை '2002' குஜராத் இனப் படுகொலைகளிலிருந்து காப்பாற்றிட தன்னால் இயன்றதையெல்லாம் செய்து வருகின்றது.

இதில் நாம் அடுக்கடுக்கான ஆதாரங்களை அடுக்கி வருகின்றோம். அந்த வரிசையில் இப்போது இன்னொரு ஆதாரம்.

குஜராத் இனப்படு கொலைகளிலிருந்து மக்களின் கவனத்தைத் திசைத்திருப்பிட ஒரு விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டது. அந்த விசாரணை கமிஷனுக்கு மோடிக்கு சாதகமான இன்னுஞ்சொன்னால் மோடிக்கு விசுவாசமான இரண்டு நீதிபதிகள் நியமிக்கப்பட்டார்கள். ஒருவர் நானாவதி, மற்றொருவர் ஷா. நீதிபதி ஷா இறந்து போனதால், இப்போது நீதிபதி நானாவதி மட்டுமே இந்த இனப்படுகொலைகள் பற்றிய விசாரணையை நடத்தி வருகின்றார். இன்னொரு நீதிபதியும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த கமிஷனிடம், 2002 குஜராத் இனப்படுகொலைகளை முன்னின்று நடத்திய முதலமைச்சர் நரேந்திர மோடியையும் அழைத்து விசாரிக்க வேண்டும், அவரது வாக்கு மூலங்களையும் பதிவு செய்திட வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டபோது, அதை இந்த கமிஷன் பத்தாண்டுகளாக நிராகரித்து வருகின்றது.

வேறு வழி இன்றி உச்சநீதிமன்றம் வரை சென்றார்கள். உச்ச நீதிமன்றம் மோடி விவகாரத்தில் இதுவரையும் ஒரு தலைபட்சமாகவே நடந்து வருகின்றது.

உச்ச நீதிமன்றம் மோடியை விசாரணைக்கு அழையுங்கள் என நாங்கள் ஆணை இட முடியாது என்று கூறிவிட்டது. உச்ச நீதிமன்றத்திற்கு இந்த வழக்கைக் கொண்டு சென்றவர் அம்ரேஷ் எம்.பட்டேல் என்பவர். இவர் அங்கம் வகிக்கும் அமைப்பாகிய ஜன் சங்கார்ஷ் மஞ்ச், என்ற அமைப்பின் சார்பில் தான் வழக்குத் தொடரப்பட்டது. இவர்களின் சார்பில் மூத்த வழக்கறிஞர் "காலிங்ஸ் கண்சால் வஸ்தான்" ஆஜரானார்.

ஆனால் உச்ச நீதிமன்ற நிதிபதி D.K.ஜெயின் மோடிக்காக வாதாடும் ஒரு வழக்கறிஞரைப் போல் வாதங்களை வைத்தார்.

எந்தச் சட்டத்தின் கீழ் நாங்கள் (உச்ச நீதிமன்றம்) மோடியை அழைத்து விசாரிக்க வேண்டும் எனக் கேட்டார் நீதிபதி D.K.ஜெயின்.

இதற்கு மூத்த வழக்கறிஞர் "காலிங் கன்சால்வஸ்," நானாவதி கமிஷன் எந்த வரைமுறையுமன்றி தன் விருப்பப்படி செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. பத்தாண்டுகளாக விசாரணையை இழுத்தடித்துக் கொண்டிருக்கின்றது. இதுபோன்ற விவகாரங்களில் உச்சநீதிமன்றம் இதற்கு முன்னால் தலையிட்டு செம்மைப்படுத்தி இருக்கின்றது என்று நீதிபதி முன் கூறிய காலிங் கன்சால்வஸ், இதற்கு முன்னால் உச்ச நீதிமன்றம் தலையிட்ட வழக்குகளைப் பட்டியலிட்டார்.

ஆனால் நீதிபதி D.K.ஜெயின் (உடன் அமர்வு அனில் R.டேவ்) ஆகியோர், சில முக்கிய விசாரணை கமிஷன்கள் 15 ஆண்டுகளாகக் கூட விசாரணைகளை நடத்தி இருக்கின்றன, என மோடியின் சார்பில் வாதிட்டார்கள்.

அதனால் பத்தாண்டுகள் ஒன்றும் நீண்ட காலமல்ல. விசாரணை கமிஷன் தன் அறிக்கையை சமர்ப்பிக்குமுன், அது தன் விருப்பப்படி, முறையற்று செயல்படுகின்றது எனக் குற்றம் சாட்டப்படுவது முறையற்றது. அறிக்கை தாக்கல் செய்யுமுன் தலையிடுவது "உச்சநீதிமன்றம்" எல்லை மீறி செயல்படுகின்றது என்ற குற்றச்சாட்டைச் சம்பாதிக்க வேண்டியதுவரும், என்று எதிர் வழக்காடினார் நீதிபதி டி.கே.ஜெயின்.

உச்ச நீதிமன்றம் இதற்கு முன் பல விசாரணை கமிஷன்களில் தலை இட்டது, எல்லை மீறிய செயலா? என எதிர்வாதத்தை "காலிங் கன்சால்வஸ்" வைத்தபோது நீதிபதி ஜெயின் 2002-இன் குஜராத்-இல் நடந்தவை விரும்பத்தகாதவைதான். நமது மனங்களிலிருந்து, துடைத்தெறிந்திட இயலாதவைதான். நாங்கள் பல வழக்குகளை மீண்டும் விசாரிக்க ஆணை இட்டிருக்கின்றோம். ஆனால் இந்த விசாரனை கமிஷன் விவகாரத்தில், நாங்கள் (உச்ச நீதிமன்றம்) தலையிடுவது எல்லை மீறிய செயல் என்றே கருதுகின்றோம், என்றார்.

இத்தனையும் சொன்ன நீதிபதி ஜெயின் உச்ச நீதிமன்றத்தால், நியமிக்கப்பட்ட, சிறப்புப் புலனாய்வுக் குழுவின் இறுதி அறிக்கையை நானாவதி கமிஷன் முன், சமர்ப்பிப்பது அவசியமா? என்பதை ஆலோசிக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த அறிக்கை, குஜராத் இனப்படுகொலை 2002-இல் குல்பர்க் சொசைட்டி என்ற கூட்டுக் குடியிருப்பில் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இஃஹ்ஷான் ஜாபரியும் இன்னும் 90 பேரும், கண்டதுண்டமாக வெட்டப்பட்டு எரிக்கப்பட்ட வழக்கு சம்மந்தமாக தயாரிக்கப்பட்ட அறிக்கை!

மோடிக்கு எதிராக எல்லா ஆதாரங்களும் இருந்தும் மோடியின் மீது வழக்குத் தொடரும் அளவில் எந்த வழக்குமில்லை எனக் கூறியது என்பதை நாம் வாசகர்களுக்கு தெளிவுபடுத்தி இருக்கின்றோம். முந்தைய வைகறைகளின் வழி.

இப்போது, உச்சநீதிமன்ற நீதிபதி அந்த அறிக்கையை நானாவதி கமிஷன் முன் சமர்பிக்க வேண்டும் எனக் கூறுவது. நிச்சயமாக மோடியைக் காப்பாற்றும் செயல், காரணம் அந்த அறிக்கை ஒரு சதியின் வெளிப்பாடு.

இனி, இந்த அறிக்கை - அதாவது உச்ச நீதிமன்றம் நியமித்த சிறப்புப் புலனாய்வுக்குழு தயாரித்த இந்த அறிக்கை, நானாவதி கமிஷன் முன் சமர்ப்பிக்கப் படுமேயானால், நானாவதி கமிஷன், இந்த அறிக்கையைக் காட்டியே மோடியை ஒட்டுமொத்தமாக குஜராத் இனப்படுகொலைகள் 2002-இலிருந்து விடுவித்துவிடும்.

இதனால் தான் அடித்துக் கூறுகின்றோம் இதுவரை உச்ச நீதிமன்றம் மோடியைக் காப்பாற்றிடுவதில் மிகவும் கவனமாக இருக்கின்றது என்று.

நாம் இந்த வகையில் அடுக்கிடும் ஆதாரங்களில் இதுவும் ஒன்று.

இன்ஷா அல்லாஹ் இது போன்ற ஆதாரங்கள் கிடைக்கும் போதெல்லாம் அஃது நமது வாசகர்களுக்கும் கிடைக்கும்.

செய்தி ஆதாரம். THE HINDU 27th March 2012. A detailed report by J.Venkatesan.

- MGM -

# மனித உரிமை ஆர்வலர்களைக் கண்டால் மோடி ஓட்டம்...?

ஐக்கிய நாடுகள் சபையின், சிறப்புப் பார்வையாளர் கிறிஸ்தோப் ஹேன்ஸ் குஜராத் இனப்படுகொலைகளுக்குப் பின் முஸ்லிம்கள் முற்றாக குஜராத்திலிருந்து ஒழிக்கப்படுகின்றார்கள் என்பதை அறிந்தார்.

உடனேயே அவர் குஜராத்-ஐயும் சுற்றிப் பார்க்க ஏற்பாடுகளைச் செய்தார்.

2002 முஸ்லிம் இனப்படுகொலை புகழ் மோடி ஏற்பாடுகளையெல்லாம் செய்வதுபோல் நடித்தார்.

கடைசி நிமிடத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புப் பார்வையாளர், குஜராத் வரக்கூடாது எனக் கூறிவிட்டார். தன்னை குஜராத்திற்குள் அனுமதிக்கவில்லை என்பதை ஓர் அறிக்கையாக வெளியிட்டுள்ளார், ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புப் பார்வையாளர்.

முஸ்லிம்கள் - கிறிஸ்தவர்கள் - தலீத்கள் பழங்குடியினர், பெண்கள் - இவர்களின் உரிமைகள் சதா சர்வகாலமும் ஆபத்தில் தான் இருக்கின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

Source: 1 Statement of UN Special Rapportaeur. TH: 31/3/2012.- MGM -

# வல்லவர் மோடி.....?

## மோடி அடித்தக் கொள்ளை ரூபாய் 43,000 கோடிகள்: குஜராத் அரசு தணிக்கைக் குழு அறிக்கை!

குஜராத் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கின்றது, என உலகுக்குக் காட்டப்படுகின்றது.

இதற்காக, மோடி செய்யும் மோசடிகள் முற்றாக மறைக்கப்படுகின்றன.

ஆனால் CAG என்றழைக்கப்படும் Comptroller & Auditor General என்ற அரசு தணிக்கை குழு அரசுக்கு வரவேண்டிய பணம் 43,000 நாற்பத்து மூன்றாயிரம் கோடியை மோடி வழங்கி விட்டதாகக் கூறி இருக்கின்றது தனது தணிக்கை அறிக்கையில்.

இந்த தணிக்கை அறிக்கையைப் படித்தவர்கள் கடந்த 52 ஆண்டுகளாக குஜராத்-ஐ ஆட்சி செய்தவர்களில் மிகவும், அதிகமாக ஊழல் செய்த முதலமைச்சர் நரேந்திர மோடிதான் எனக் குறிப்பிட்டுள்ளார்கள். (TH: 31/3/2012).

## குஜராத்-இல் பெட்ரோலியம்

நமது நாட்டில் சில மாநிலங்களில் பெட்ரொல், எரிவாயு 'GAS' ஆகியவை கிடைக்கின்றன. குஜராத் இதில் ஒன்று, இந்த பெட்ரோல், எரிவாயு ஆகியவற்றை அகழ்ந்தெடுக்க குஜராத்தில் அரசு நிறுவனம் ஒன்று இயங்கி வருகின்றது. அதன் பெயர் குஜராத் மாநில பெட்ரோலியம் கார்ப்பரேஷன்: GUJARAT STATE PETROLEUM CORPORATION (GSPC).

இந்த மாநில பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஒரு தனியார் நிறுவனம் வழியாகத்தான் எல்லா நடவடிக்கைகளையும் வைத்துக் கொள்ள வேண்டும். இது மோடி ஆட்சிக்கு வந்தது முதல் செயலிலிருக்கும் எழுதப்படாத சட்டம்.

இந்த தனியார் நிறுவனத்தின் பெயர் அத்னி எனர்ஜீஸ் & எஸ்ஸார் ஸ்டீல் கம்பெனிகள். இந்த நிறுவனத்தின் சொந்தக்காரர் வேறுயாருமல்ல மோடிதான். நேரடியாக, அதனை நிருவகிக்காமல், தனது பினாமிகள் வழியாக நிருவகித்து வருகின்றார்.

கிருஷ்ணா - கோதாவரி ஆற்றுப் படுகைகளில் கொட்டிக் கிடக்கும் பெட்ரோல் மற்றும் எரிவாயுவை அகழ்ந்தெடுப்பதில் இந்த நிறுவனம் கனடா நாட்டோடு சில ஒப்பந்தங்களைப் போட்டுள்ளது. இதில் அரசுக்கு வரவேண்டிய 16,000 கோடி ரூபாயை இந்த நிறுவனம் - அதாவது மோடியின் நிறுவனம் கொள்ளை அடித்துக் கொண்டது.

அதேபோல் 502 கோடி டாலர்கள் செலவில் பெட்ரோல் மற்றும் எரிவாயுக்களை அகழ்ந்தெடுத்திருக்கலாம். ஆனால் இந்த மோடியர் நிறுவனம், 1302 கோடி டாலரை செலவாகக் காட்டி இருக்கின்றது. அதில் 700 கோடி டாலர்களைக் கொள்ளை அடித்துள்ளது.

அதேபோல் அரசு நேரடியாக பெட்ரோலை அகழ்ந்தெடுக்கும் நடவடிக்கைகளில் இறங்கி இருந்தால் அதாவது GSPC என்ற குஜராத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் இறங்கி இருந்தால், 531.94 கோடி ரூபாயில் முடிந்திருக்கும். ஆனால், அதை மோடியின் பினாமி கம்பெனி 6,258 கோடிகளுக்குக் குத்தகைக்குக் கொடுத்து மீதியைக் கொள்ளை அடித்துக் கொண்டது.


அதேபோல் குஜராத்-இலுள்ள "கச்" பகுதியிலுள்ள முந்ரா 'Mundra' வில் அரசுக்கு சொந்தமான இடங்களை அரசு விற்பனை செய்தது. இந்த இடம் இயற்கை எரிவாயு அதிகமாகக் கிடைக்குமிடம். இந்த இடத்தை விற்றே இருக்க வேண்டாம். ஆனாலும் சதுரமீட்டர் ஒன்றுக்கு ரூபாய் 32 வீதம் விற்பனை செய்தது. அதை மோடியின் பினாமி கம்பெனிக்குத்தான் (அத்னி & எஸ்ஸார் ஸ்டீல்ஸ்) விற்பனை செய்ய வேண்டும் என்பது மோடியின் இரகசிய ஆணை.

ஆகவே இந்த இடம் மோடியின் கம்பெனிக்கே விற்பனை செய்யப்பட்டது. அதனை மோடியின் கம்பெனி சதுரமீட்டர் ரூபாய் 32க்கு வாங்கி சதுர மீட்டர் 1500 ரூபாய்க்கு விற்பனை செய்தது பல ஆயிரம் கோடிகளை மோடி இதிலும் கொள்ளை அடித்தார்.

## மோடியின் உத்தி:

தொடர்ச்சி 65ம் பக்கம்

# டெல்லியில்: இஸ்ரேலிய தூதரகத்தின் முன் குண்டு வைத்தது ஈரான் அல்ல. இந்திய மத்திய உளவுத்துறை “ரா” அறிக்கை




இந்தியாவிலுள்ள ஊடகங்கள் எல்லாம் ஈரானை தீவிரவாத நாடாகக் காட்டிட முயற்சி செய்திடும்போது நமது மத்திய உளவுத்துறையின் வெளிநாட்டுப் பிரிவு, ‘ரா’ RAW - என்ற RESEARCH AND ANALYSIS WING இஸ்ரேலிய குண்டு வெடிப்பிற்கும், ஈரானுக்கும் எந்தச் சம்மந்தமுமில்லை என அறிவித்துள்ளது.

இந்த உண்மையை IBN-7 - என்ற தொலைக்காட்சி மட்டும் காட்டியது.

நமது மத்திய உளவுத்துறையின் வெளிநாட்டுப் பிரிவு பேங்காங்கிலிருந்து அனுப்பிய இரகசிய உளவில் இதை கூறியுள்ளது.

இந்த இரகசிய உளவில் இஸ்ரேலிய நாட்டின் சர்வதேச சக்திகளின் தற்போதைய வெளிப்பாடுதான் டெல்லியில் தொடங்கி இன்னுமுள்ள நாடுகளிலும் நடந்த குண்டு வெடிப்பு எனக் கூறியுள்ளது.

அதேபோல், இந்த குண்டு வெடிப்புகளில், டெல்லி ‘பேங்காக்’ ஜார்ஜிய ஆகிய மூன்று இடங்களிலும் வெடித்த குண்டுகள் சக்தி குறைந்தவை. இவற்றிற்கான சதிகள் அமெரிக்காவில், யூதர்களால் தீட்டப்பட்டவையே - ஆனால் குண்டு வெடிப்புகள் நடந்த நாடுகளில் அமெரிக்க, யூத கையாட்கள் பயன்படுத்தப் பட்டுள்ளார்கள். இந்த குண்டுகளின் நோக்கம் யாரையும் கொலை செய்வதில்லை. மாறாக இந்தியா, பேங்காக் ஆகிய நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே உள்ள உறவுகளைச் சேதப்படுத்தவும், ஈரானை ஒரு தீவிரவாத நாடாக உலக மக்கள் மன்றத்தில் காட்டுவதுமேயாகும்.

இதுபோன்ற குண்டு வெடிப்புகளில் ஏதேனும் அப்பாவி முஸ்லிம்களைப் பிடித்து இவர்கள் தான் குண்டு வைக்க அந்த இடத்தை நோட்டமிட்டார்கள் என்றொரு புரளியைக் கிளப்புவது வழக்கம். ஆனால் அதை டெல்லி குண்டு வெடிப்பில் யாரும் செய்ததாகச் சொல்லவில்லை. இதையும் இப்போது நமது உளவுத்துறைகள் ஊர்ஜிதம் செய்துள்ளன.

ஒரு ‘சிவப்பு’ நிற மோட்டார் பைக் ஒன்று குண்டு பொருத்தப்பெற்ற இஸ்ரேலிய தூதரின் மனைவியின் காரை கடந்து சென்றதாகச் சொன்னவையும் பொய் எனத் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், இந்தியா என்ன செய்யப்போகின்றது என்ற கேள்வி எழுந்துள்ளது. அமெரிக்காவில் தீட்டப்பட்ட சதி ஒன்று டெல்லியில் சந்தடி இல்லாமல் நிறைவேறியுள்ளது. இதுபோன்ற அமெரிக்க சதிகள் டெல்லியில் நிறைவேறாமல் தடுப்பதற்கு என்ன செய்யப் போகின்றோம்?

இந்த மொத்த நிகழ்விலும், ஈரான் சொன்னவையெல்லாம் உண்மையென நிரூபனமாகியுள்ளன. அவற்றுள் ஒன்று இந்த குண்டு வெடிப்புகளெல்லாம், ‘மொசாத்’ இன் கையிருப்புகள் என்பதாகும்.

இங்கே இன்னொரு உண்மை வெகு நாள்களாகவே விளம்பரப்படுத்தப்பட்டு வருகின்றது, அது மொசாத் தனக்கென தாராளமாகத் தளம் அமைத்து இயங்கி வருகின்றது என்பதே!

இந்திய அரசு நமது உறவுகளை இஸ்ரேலுடன் வலுப்படுத்தும்போது, இஸ்ரேல் தன்னுடைய நாசகரமான

வேலைகளுக்கு நம் நாட்டில் தளம் அமைத்துக் கொள்கின்றது என்பதை நாம் மறந்திடக்கூடாது.

இந்தப் பின்னணியில் நமது உளவுத்துறைகள் கேரளாவில் நடந்த நிகழ்ச்சி ஒன்றை குறிப்பிட்டிருக்கின்றன. இங்கே அதை சொல்வது குறிப்பிடத்தக்கது.

அஃது டெல்லி குண்டு வெடிப்பிற்கு 15 நாள்களுக்கு முன் கேரள மாநிலத்தில் நடந்த நிகழ்வு ஒன்றுக்காக இஸ்ரேல் நாட்டைச் சார்ந்த தம்பதிகள் (யூதர்கள்) இருவர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் விசாரணைகளுக்குள்ளாக்கப்பட்டார்கள். விசாரணை முடிந்தவுடன் அவர்கள் இருவரும் இஸ்ரேலுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

இது நமது நாடு வழக்கமாக செய்துவரும் ஒரு தவறாகும். அதாவது, அமெரிக்கர்களும், யூதர்களும் குண்டு வெடிப்புகளோடு சம்மந்தப்பட்டுக் கைது செய்யப்படும் போதெல்லாம் அவர்கள் உடனேயே அவர்களின் நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு விடுகின்றார்கள்.

அதே நேரத்தில் இது போல் பிடிபடுபவர்கள் முஸ்லிம்களாக இருக்கும் பட்சத்தில் அவர்களைப் பிடித்து வைத்துக் கொள்வோம். அவர்கள் எந்தக் குண்டு வெடிப்புகளையும் செய்யவில்லை என்றாலும் அவர்கள் மீது வெளிநாட்டு தீவிரவாதிகள் என்ற முத்திரைக் குத்தப்படும். பின்னர் நடக்கும் குண்டு வெடிப்புகளில் அவர்கள் பிணைக்கப்பட்டு நிரந்தரமாக அவர்களின் வாழ்க்கை பாழாக்கப்படும். அவர்களின் குடும்பங்கள் சீரழிக்கப்படும்.

கேரளாவில் கொச்சியில் கைது செய்யப்பட்ட யூத தம்பதிகளின் ஏற்பாட்டில் தான் டெல்லியில் நடந்த கார் குண்டு வெடிப்பு நடந்திருக்கும் என்பது பரவலான கருத்து. இதை நமது வெளிநாட்டு உளவுத்துறையும் உறுதி செய்திருக்கும் என நம்பப்படுகின்றது. இந்தத் தம்பதிகள் வெகுநாள்களாகவே இந்தியாவுக்கு எதிராக செயல்படுகின்றார்கள்; அதற்கு இந்தியாவைச் சார்ந்த இளைஞர்களைப் பயன்படுத்து கின்றார்கள் என்பது நமது வெளி விவகார உளவுத்துறையின் கருத்து.

இந்தத் தம்பதியர் எந்த அளவுக்கு டெல்லிகுண்டு வெடிப்போடு சம்மந்தப் பட்டுள்ளார்கள் என்பதை அறிந்திட கேரளாவுக்கு சிறப்புப் புலனாய்வுத் துறையினர் அனுப்பப்பட்டுள்ளார்கள்.

நமது மத்திய வெளி விவகாரத்துறை தந்துள்ள தகவல்களின் அடிப்படையில், இஸ்ரேலிய உளவுத்துறையாகிய 'மொசாத்' இவைபோன்ற குண்டு வெடிப்புகளை அடிக்கடி நடத்தி வருகின்றன.

தொடக்க காலத்தில் இவற்றை தீவிரவாதத்தை எதிர்கொள்ளும் மாற்றுத் தீவிரவாதம் (Counter Terrorism) என்றார்கள். ஆனால் இப்போது அந்த தீவிரவாதத்தில் அவர்களே ஈடுபடுகின்றார்கள்.

குறிப்பாக, டெல்லி குண்டு வெடிப்புகளில், பயன்படுத்தப்பட்ட "Pressure Bombs" அழுத்த வெடிகுண்டுகள், இஸ்ரேலுக்கே, சொந்தமானவை. இவற்றை அடிக்கடி இஸ்ரேல் பயன்படுத்தி வருகின்றது. முன்னர் பெட்ரோலை ஏற்றிச் செல்லும் கப்பல்களை வெடிக்கச் செய்திட இந்த குண்டுகள் பயன்படுத்தப்பட்டன. பின்னர் பீரங்கிகளை வெடிக்கச் செய்ய இந்த குண்டுகள் இஸ்ரேலால் பயன்படுத்தப் பட்டன.

இதே வகை குண்டுகள்தாம், ஈரானை சார்ந்த அணுவிஞ்ஞானிகளைக் கொலை செய்யவும், மொசாத் என்ற இஸ்ரேலிய உளவுத்துறையால் பயன்படுத்தப்பட்டது. இதனை நாம் வைகறை வெளிச்சம், பிப்ருவரி/மார்ச்சு 2012 இதழில் தெளிவுப்படுத்தி இருந்தோம்.

அதேபோல் அந்த அழுத்த குண்டுகளைப் பொருத்திட பயன்படுத்தப்பட்ட இரசாயனப் பொருள்கள் இஸ்ரேலிய உளவுத்துறையாகிய மொசாத்திற்கே சொந்தமானவை.

இப்படி நமது வெளி விவகாரத்துறையின் உளவுத்துறை உருப்படியான தகவல்களைத் தந்துள்ளது. ஆனால் நமது ஊடகங்கள் அவற்றை முற்றாக மறைத்துவிட்டன. ஆனால் IBN7 என்ற ஒரே ஒரு ஹிந்தி தொலைக்காட்சி மட்டும் ஒரே ஒரு முறை இந்தச் செய்திகளைக் காட்டியது. இது வலது சாரி சிந்தனை உள்ள டெய்னிக் ஜார்கானின் தொலைக்காட்சி பிரிவு என்பது குறிப்பிடத்தக்கது.

Source: FIRST PAGE Report 1 - 15 April 2012 M.G.

For more details:
http://Khaber.ibnlive.com/news/67291/1.

# பிரிக்ஸ் மாநாடும் அமெரிக்காவின் சூழ்ச்சியும்

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சைனா, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளைக் கொண்ட கூட்டமைப்பு ஒன்று வேகமாக வளர்ந்து வருகின்றது.

இதனை ஆங்கிலத்தில் "பிரிக்ஸ்" BRICS என அழைக்கின்றார்கள்.

B - BRAZIL

R - RUSSIA

I - INDIA

C - CHINA

S - SOUTH AFRICA

இந்த நாடுகளின் முக்கியத்துவம் என்னவெனில் உலக மக்கள் தொகையில் 42% இந்த ஐந்து நாடுகளில் தாம் வாழுகின்றார்கள்.

உலக வர்த்தகத்தில் 8 சதவிகிதம், இந்த நாடுகளின் வழியாகத்தான் நடக்கின்றன.

உலகில் மூலதனமாக புழங்கும் பணத்தில் 53 சதவிகிதம், இந்த நாடுகளில் தாம் புழக்கத்தில் இருக்கின்றது.

இந்த அமைப்பு பிரிக்ஸ், எல்லா விதத்திலும், உலகை ஆட்டிப் படைக்கும் வல்லமையைப் பெற்றது. இதில் பிரேசிலும் நமது நாடும் சற்று அமெரிக்காவுக்கு அஞ்சுபவை.

சைனாவும், ரஷ்யாவும் அமெரிக்க ஆதிக்கத்தை ஒடுக்க வேண்டும், என்பதில் முனைப்போடு இருப்பவை.

சைனா பொருளாதார வளர்ச்சியில், அமெரிக்காவை வீழ்த்திவிட்டது.

அமெரிக்கர்கள் அதிகமாக அஞ்சும் ஆயுதம் என்பது "Chinese Price" "சைனாவின் விலை" என்பார் மத்தியாஸ் சேங் என்ற பொருளாதார வல்லுநர், தான் எழுதிய "Future Fast Forward" என்ற நூலில்.

ஆமாம் அமெரிக்கர்கள் ஒரு பொருளுக்கு ரூபாய் நூறு என விலை நிர்ணயித்தால் சைனா அதனை ரூபாய் இருபதுக்கோ இருபத்தைந்திற்கோ உலக அங்காடியில் விற்பனைக்குக் கொண்டு வந்திடும். இதனால் அமெரிக்காவின் பொருள்கள் விற்பனையாகாமல் நின்று விடும்.

இதனால் தான் சைனாவின் விலை என்பது அமெரிக்கர்களுக்கு (அலர்ஜி) ஒவ்வாமை என்பார்கள்.

ரஷ்யாவைப் பொறுத்தவரை, அது ஆப்கானிஸ்தான் முஜாஹித்களோடு மோதி வீழ்ந்துவிட்டது, இது 1989-இல் நடந்தது. விரிவான விளக்கங்களுக்குப் பார்க்க "ஆப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு" வேர்கள் வெளியீட்டகம்.

ஆனால், இப்போது மெத்த சிரமத்தோடு முன்னேறி வருகின்றது. அதற்கு ஈரான் பெரிதும் உதவி வருகின்றது. இதனால் ஈரானுக்கு உலக விவகாரங்களில், ரஷ்யா பெரிய அளவில் கைமாறு செய்து வருகின்றது.

அண்மையில் ஈரானை தாக்குவோம் என இஸ்ரேலும் அமெரிக்காவும் முழங்கியபோது, ரஷ்யாவும், சைனாவும் அப்படி ஈரானை தாக்கினால் போர் விரும்பத்தகாத, அதிரடி திருப்பங்களை எதிர்கொள்ளும் என எச்சரித்தது நினைவு கூற தக்கது.

நம் இந்தியாவைப் பொறுத்தவரை அமெரிக்காவை அறிவுத்துறை முதற்கொண்டு அனைத்துத் துறைகளிலும் வெற்றி கொள்ளும் ஆற்றலைப் பெற்றது. ஆனால் நமது அரசியல்வாதிகளுக்கு அந்த நெஞ்சுரமுமில்லை, நேர்மையுமில்லை.

எந்த அளவுக்கு மக்கள் நமது அரசியல் தலைவர்களை ஏகடியம் செய்கின்றார்கள் என்றால், இந்தியாவில் யார் பிரதமராக வேண்டும். யார் மாநில முதலமைச்சர் ஆக வேண்டும் என்பதை முடிவு செய்வது அமெரிக்காதான், என்ற அளவுக்கு ஏகடியம் செய்கின்றார்கள்.

நரேந்திர மோடியை நல்லவர் என அறிவித்தது முதன் முதலில் அமெரிக்காதான் என்பதை நாம்,"வைகறை" வாசகர்களுக்குத் தெளிவுபடுத்தி வந்திருக்கின்றோம்.

மோடி பிரதமரானால் இந்திய முஸ்லிம்களைப் பூண்டோடு ஒழிப்பார் என்பது அமெரிக்காவின் திட்டவட்டமான

எதிர்பார்ப்பு. இதனால் இஸ்ரேலும் அவரை ஆதரிக்கின்றது.

இப்படி நமது நாடு அமெரிக்காவுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றது.

ஆனால் ஈரானும் இந்தியாவுக்கு வேண்டும். ஈரானுடைய (பெட்ரோல்) எண்ணெய் நமக்கு வேண்டும். ஈரானில் கொட்டிக்கிடக்கும் எரிவாயு நமக்கு வேண்டும். ஈரானும் இவை இரண்டையும் நாம் விரும்பும் நிபந்தனையின் கீழ் தந்திடத் தயாராக இருக்கின்றது.

ஆனால் எரிவாயுவை நாம் பெறுவதை அமெரிக்கா, வெற்றிகரமாகத் தடுத்துவிட்டது. ஆமாம் (IPI - INDIA PAKISTAN IRAN PIPE LINE) இந்தியா பாகிஸ்தான் - ஈரான் - பைப்லைன் என்ற மாபெரும் திட்டத்தின் கீழ், ஈரானின் இயற்கை வாயு (எரிவாயு) பாகிஸ்தான் வழியாக நம் நாட்டுக்கு வரவிருந்தது.

இந்த 'பைப் லைன்' இயற்கை வாயுவை மட்டும் கொண்டு வராது, இந்த நாடுகளிடையே நட்பையும் நல்லுறவையும் கொண்டு வரும். அதன் வழி இதர துறைகளிலும் முன்னேற்றத்தைக் கொண்டுவரும், என அஞ்சியது அமெரிக்கா. இந்தியாவை நயந்தும், பயந்தும் அச்சுறுத்தியது அமெரிக்கா. அடிபணிந்தது இந்தியா. ஆனால் ஈரானில் இருந்து கிடைக்கும் பெட்ரோல் இல்லாமல் நம்மால் வாழ்ந்திட இயலாது, அதனால் இது விவகாரத்தில் ஈரானின் உதவியை நாடுகின்றோம்.

அமெரிக்கா ஈரான் மனு விதித்த பொருளாதார தடைக்கு எதிராகக் கனைத்துக் காட்டிட தலைப்பட்டுள்ளோம்.

ஆனால் புது டெல்லியில் - நடைபெற்ற நான்காவது பிரிக்ஸ் மாநாடு - [2012 மார்ச்சு (24 - 29)] பல அரிய அறிவிப்புகளைச் செய்தது. அவற்றில் இரண்டு முக்கியமானவை,

*1.* IMF: என்ற INTERNATIONAL MONETARY FUND: சர்வதேச கடன் வழங்கும் அமைப்பின் விதி முறைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும். அத்தோடு அதன் பொருளாதார கொள்கைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

இந்தத் தீர்மானம், இந்த சர்வதேச கடன் வழங்கும் அமைப்பு அமெரிக்காவின் கடைக்கண் பார்வையில் இயங்குவதைக் கண்டிக்கும் அல்லது அதற்கெதிராக மூச்சுவிடும் நிலையை மேற்கொள்வதாகும்.

*2.* ஈரான் விவகாரத்தில் பேச்சு வார்த்தைகளுக்கே முதலிடம் தந்திட வேண்டும். போர், பொருளாதார தடைகள் என்றெல்லாம் பிரகடனப்படுத்தக் கூடாது.

இப்படிச் செல்வதன் மூலம் ஈரான் பெட்ரோலை நாங்கள் வாங்குவோம் என சொல்லாமல் சொல்லி இருக்கின்றன.

இந்தியா, அணு ஆயுதம் அல்லது அணு ஆராய்ச்சி மூலம் மின் உற்பத்தி இவற்றை மனதிற்கொண்டு 1970-களில் அமெரிக்கா கொண்டுவந்த "NPT" Non - Proliferation Treaty அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்தபோது அமெரிக்கா ஈரானை மிரட்டியது போலவே இந்தியாவை மிரட்டியது. பொருளாதார தடையை திணித்தது.

அனைத்தையும் விஞ்சி நமது விஞ்ஞானிகள் அணு ஆராய்ச்சித் துறையில் செய்து சாதித்தார்கள்.

அது போலத்தான் ஈரானும் அதன் விஞ்ஞானிகளும் சாதித்துக் கொண்டிருக்கின்றார்கள். [அல்ஹம்துலில்லாஹ்]

இதனை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

அமெரிக்கா, நாம் தொடங்கிய அணி சேரா நாடுகளின் அணியை ஒன்றுமில்லாமலாக்கியது.

'சார்க்' நாடுகளின் அமைப்பை ஒன்றுமில்லாமல் ஆக்கியது.

இப்போது 'பிரிக்ஸ்' ஐயும் ஒன்றுமில்லாமலாக்கிட ஆவன செய்து வருகின்றது என்பதை கவனத்தில் கொண்டு - அமெரிக்க சூழ்ச்சிகளை முறியடிக்க முன்வந்திட வேண்டும்.

- MGM -

Source: Bricks Resolution.


Edit: TH: 31/3/2012.

# கர்கரேயைக் கொலை செய்தது யார்?

தொடர்

**(III) அஹமதாபாத் குண்டுவெடிப்புகளும் சூரத்தின் வெடிக்காத குண்டுகளும்**

*(26 July 2008)*




* *நரேந்திரமோடிக்கு பிராமணிஸ்ட்கள் கற்றுகொடுத்தபாடம்

* *விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்ட முக்கிய குறிப்புகள் காற்றில் விடப்பட்டன.

* *அஹமதாபாத், மும்பை மற்றும் டெல்லி காவல்துறைகளின் கூட்டு முயற்சிகளின் உதவியுடன் வழக்கை உடைப்பதற்கான உளவுத்துறையின் திட்டம்.

* *கென் ஹேவுட்டை தப்ப விடுவதற்கு முஸ்லிம் கல்வியாளர்களிடம் விசாரணை.

*2008 ஜூலை 26-ம் தேதியன்று அஹமதாபாத்தில் 17 குண்டு வெடிப்புகள் நடந்தன. இதில் 50-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 100 பேர் படுகாயமடைந்தனர்.

## A) ஆரம்பகட்ட அறிக்கை

### (I) முதல் நாளிலேயே முஸ்லிம்கள் மீதும் முஸ்லிம் அமைப்புகள் மீதும் குற்றம் சுமத்துதல்

(1) தாக்குதலில் சிமியின் பங்கு இருப்பதாக காவல்துறை ஆராய்கிறது. (தி ஹிந்து, 27 ஜூலை 2008)

(2) 2002 கோத்ரா சம்பவத்திற்குப் பிறகு நடைபெற்ற கலவரத்தில் தொடர்புடைய அப்துல் ஹலீம் என்பவன் அஹமதாபாத்தின் (Dani Limda) டானி லிம்டா பகுதியில் உள்ள காவல் துறையிடம் பிடிபட்டான். இவன் தடைசெய்யப்பட்ட சிமி அமைப்பைச் சார்ந்தவன். கலவரத்திற்கு பிறகு இவன் தலைமறைவாயிருந்தான். (தி டைம்ஸ் ஆப் இந்தியா, புனே, 28 ஜூலை 2008)

### (II) விசாரணையில் ஐபி என்ற மத்திய உளவுத் துறையின் தலையீடு

(1) உள்ளூர் சிமி உறுப்பினர்கள்தான் குண்டு வெடிப்பை நடத்தியிருக்கிறார்கள் எனவும், லஷ்கரே தொய்பா, ஜெய்ஷ்-இ-முஹம்மத் மற்றும் ஹூஜி ஆகிய அமைப்புகளில் இருந்து வந்ததுதான் இந்தியன் முஜாஹிதீன் அமைப்பு எனவும், தாக்குதலுக்கு நிதியுதவி வெளிநாட்டில் இருந்து பெறப்பட்டிருக்கிறது என்ற கண்ணோட்டத்தில்தான் உளவுத்துறை அதிகாரிகள் பார்த்தனர்.

(2) 2002 வகுப்பு கலவரங்களை தொடர்ந்து தகவல் பரிமாற்றத்தில் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. இதனால் குஜராத் காவல்துறை ரகசிய தகவல்களைப் பெறுவதில் சிரமத்திற்கு ஆளாகிக் கொண்டிருந்தது. வகுப்புவாத கலவரத்திற்கு பிறகு நடைபெற்ற அனைத்து தீவிரவாதத் தடுப்பு நடவடிக்கைகளும் மத்திய புலனாய்வுத் துறையின் யோசனையின்படியே நடந்தேறின.



வெடிக்காத குண்டு செயலிழக்கச் செய்யப்படுகிறது

(தி டைம்ஸ் ஆப் இந்தியா, மும்பை, 27 ஜூலை 2008)

(3) அஹமதாபாத், ஜெய்ப்பூர், ஹைதராபாத், லக்னோ மற்றும் வாரணாசி ஆகிய இடங்களில் நடைபெற்ற குண்டு வெடிப்புகளின் செயல்திட்டங்களையும் அணுகுமுறையையும் கூர்ந்து கவனிக்கும்படி மத்திய உள்துறை அமைச்சர் மத்திய உளவுத்துறையிடம் கேட்டுக்கொண்டார்.

## (III) தீவிரவாத அமைப்புகள் என்று அழைக்கப் பட்டவர்களிடமிருந்து பெறப்பட்ட இமெயில்கள்

(1) குண்டு வெடிப்பிற்கு ஐந்து நிமிடத்திற்கு முன்னால் இந்திய டிவி அலுவலகத்திற்கு இந்தியன் முஜாஹிதீன் என்ற பெயரில் ஒரு இமெயில் பெறப்பட்டது. அதில் குண்டு வெடிப்பிற்கு தாங்கள் பொறுப்பேற்றுக் கொள்வதாகவும், பாதுகாப்புப் படைகளைக் கேலியடித்தும் எழுதப்பட்டிருந்தது. இது சென்ற வருடம் மே 13 அன்று நடந்த ஜெய்ப்பூர் மற்றும் நவம்பர் 23 அன்று நடந்த உ.பி. நீதிமன்ற குண்டு வெடிப்புகளை ஒத்து இருக்கிறது. (சண்டே டைம்ஸ் ஆப் இந்தியா, புனே, புதாரி, 27 ஜூலை 2008)

(2) (அதே இரவில்) எல்.இ.டி மற்றும் ஹீஜி அமைப்புகள் குண்டு வெடிப்பிற்கு பொறுப்பேற்றுக் கொண்டன. (புதாரி, புனே, 27 ஜூலை 2008)

(3) விரைவில் டெல்லியிலும் குண்டு வெடிப்புகள் நிகழும் என்ற இ-மெயில் ஒன்றை தனியார் தொலைக்காட்சி நிறுவனம் பெற்றது. (புதாரி, புனே, 28 ஜூலை 2008)

## (IV) முக்கிய தடயங்கள் : மஹாராஷ்டிரா தொடர்புகள்

(1) ஞாயிறு (27 ஜூலை 2008) அன்று காவல்துறை நவி மும்பையில் அமைந்திருக்கும் குடியிருப்புகளை சோதனையிட்டது. அதில் முந்தைய நாளில் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட இமெயில் வந்த கணிணியையும் கைப்பற்றியது.

இந்தியன் முஜாஹிதீன் என்ற பெயரில் அனுப்பப்பட்ட இமெயிலின் ஐ.பி.(IP) முகவரியைக் கொண்டுதான் அக்குடியிருப்பு கண்டுபிடிக்கப் பட்டது. அலர்பி குஜராத் (Alarbi Gujarat) என்ற அக்கவுண்டை உடைய அந்த இமெயில் கென் ஹேவுட் என்ற அமெரிக்கருக்கு சொந்தமானது. இவர் நவி மும்பையில் உள்ள குடியிருப்பு ஒன்றை வாடகைக்கு எடுத்திருக்கிறார். கேம்பல் ஒயிட் (Campell White) என்ற பெங்களூரை மையமாகக் கொண்டு செயல்படும் நிறுவனத்திற்கு நிர்வாகியாகப் பணியாற்றிக் கொண்டிருந்திருக்கிறார். மேலும் அவர் தகவல் தொழில்நுட்பத்தை பயிற்றுவித்திருக்கிறார். கென் ஹேவுட் தன்னுடைய கம்ப்யூட்டரில் யாரோ ஒருவர் புகுந்து அந்த மெயிலை அனுப்பியதாகத் தெரிவிக்கிறார். உண்மை எது என்பதை உறுதிப்படுத்த வெளிநாட்டி லுள்ள நிபுணர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (தி டைம்ஸ் ஆப் இந்தியா, புனே, புதாரி, 28 ஜூலை 2008)

(2) அஹமதாபாத் குண்டு வெடிப்பை பற்றிய குறிப்புகள் நவி மும்பையில் கிடைக்கப் பெற்றதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (புதாரி, புனே, 28 ஜூலை 2008)




(3) இரண்டு மாருதி வேகன்-ஆர் கார்கள் வெடிபொருள்களை சுமந்து செல்வதாகவும், அவ் வாகனங்கள் சூரத்தில் தனியே நிற்க வைக்கப்பட்டு இருக்கின்றன. அது நவி மும்பையில் பதிவு செய்யப்பட்டது என்ற தகவலை குஜராத் காவல்துறை மும்பை காவல்துறைக்கு தெரியப்படுத்தியது. மும்பை தீவிரவாதத் தடுப்புப் படையினரும் இதை உறுதி செய்தனர். (தி டைம்ஸ் ஆப் இந்தியா, மும்பை, 29 ஜூலை 2008)

### (V) மற்ற அறிக்கைகள்

(1) அதிகமாக குண்டுகள் வைப்பதற்கு சைக்கிளையும் அதன் பின்னால் டிபன் பாக்ஸை நீல நிற பாலிதீன் கவரால் மூடியும் வைக்கப்பட்டுள்ளது. அதே சமயம் மருத்துவமனையில் ஆட்டோ மொபைல்களில் குண்டுகள் வைக்கப்பட்டுள்ளன.

(2) வெடிகுண்டுகள் டைமர் கருவியுடனும் மைக்ரோ பிராசசருடன் இணைக்கப்பட்டிருந்தன. அம்மோனியம் நைட்ரேட் பயன்படுத்தப்பட்டிருப்பதாக முதல் நிலை அறிக்கை கூறுகிறது. (சண்டே டைம்ஸ் ஆப் இந்தியா, புனே, 27 ஜூலை 2008)

(3) ஜெய்ப்பூர், பெங்களூர் மற்றும் அஹமதாபாத் குண்டு வெடிப்புகளில் பயன்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்களும், செயல்முறைகளும் ஒரே மாதிரியாக இருக்கின்றன என்பது கண்டுபிடிக்கப்பட்டது. (மராத்தி டெய்லி புதாரி, புனே, 28 ஜூலை 2008)

(4) 27 ஜூலை 2008 அன்று சூரத்தில் இரண்டு வெடிக்காத குண்டுகள் இரண்டு வேகன் ஆர் கார்களில் கண்டுபிடிக்கப்பட்டது. இரண்டு வாகனங்களும் CNG-யைப் பயன்படுத்தி ஓடுபவை. அஹமதாபாத்தில் அரசு மருத்துவமனையில் நடைபெற்ற குண்டுவெடிப்புகளிலும் CNG-யைப் பயன்படுத்தி ஓடும் வேகன்-ஆர் கார்களே பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. இது சூரத் மற்றும் அஹமதாபாத் நிகழ்வுகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையன என்பதைக் காட்டுகின்றன. (தி டைம்ஸ் ஆப் இந்தியா, புனே, 28 ஜூலை & தி டெலிகிராப், மும்பை, 28 ஜூலை 2008)

### (B) பின்னாளில் வந்த அறிக்கைகள் – சூரத் குண்டுகளும் அதனை தொடர்ந்த முன்னேற்றங்களும்

(1) 2008 ஜூலை 27 முதல் 30 வரை சூரத்தில் 23 குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்க வைக்கப்பட்டன.

(2) சூரத்தில் வைக்கப்பட்ட குண்டுகள் அனைத்தும் சக்தி வாய்ந்தவை. வெடித்திருந்தால் பேரிழப்பு ஏற்பட்டிருக்கும் என வெளிநாட்டில் இருந்து வரவழைக்கப்பட்ட நிபுணர்கள் உறுதிபடுத்தினர். (தி டைம்ஸ் ஆப் இந்தியா, புனே, 31 ஜூலை 2008)

(3) குஜராத்தில் உள்ள டிவிஜி என்ற செய்தி நிறுவனத்திற்கு வந்த கடிதத்தில் ஹூஜி என்ற அமைப்பு அஹமதாபாத் குண்டு வெடிப்பிற்கு தாங்கள் பொறுப்பேற்று கொண்டதாக தெரிவித்தது. (புதாரி, புனே, 31 ஜூலை 2008)

(4) அஹமதாபாத் குண்டுவெடிப்பிற்கும், ஜெய்ப்பூர் மற்றும் ஹைதராபாத் குண்டுவெடிப்பிற்கும் நிறைய ஒற்றுமைகள் காணப்படுவதால் இவ்விரண்டு நகர காவல்துறைகளும் அஹமதாபாத்தை வந்தடைந்தன. (சாகல், புனே, 31 ஜூலை 2008)

(5) அஹமதாபாத் குண்டு வெடிப்பிற்கு ஒரு மணி நேரம் முன்னதாக தான் சூரத்தில் குண்டுகள் வைக்கப்பட்டதாக உள்ளூர் காவல்துறை தெரிவித்தது. அங்கேயுள்ள நபர் 11 மணிக்கு குண்டுகளை பார்த்து காவல்துறைக்கு தகவலை தெரியப்படுத்தியிருக்கிறார். அதாவது முதன்முதலாக குண்டுகளை பார்த்த நேரம் காலை 11 மணி சனிக்கிழமை, 26 ஜூலை 2008. இது எதைக் குறிப்பிடுகிறது என்றால் அஹமதாபாத் தொடர் குண்டுவெடிப்பிற்கு

முன்னர்தான் சூரத்தில் குண்டுகள் வைக்கப்பட்டுள்ளன. (ஏசியன் ஏஜ், 31 ஜூலை 2008)

## (C) மற்ற நிறுவனங்கள் கூறும் கதைகள் - எல்லோருமே முஸ்லிம்களை சுற்றியே தங்களுடைய பார்வைகளை திருப்பினர்

(1)பாகிஸ்தானில் தற்போது பதுங்கியிருக்கும் ரசூல்கான் பர்டியும் முஹம்மத் சுபியாவும் தான் பெங்களூர் மற்றும் அஹமதாபாத் குண்டு வெடிப்புகளுக்கு மூளையாக செயல்பட்டவர்கள் என உளவுத்துறையை சேர்ந்த ஒரு மூத்த அதிகாரி கூறினார். (புதாரி, புனே, 31 ஜூலை 2008)

(2) அஹமதாபாத் தொடர் குண்டுவெடிப்பில் நிழல் உலக தாதா தாவூத் இப்ராஹிமிற்கு தொடர்பு இருப்பதாகவும் சிமி இதில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஈடுபடவில்லை என மும்பை தீவிரவாத தடுப்பு படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தியாவில் உள்ள நிழல் உலக குற்றவாளிகளின் துணையோடு இந்தியன் முஜாஹிதீன் என்ற அமைப்பை தாவூத் ஏற்படுத்தியிருக்கிறார். இதற்கு நிதியுதவி ஐ.எஸ்.ஐ. என்ற பாகிஸ்தான் உளவுத் துறையிடமிருந்து பெறப்பட்டிருக்கிறது. மேலும் நவி மும்பையில் கார்களை திருடிய கும்பல்களுக்கும் தாவூத்திற்கும் தொடர்பு இருப்பதாக சந்தேகிக்கப் படுகிறது எனவும் ஏ.டி.எஸ். தெரிவித்தது. (புதாரி, புனே, 31 ஜூலை 2008)

(3) குஜராத் மற்றும் பெங்களூர் தொடர் குண்டு வெடிப்புகளில் சோட்டா தாவூத்திற்கும், அஹமதாபாத்தை பூர்வீகமாகக் கொண்ட ரசூல்கான் யாகூப் கான் பதானுக்கும் தொடர்பு இருப்பதாக இந்திய உளவுத்துறையும், இந்தியாவிற்கான வெளிநாட்டு உளவு அமைப்பான 'ரா'-வும் உறுதியாக நம்புகின்றனர். பாகிஸ்தானில் உள்ள பெஷாவரிலிருந்து சோட்டா தாவூத் செயல்படுகிறான். இந்தியன் முஜாஹிதீன் என்ற புதிய போராட்ட குழுவை ரசூல்கான் பதான் நிறுவியுள்ளான்.

இந்தியாவின் மிக அதிகமாக தேடப்படும் குற்றவாளியான தாவூத் இப்ராஹிமிடம் இவர்கள் இருவரும் அடிக்கடி தொடர்பு வைத்துள்ளனர். பாகிஸ்தானில் இருக்கும் அவனுடைய கட்டளையின் படியும் பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.-யின் கட்டளையின்படியும் தான் இவர்கள் இருவரும் செயல்படுகின்றனர். (ஏசியன் ஏஜ், மும்பை, 31 ஜூலை, 2008)

(4) அஹமதாபாத் குண்டு வெடிப்பிற்கு பின்னால் பொதுமக்கள் இருக்கிறார்களா என்றும் சூரத்தில் உள்ளூர் ஆதரவு பெறப்பட்டதில் தோற்றுப் போன முயற்சிகளை பற்றியும் காவல்துறை விசாரணை நடத்திக் கொண்டிருந்தது.

சில தகவல்கள் தளவாடங்கள் பெறப்பட்டதில் 'மௌலவி'க்களின் பங்கு இருக்கக்கூடும் என்று கூறுகின்றன. குண்டுவெடிப்பை நிகழ்த்தியவர்களுக்கு உறைவிடம் இவர்கள் அளித்ததாகவும் கூறப்படுகிறது.

அஹமதாபாத், பரூச், மங்க்ரல் ஆகிய இடங்களில் உள்ள மௌலவிக்களை காவல்துறை தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்து கேள்விகளை கேட்பதாகவும், இவர்கள் அனைவரும் மேற்கு வங்காளத்தைச் சார்ந்தவர்கள் எனவும் நம்பத்தகுந்த தகவல்கள் தெரிவித்தன. (டி.என்.ஏ., மும்பை, 1 ஆகஸ்டு, 2008)

(5) குஜராத்தில் ஜனவரி மாதத்தில் நடந்த சந்திப்பில்தான், அஹமதாபாத் தொடர் குண்டுவெடிப்பை நிகழ்த்த 'சிமி' என்ற இஸ்லாமிய மாணவர் அமைப்பு சதி செய்ததாக மும்பை தீவிரவாத தடுப்பு படை சந்தேகிக்கிறது.

மத்திய பிரதேசத்தில் மார்ச் மாதம் கைது செய்யப்பட்ட அப்துல் என்பவன் தீவிரவாத தடுப்பு படையிடம் பின்வருமாறு கூறினான்.

சிமியின் தலைவர் சஃப்தர் நாகூரி, அவரின் உதவியாளர் சிப்லி அப்துல், குஜராத்தில் பெரிய பொறுப்பில் இருக்கும் சஜித் மன்சூரி மற்றும் ஆசிப் கஹ்சி உட்பட 15 பேர் இரண்டு நாள் பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர். ஜனவரி 13, 14-ம் தேதிகளில், பரோடாவில் இருந்து 50 கி.மீ. தொலைவில் உள்ள ஹலோல் என்ற பகுதிக்கு அருகில் இம்முகாம் நடைபெற்றது. குண்டுவெடிப்பிற்கு பின் பரோடாவைச் சேர்ந்த மன்சூரியும், அஹமதாபாத்-ஐ சேர்ந்த கஹ்சியும் தலைமறைவாகிவிட்டதாக நம்புவதாகவும் கூறினான். (டி.என்.ஏ., மும்பை, 4 ஆகஸ்ட், 2008)

## (D) முக்கிய குறிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டன

*(1) கார் திருட்டு வழக்கில் கைது செய்யப்பட்ட ஒருவரை விசாரித்தபோது, அவர் தீவிரவாத நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட திருட்டு கார் ஜூலை 9 மற்றும் ஜூலை 20-ம் தேதிகளில் தலசாரி என்ற சுங்க சாலை (மஹாராஷ்டிராவில் உள்ள தானே மாவட்டத்தில்) வழியாக கடந்து சென்றது என்று கூறினார்.*

*இந்த சுங்கசாலையில் சி.சி.டி.வி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதால் அதில் வண்டியின் நம்பர் மட்டுமல்ல, காரை ஓட்டியவரின் புகைப்படம் கூட பதிவாகியிருக்கும். எனவே, அஹமதாபாத்தில் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களின் புகைப்படங்கள் கிடைத்துவிடும் என நம்புவதாக மும்பை தீவிரவாத தடுப்பு படை கூறியது.*

*ஆனால் கைப்பற்றப்பட்ட பதிவு தட்டு (Hard Disk) நாசமடைந்துவிட்டதாகவும் அதில் எந்த புகைப்படமும் இல்லை எனவும் தீவிரவாத தடுப்பு கண்டுபிடித்தது. கைப்பற்றப்பட்ட பதிவு தட்டில் ஏதேனும் பிரச்சனை உள்ளதா என ஆராய்ந்து கொண்டிருக்கிறோம் என தீவிரவாத தடுப்பு படையின் கூடுதல் ஆணையர் பரம்பீர்சிங் கூறினார். புகைப்படங்கள் அழிக்கப் பட்டிருக்கிறது அல்லது அதன் மேல் வேறு தகவல்கள் பதிவாகியிருக்கிறது. வேண்டுமென்றே இத்தகவல்கள் அழிக்கப்படவில்லையென்றால் அதை திரும்பப் பெற்று விடலாம். இருந்த போதிலும் அப்பதிவு தட்டு தகவல்கள் பதிவு செய்ய திரும்பவும் உபயோகப்படுத்தப்பட்டிருந்தால், அத்தகவலை பெறுவது கடினம் என மேலும் அவர் கூறினார்.*

*சி.சி.டி.வி. கேமராவில் பதிவான தகவல்கள் மாற்றப் பட்டிருக்கக்கூடும் என விசாரணையில் ஈடுபட்ட மூத்த ஐ.பி.எஸ். அதிகாரி கூறினார்.*

*சி.சி.டி.வி. கருவி சரியாக வேலை செய்யவில்லை என்று சுங்கசாலை அதிகாரிகள் ஒரு வாரத்திற்கு முன் தங்களிடம் தெரிவித்தனர் என்று தானே மாவட்ட காவல்துறையினர் கூறினர். இக்காவல் துறையின் கட்டுப்பாட்டின் கீழ்தான் இச்சுங்கச்சாலை இயங்குகிறது. (தி டைம்ஸ் ஆப் இந்தியா, புனே, புனே மிரர், 1 ஆகஸ்ட் 2008)*

*(2) அஹமதாபாத் குண்டு வெடிப்பில் பயன்படுத்தப் பட்ட வெடிபொருள்களையும், சூரத்தில் கண்டு பிடிக்கப்பட்ட வெடிக்காத குண்டுகளையும், அதன் மேல் உள்ள அடையாளங்களை வைத்து பார்க்கும் பொழுது, இவை இரண்டுமே ஆந்திராவில் இயங்கி கொண்டிருக்கும் ஏ.பி. எக்ஸ்ப்ளோசிவ்ஸ் (A.P. Explosives) என்ற நிறுவனத்தில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்நிறுவனம் வெடிபொருள் களையும், வெடிக்கக் கூடிய கம்பிகளையும் தயார் செய்கிறது. (தி இந்தியன் எக்ஸ்பிரஸ், மும்பை, 31.7.2008)*

---

*56ம் பக்க தொடர்ச்சி*

*தணிக்கை குழு இதுபோன்ற கொள்ளைகளை வருடந்தோறும், சுட்டிக்காட்டுகின்றது. ஆனால் இவை வெளிச்சத்திற்கு வருவதில்லை. காரணம் மோடி ஒரு புது உத்தியைக் கையாண்டு வருகின்றார். அது அவர் மாநில பொது கணக்கு குழு (PAC - Public Accounts Committee) மூலம், எல்லாம் சரியாகத்தான் இருக்கின்றது, என்றொரு அறிக்கையை சட்டமன்றத்தில் சமர்பித்து விடுகின்றார்.*

## குஜராத்-இல் எதிர்கட்சியினர்:

*அரசு தணிக்கை குழு தான் அடித்த 43,000 கோடி ரூபாய் கொள்ளையைச் சுட்டிக் காட்டி இருக்கின்றது என்பதை அறிந்த மோடி அதனை எதிர்கட்சியைச் சார்ந்தவர்களுக்கு கிடைக்காமல் செய்திட இன்னொரு உத்தியைக் கண்டுபிடித்தார்.*

*அது இந்த அறிக்கையை சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கவிருந்த நாளுக்கு முன் எல்லா எதிர்கட்சி உறுப்பினர்களையும் 'சஸ்பெண்ட்' செய்துவிட்டார்.*

*இப்படி அடுக்காக கொலை, கொள்ளை, சதி இவற்றைச் செய்தவரும் மோடியை பிரதமராக்கும் திட்டம் ஒன்று தீட்டப்பட்டு வருகின்றது. தமிழகத்தையும் குஜராத்தாக மாற்ற வேண்டும் எனச் "சோ" கூறுவதில் இப்படியும் ஒரு பொருளுண்டு என்பதை உணர்ந்து சோவின் சிந்தனைகளை முற்றாகப் புறக்கணிக்க வேண்டும்.*

*தமிழகம், தமிழகமாகவே இருந்து குஜராத்திற்கு வழி காட்டிட வேண்டும்.*


-MGM

புதைக்கப்பட்ட மக்கள்: மறைக்கப்பட்ட வரலாறு :

# பெய்ரூத்திலிருந்து ஜெரூசலம் வரை !!!

கரு: டாக்டர். ஆங்ச்சுவீ

தமிழ்வடிவம் : மு. குலாம் முஹம்மது




*1982*ஆம் ஆண்டு அக்டோபர் முதல் நாள்!

முடியாது! நடக்காது! என்பதையெல்லாம் விஞ்சி அது முடிந்தது! நடந்தது! ஆமாம்! இஸ்ரேலிய இராணுவத்தால் நொறுக்கப்பட்ட காஸா மருத்துவமனை திறக்கப்பட்டது.

யூதர்களின் கெடுபிடி, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், "அஜீஸா ஹாலித், உம்முவாலித், ஹாட்லா இவர்கள் எங்கள் அனுமதியின்றி செயல்படுகின்றார்கள். நாங்கள் பாதுகாக்க முடியாது" எனப் பாதியில் கைவிட்ட கையறு நிலை. இவை அனைத்தையும் கடந்து காஸா மருத்துவமனை திறக்கப்பட்டது.

வாரிச்சுருட்டி தங்கள் மருத்துவ சீருடைகளை அப்பால் வைத்துவிட்டு தோட்டத்துத் துப்புறவு தொழிலாளர்களைப் போல், விளக்குமாற்றைக் கையிலே எடுத்துக்கொண்டு காஸா மருத்துவமனையின் இடிபாடுகளைத் தூக்கவும் துடைக்கவும் தொடங்கிய அந்தப் பெண்கள், சாதித்தே விட்டார்கள்.

தொடக்கத்தில் இந்த வீராங்கனைகளுக்கு உதவி செய்திட எல்லோரும் தயங்கினார்கள், ஆனால் இப்போது எல்லோரும் அவர்களுக்கு உதவி செய்திட ஓடோடி வந்தார்கள். எதிர்வந்த எல்லா இடர்பாடுகளையும் எதிர்கொண்டு, தடைகளைத்தாண்டி, வந்த உதவிகளை வாகாய் பயன்படுத்தி காஸா மருத்துவமனையை இயங்கும் மருத்துவமனையாக ஆக்கியே விட்டார்கள். அந்த அகதிகள் பயனடைகின்றார்கள்.

காஸா மருத்துவமனையை இயங்க முடியாமலாக்கி விட்டோம் இனி அது இயங்காது என்றெண்ணிய இஸ்ரேலிய இராணுவத்தினர், இந்தப் பெண்களிடம் நிச்சயமாகத் தோற்றுப்போனார்கள்.

காஸா மருத்துவமனையை இயக்கினார்களோ இல்லையோ மக்கள் - ஓடோடி வந்துவிட்டார்கள். ஆமாம் அந்த பாலஸ்தீன் அகதிகள் நொடிந்து போனவர்கள் மட்டுமல்ல. அவர்களின் புண்கள் 'சீழ்' பிடிக்கத் தொடங்கிவிட்டன. காதாரண வலி நிவாரணிகளுக்குக் கூட அவர்கள் காஸா மருத்துவமனை திறக்கும் வரை காத்திருக்க வேண்டியவர்களாகிவிட்டார்கள்.

அவர்களின் அவலங்களை அஜீசா, ஹாட்லா, உம்முவாலித் ஆகியோர் நன்றாக அறிவார்கள். அதனால் அவர்கள் மருத்துவர்களாகவும், தாய்களாகவும், தோழிகளாகவும், தாதியர்களாகவும் அந்த பாலஸ்தீன அகதிகளுக்கு உதவிகளைச் செய்து



ஷாப்ரா ஷத்தீலாவில் படுகொலை செய்யப்பட்ட குழந்தைகள்

கொண்டிருந்தார்கள்.

என்ன ஆச்சரியம்! செஞ்சிலுவைச் சங்கம் கூட தனது நிலையை மாற்றிக் கொண்டது. காஸா மருத்துவமனை முழு அளவில் இயங்கியத் தொடங்கியதும் செஞ்சிலுவை சங்கத்தினர், மருத்துவமனையையும், அதில் வேலை செய்பவர்களும், தங்கள் பாதுகாப்பின் கீழ் (Under shelter)-இல் இருப்பதாக அறிவித்தார்கள்.

இப்படி ஒரு அறிவிப்பு அப்போது காஸா மருத்துவமனைக்குத் தேவைப்பட்டது. காரணம், பாலஸ்தீன செம்பிறைச் சங்கத்தின் கீழ் காஸா மருத்துவமனை இயங்கிட இயலவில்லை. காரணம், லெபனானின் இந்தப்பகுதியை ஆக்ரமித்துத்தன் கோரபிடியில் வைத்திருந்த இஸ்ரேலியப் படைகள், பாலஸ்தீன செம்பிறைச் சங்கத்தின் மீது திணித்தத் தடையை இன்னும் அகற்றிடவில்லை.

ஆனால், அஜீசா ஹாலித், ஹாட்லா, உம்முவாலித் இவர்கள் தங்களுக்கு யார் பாதுகாப்புத் தருகின்றார்கள் என்பதைப்பற்றி எள்ளளவும் கவலைப் படவில்லை. இஸ்ரேலிய இராணுவத்தின் தாக்குதலுக்கு உள்ளான அந்தமக்களுக்கு நிவாரணம் தருவது தங்குத்தடையின்றி மருத்துவம் செய்வது என்பதிலேயே குறியாக இருந்தார்கள்.

இதுபற்றி நான் அஜீசா ஹாலித், உம்முவாலித், ஹாட்லா இவர்களிடம் ஒருசேர ஒரு முறை கேட்டேன். அப்போது அவர்கள் எனக்கு இப்படிப் பதில் சொன்னார்கள். “இந்த மக்களுக்கு தொண்டு செய்தவற்காகத்தான் வாழுகின்றோம்” இதில் அவர்களின் உறுதியும் தெளிவும் ஒன்றாய் வெளிப்பட்டன.

இவர்களின் இதுபோன்ற சொற்களால் ஊட்டம்பெற்ற நாங்கள் - அதாவது வெளிநாடுகளிலிருந்து சேவை செய்ய வந்த மருத்துவர்கள் - முழு அளவில் களத்தில் இறங்கினோம்.

காஸா மருத்துவமனைக்கு மருந்துகளைப் பெற்றுத் தருவதில் பெண்மணி ஒருத்தி மிகவும் துடிப்பாக இருந்தாள்.

வெளிநாடுகளிலிருந்து அங்கு பணியாற்றிட வந்த மருத்துவர்கள் இன்ன மருந்து கிடைத்தால் நன்றாக இருக்குமே என எண்ணினால் - அதை அந்த நங்கை இடம் சொன்னால் இமைப்பொழுதில் அது கிடைக்கும்படி செய்து விடுவாள். அந்த பெண்மணியின் நட்பும் இப்போது எனக்குக் கிடைத்தது. அவளது பெயர் லைலா ஷஹீத்.

லைலா ஷஹீத்-இன் குடும்பம் 1948இல் பாலஸ்தீனத்திலிருந்து பிடுங்கி எறியப்பட்ட குடும்பங்களில் ஒன்று. அவர்கள் அப்போதே நேரடியாக லெபனான் வந்து விட்டார்கள். கடினமான உழைப்பால் உயர்ந்து நல்ல வசதியான குடும்பமாகத் தங்களை ஆக்கிக்கொண்டார்கள். லெபனானில் குடியுரிமையும் பெற்று விட்டார்கள். இதனால் அவர்கள் நீண்ட காலமாக லெபனான் குடி மக்கள். அதனால் அவளால் மிகவும் லாவகமாக வெளியே சென்று உலாவ முடிந்தது. லெபனானில் உள்ள வியாபாரிகளைச் சந்திப்பது, செஞ்சிலுவைச்



ஷாப்ரா ஷத்தீலாவில் படுகொலை செய்யப்பட்ட குழந்தைகள்

சங்கத்தினரைச் சந்திப்பது என்று பல வேலைகளை ஓடி ஆடிச் செய்தாள். மருத்துவ உதவிகளையும் இதர உதவிகளையும் பெற்றுத் தந்தாள்.

லைலா ஷஹீத் ஒரு மருத்துவர். அந்த உதவிகளையும் நிரம்பவே செய்தாள். காஸா மருத்துவமனை மறுவாழ்வு பெற்றதில் அவளுக்கும் ஒரு முக்கிய பங்குண்டு.

அஜீஸா ஹாலித், ஹாட்லா - உம்மு வாலித் இவர்களின் தனிப்பட்ட வாழ்வை லெய்லா ஷஹீத் கூர்ந்து கவனித்து வந்தாள். இவர்கள் ஓய்வின்றி உழைப்பவர்கள். அவர்களிடம் சென்று சற்று ஓய்வெடுத்துவா, அதுவரை நான் பணிகளைக் கவனிக்கின்றேன் என்பாள். அவர்கள் உணவுண்ண காலந்தாழ்ந்தால் அவர்கள் இருக்குமிடத்திற்கு உணவை எடுத்துவந்து தந்தாள்.


இடிக்கப்பட்ட காஸா மருத்துவமனை

இந்த நான்கு பெண்களும், அந்த பாலஸ்தீன அகதிகளுக்கு ஒருபெரும் நம்பிக்கையைத் தந்தார்கள்.

இந்தப் பெண்களிடம், நான், நித்தமும் ஒரு மனிதத் தன்மையைப் பெருந்தன்மையைக் கற்றுக் கொண்டிருந்தேன். அவற்றுள் என்னை மிகவும் கவர்ந்தது.

இவர்களுக்குத் தனித்தனி அலுவலக அறைகள் இருந்தன. அவற்றில் அவர்கள் ஓய்வெடுத்துக் கொள்ளலாம். அவற்றின் கதவுகள் சதா சர்வ காலமும் திறந்தே கிடந்தன. பாலஸ்தீன அகதிகள், எப்போது வேண்டுமானாலும் செல்லலாம். அவர்களின் அனுமதியின்றியே ஒரு இருக்கையில் அமரலாம். பேசலாம். மனதை தேற்றலாம். உதவிகளைப் பெறலாம். வரலாம்.

இந்த நான்கு பெண்களும் தங்களுக்கென எதையும் வைத்துக்கொள்ளவில்லை. சற்று நேரத்தைக் கூட தங்களுக்கென ஒதுக்கி ஓய்வெடுத்துக் கொள்ளவில்லை.

இப்படி காஸா மருத்துவமனை தன்னால் இயன்றதையெல்லாம் செய்து கொண்டிருந்தது. அதே நேரத்தில் இஸ்ரேலிய இராணுவமும் தனது கொலைவெறியைத் தணித்துக் கொண்டிருந்தது. ஆமாம் அவ்வப்போது “ரோந்து வருவதும்”, சிலரைப் பொறுக்கி எடுத்து சிறு விசாரணை என அழைத்துச் செல்வதும், வாடிக்கையாகி விட்டது.

சற்று நேரத்தில் விட்டு விடுவோம் என அழைத்துச் செல்வார்கள். ஆனால், அப்படி அழைத்துச் சென்றவர்களை அவர்கள் மீண்டும் கொண்டு வந்து விட்டதே இல்லை. இந்த மாபெரும் அநியாயத்தையும், சகித்துக் கொண்டேதான் அனைவரும் வாழ்ந்து கொண்டும், சேவை செய்து கொண்டுமிருந்தோம்.

இஃதன்னியில் அடிக்கடி சிரியா நாட்டின் தலை நகரமாம், டெமாஸ்கஸ்-இலிருந்து கார்கள் பல வந்து சென்றன. இந்த கார்களில் பாலஸ்தீன இளைஞர்கள் வந்தார்கள். இந்த இளைஞர்கள் இதற்கு முன்னால், இதே ஷாப்ரா ஷத்திலா அகதிகள் முகாம்களில் வாழ்ந்தவர்கள்தாம். ஆனால் தீவிரவாதிகள் இஸ்ரேலைத் தாக்குவதற்காகத் தயாராகிக் கொண்டிருப்பவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டு அந்த அகதிகள் முகாம்களிலிருந்து, சர்வதேச ஒப்பந்தபடி அகற்றப்பட்டவர்கள்.

அவர்கள் லெபனானில் - ஷாப்ரா, ஷத்திலா அகதிகள் முகாமில் தங்கி இருந்ததால் இவர்களைக் காரணங்காட்டி ஷாப்ரா ஷத்திலா அகதிகள் முகாம்களை குண்டுபோட்டு அழித்திருப்பார்கள். அத்தோடு ஷாப்ரா ஷத்திலா உட்பட மொத்த லெபனானையும் யூத இராணுவம் அழித்திருக்கும்.



ஷாப்ரா ஷத்திலா படுகொலையில இறந்த ஒரு குழந்தை

அவர்கள் 'தங்கள் குடும்பங்களைத் தாராளமாக விட்டுச் செல்லலாம். அந்த குடும்பங்களை உலக நாடுகள், ஐ.நா.வின் கண்காணிப்பின் கீழ் பாதுகாக்கும்' என்ற உறுதித்தரப்பட்டது. இந்த உறுதியின் அடிப்படையில் அவர்கள் தங்கள் குடும்பங்களைப் பிரிந்து சென்றார்கள். உண்மையைச் சொன்னால் இப்படி உறுதி தந்து ஆண்களை ஒட்டுமொத்தமாக ஷாப்ரா, ஷத்திலாவிலிருந்து அகற்றினார்கள். பின்னர் இஸ்ரேலிய இராணுவம் ஈவிரக்கமின்றி வானிலிருந்து குண்டுகளை வீசியும், விசைத் துப்பாக்கிகளால் குண்டுகளைப் பாய்ச்சியும் அழித்தபோது, உறுதி தந்த உலக நாடுகள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு நின்றன. பெயருக்குக் கூட இஸ்ரேலைக் கண்டிக்கவில்லை.

இந்த இளைஞர்கள் - (ஷாப்ரா, ஷத்திலா அகதிகள் முகாம்களிலிருந்து, சர்வதேச உறுதியின் கீழ், அகற்றப்பட்ட இளைஞர்கள்) டெமாஸ்கஸ்லில் சிறப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் ஷாப்ரா ஷத்திலா அகதிகள் முகாமில் தாங்கள் பிரிந்து வந்த குடும்பத்தவர்கள் கொலை செய்யப்பட்டார்கள் என்பதை அறிந்தார்கள் செய்தி கிடைத்ததும் வந்தார்கள். ஆனால் எல்லாம் முடிந்துபோனது. இப்போது காஸா மருத்துவமனை முழு அளவில் இயங்கிடத் தொடங்கி இருக்கின்றது என்பதை அறிந்தார்கள். மீண்டும் புறப்பட்டார்கள். அங்கே தங்களவர்கள் யாராவது மருத்துவம் பெற்றுக் கொண்டிருக்கின்றார்களா? என்பதை அறிந்திடத்தான் வந்தார்கள்.

அவர்களின் வருகை அதிகமாகவே காஸா மருத்துவமனையில் தகவல் மையம் ஒன்றைத் தொடங்கினோம். அதில் மருத்துவம் பெறுபவர்களின் பெயர்களைப் பதித்து வைத்திருந்தோம். அதனால் அந்த இளைஞர்கள், தங்கள் உறவினர்கள் யாரேனும், காஸா மருத்துவமனையில் இருக்கின்றார்களா, என்பதைத் தகவல் மையத்திலேயே கேட்டுத் தெரிந்திட இயலும். என்றாலும் அந்த இளைஞர்கள் தகவல் மையத்தோடு தங்கள் வருகையை நிறுத்திடுவதில்லை. அதையும் விஞ்சி, தங்கள் குடும்பத்தைச் சார்ந்த யாரேனும் உயிருடன் இருக்க மாட்டார்களா? என்ற நப்பாசையில் காஸா மருத்துவமனைக்குள்ளேயும் புகுந்தார்கள். எல்லா நோயாளிகளையும் பார்த்தார்கள். அவர்களையும் அறியாமல் அணையுடைத்து வந்த கண்ணீரில் தங்களை நனைத்துக் கொண்டு கனத்த இதயத்தோடு வெளியே சென்றார்கள்.

வெளியே செல்பவர்கள், ஷாப்ரா ஷத்திலா முகாம்களை நோக்கியே நகர்ந்தார்கள். கண்ணீர் இருக்கும் வரைக்கும் அழுதார்கள். கால்களிருக்கும் வரை நடந்தார்கள். பின்னர் இனம் புரியாமல் அதே அகதிகள் முகாம்களை நோக்கி நடந்தார்கள்.

உடல்களை எல்லாம் புல்டோசர்களை வைத்து மண்ணோடு மண்ணாக புதைத்துவிட்ட நிலையில், கிழிந்தும், புதைந்தும் போன ஆடைகள், அங்கே கிடந்தால், அப்படியொரு ஆடையை தங்கள் சகோதரியோ, தாயோ, துணைவியோ அணிந்திருப்பார்கள் என நம்பினால் அவற்றைக் கையிலே சுருட்டிக்கொண்டு நடந்தார்கள்.

அந்த இடத்தை விட்டும் பிரிய முடியாமல் ஆனால் பிரிந்துதான் ஆகவேண்டும் என்ற நிலையில் அவ்விடம் விட்டு அகன்றார்கள்.

இந்த இளைஞர்கள் முகாமிற்கு வந்து செல்லும் போதெல்லாம், எங்களுக்குள் ஒரு பீதி பயம். எங்கே இஸ்ரேலிய இராணுவத்தினர் இவர்களைக் கடத்திச் சென்று கொலை செய்து விடுவார்களோ அல்லது அந்த இடத்திலேயே கொலை செய்து விடுவார்களோ? என்ற பயமும் பீதியுந்தான்.

இந்த இளைஞர்கள் காஸா மருத்துவமனைக்கு வரும் போதெல்லாம், அங்கே மருத்துவம் பெற்றுவரும் அனைத்து நோயாளிகளையும், சந்தித்துவிட்டே வருவார்கள். அவர்கள் மருத்துவமனைக்குள் இருப்பதையே காரணங்காட்டி இஸ்ரேலிய இராணுவத்தினர் இன்னொரு முறை காஸா மருத்துவமனையை நிர்மூலமாக்கி விடுவார்களோ என்றொரு அச்சம் எனக்குண்டு. அதேபோலவே வெளிநாட்டிலிருந்து சேவை செய்ய வந்த அனைவருக்கும் உண்டு.

இந்தப் பயங்களையும் பீதியையும் நாம், அஜீஸா, ஹாலித் உம்மு வாலித், ஹாட்லா ஆகியோரிடம் வைத்தோம். அப்போது லைய்லா ஷஹீத் - ம் உடனிருந்தாள். ஆனால் இந்த வீரமங்கைகள் சொன்ன பதில் வேறு விதமாக இருந்தது.

அந்தப் பதில், "அவர்களைத் தடுக்க வேண்டாம் அப்படியே விட்டுவிடுங்கள்" அதாவது தங்கள் உற்றாரை - சர்வதேச நாடுகளின் பாதுகாப்பில் விட்டுச்சென்ற தாய், சகோதரிகள், குழந்தைகள் விட்டுச்சென்ற அந்த இளைஞர்கள் தங்களவர்களை இங்கே எத்தனை முறை வேண்டுமானாலும், தேடட்டும், அதனால் வருவது வரட்டும்" எனத் துணிச்சலாகச் சொல்லிவிட்டார்கள்.

இந்த பதில் அவர்களின் நெஞ்சுரத்தையும், அவர்களின் சகோதர பாசத்தையும் ஒன்றுபோலவே உரக்க முழக்கிற்று.

நானும் என்னோடு வந்த இன்னும் பல தன்னார்வ குழுவினரும், அவர்களிடமிருந்து இதில் இன்னொரு பாடத்தைக் கற்றோம்.

இப்படி காஸா மருத்துவமனை வரும் பாலஸ்தீன் இளைஞர்கள் ஷாப்ரா, ஷத்திலா அகதிகள் முகாம்களை நோக்கி செல்லும் போதெல்லாம் நானும் உடன் சென்றிருக்கின்றேன்.

என்னையுமறியாமல் நான் மேற்கொள்ளும் பயணம் அது. ஏதோ என்னை உபசரித்து எனக்கு அரபு டீ தந்த அந்த அன்புக்கினியவர்களில் யாரையாவது சந்தித்து ஆறுதல் சொல்ல வேண்டும். யாராவது கிடைக்க மாட்டார்களா? என்றொரு தேட்டமும் ஏக்கமும் என் மனதை எப்போதும் ஆக்கிரமித்துக் கொண்டே இருந்தன.

இந்த முறை நான் அந்த இளைஞர்களில் சிலரைப் பின்தொடர்ந்து ஷாப்ரா, ஷத்திலா



அங்க் சுவி இப்பொழுது

முகாம்களுக்குச் சென்றிடும் போது, என்னுடைய புதிய தோழி டாக்டர் லைய்லா ஷஹீத்-ம் உடன் வந்தாள். ஷாப்ரா, ஷத்திலாவை அகதிகள் முகாம் எனச் சொல்வதைவிட இஸ்ரேலிய இராணுவத்தின் கொலைக்களம் எனச் சொல்லுவதே சிறந்தது.

அவளால் ஷாப்ரா, ஷத்திலா, கொலைகளத்திற்கு தனியாக செல்ல முடியாது. அவளுக்கு அந்தத் தைரியமில்லை என அவள் என்னிடம் இரண்டொரு முறை சொல்லி இருக்கின்றாள்.

இப்போது நானும் உடன் வருவதால், தனக்கெதுவும் ஆகிவிடாது என தன்னைத் தானே தேற்றிக்கொண்டு வந்தாள்.


நானும் அவளும் ஷாப்ரா, ஷத்திலா முகாமை சென்றடைந்த போது பல இளைஞர்கள், கிழிந்த ஆடைகள், மண்ணோடு மக்கிப்போன செயற்கை அணிகலன்கள் இவற்றை எடுத்துக்கொண்டு திரும்பிக் கொண்டிருந்தார்கள். இவர்களின் ஏக்கம், ஏமாற்றம் இவற்றை என்னால் புரிந்திட முடிந்தது.

அந்த பொருள்களையெல்லாம், நினைவுப் பொருள்களாக வைத்துக் கொள்வார்கள் போலும். தொடர்ந்து அங்கே நான் கண்ட காட்சிகள் என்னை அதிசயத்திலும் ஆச்சர்யத்திலும் ஒரு சேர ஆழ்த்திற்று.

என்னைப் போலவே லைய்லா ஷஹீதும் பேய் அறைந்தாற்போல் நின்றாள்.

அவற்றை (இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் காண்போம்.)

# அப்சல் குரு தூக்கிலிடப்படத்தான் வேண்டுமா..? 3



நாடாளுமன்ற தாக்குதலில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை தூக்கிலிட்டால் தான் மக்களின் மனசாட்சி திருப்தி அடையும்.

இது நமது உச்ச நிதிமன்றம் 13.12.2001 இல் நிகழ்த்தப் பெற்ற நாடாளுமன்ற தாக்குதலில் தந்த அறுதி தீர்ப்பில் அடித்துக் கூறியது.

2000 முஸ்லிம்களைக் (இது அரசு கணக்கு, உண்மையான கணக்கு இதிலும் பன்மடங்கு) கொலை செய்த குஜராத் முதல்வர் மோடியை நீதியின் முன் நிறுத்திடக் கூடாது.

இது நமது உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட சிறப்பு புலனாய்வுக்குழு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கை.

இது ஒரு கண்ணுக்கு பன்னீரும் மறு கண்ணுக்கு சுண்ணாம்பும் தடவும் நமது நீதித்துறையின் லட்சணம்.

இந்தப் பின்னணிகளில் தான் அப்சல் குருவுக்கு வழங்கப்பட்டுள்ள மரண தண்டனையைப் பார்த்திட வேண்டும்.

அப்சல் குரு விவகாரத்தில் நாம் ஒரு விஷயத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லி வருகின்றோம்.

அது, அப்சல் குருவுக்கு மரண தண்டனை வழங்கப் பெற்றது என்பது அவர் மீதுள்ள குற்றம் "நாடாளுமன்ற தாக்குதலில் ஈடுபட்டார் என்பது ஐயங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டு விட்டது என்பதனால் அல்ல. மாறாக நமது உச்ச நீதிமன்ற இராஜாக்கள் இந்த நாட்டு மக்களின் மனசாட்சியைத் திருப்திபடுத்துவதற்காக கூறிய "அரசாங்க கொலை உத்தரவு'. இதனை வைகறை வெளிச்சம் ஜனவரி 2012 இதழில் விரிவாகத் தந்துள்ளோம்.

இதில் பல யதார்த்தங்கள் புதைக்கப்பட்டுவிட்டன. அவற்றுள் மிகவும் முக்கியமானது அப்சல் குரு யார்? எங்கிருந்து வந்தார்? என்பது, அப்சல் குருவே கஷ்மீர், மற்றும் டெல்லி காவல்துறையின் ஆக்கந்தான் என்பதை நமது உச்ச நீதிமன்றத்தில் அவர் மனைவி தாக்கல் செய்த ஆவணம் ஒன்றில் இப்படிக் குறிப்பிடுகின்றார். "இந்தியா முழுவதும், மக்கள் நாடாளுமன்றத்தின் மீது நடந்த தாக்குதலைக் கண்டித்திருக்கின்றார்கள். நானும் கண்டிக்கிக்றேன். இதனைக் கண்டிக்கும் போதே இதில் ஈடுபட்டவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் நியாயமான முறையில் விசாரிக்கப்பட வேண்டும். அவர்கள் உண்மையிலேயே குற்றவாளிகள்தானா என்பதைக் கண்டுபிடிப்பதற்கு எல்லா வகையான விசாரணைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். அவர்கள் தண்டிக்கப்படும் முன் அவர்கள் தரப்பு வாதம், அவர்களின் நிலைப்பாடு ஆகியவை முழுமையாகக்

கேட்கப்பட வேண்டும்".

"நான் உங்களிடம் (உச்சநீதிமன்ற நீதிபதிகளிடம்) எங்களது கதையை முழுமையாகக் கேட்க வேண்டும் என முறையிடுகின்றேன். அதன்பின் தண்டிக்கப்பட்டுத்தான் ஆகவேண்டும் என்றால் தண்டியுங்கள். அஃப்ஸலுடைய கதையும், என்னுடைய கதையும் கஷ்மீரில் வாழும் இளம் தம்பதியரின் கதைகளுள் ஒன்றுதான். எங்கள் கதையும் எங்கள் கஷ்மீர் மக்கள் எதிர் நோக்கி நிற்கும் சோகமான கதைகளும் ஒன்றுதான்'.

"1990 அஃப்ஸல், 'ஜே.கே. எல்.எஃப்'. ஜம்மு கஷ்மீரி விடுதலை முன்னணி (JKLF) Jammu & Kashmir Liberation Front என்ற இயக்கத்தால் (கஷ்மீரில் வாழும் ஆயிரக்கணக்கான இளைஞர்களைப்போல்) கவரப்பட்டார். அவர்களுடன் பாகிஸ்தான் சென்றார். அங்கிருந்தவர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளால் மனம் உடைந்து திரும்பிவிட்டார். டெல்லிக்குச் சென்று தன்னுடைய படிப்பைத் தொடர்ந்திட முயற்சிகளை மேற்கொண்டார். அவர் எப்போதும் படிக்க விரும்பினார். அதற்கு முன் அவர் எம்.பி.பி.எஸ். (மருத்துவப் பட்டத்திற்காகப்) படித்துக் கொண்டிருந்தார்.

"என் கணவர் சாதாரணமான வாழ்க்கையையே வாழ்ந்திட விரும்பினார். அதனால் நமது இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்தார். எல்லைப் பாதுகாப்புப் படையினர் அவருக்கு "அவர் சரணடைந்தவர்' என்ற சான்றிதழைத் தர மறுத்து விட்டார்கள். சான்றிதழ் தந்திட வேண்டும் என்றால் இன்னும் இரண்டு பேரைச் சரணடையச் செய்திட வேண்டும் எனக் கட்டாயப்படுத்தினார்கள். இதனால் இன்னும் இரண்டு பேரை சரணடையச் செய்தார். அதன் பின்னர் அஃப்ஸலுக்கு ஒரு சான்றிதழைத் தந்தார்கள். அதில் 'அவர்க சரணடைந்தவர்' எனக் குறிப்பிட்டிருந் தார்கள்".

"சரணடைந்த ஒருவராக கஷ்மீரில் வாழ்க்கை நடத்துவது என்பது மிகவும் சிக்கலான ஒன்று. ஆனாலும் அவர் தன் குடும்பத்தோடு கஷ்மீரிலேயே வாழ்ந்திடுவது என முடிவு செய்தார். 1997ல் அவர் ஒரு சிறு வியாபாரத்தைத் தொடங்கினார். அது மருத்துவம்-மருந்து ஆகியவை தொடர்பான வியாபாரம். மருத்துவக் கருவிகளை வாங்கி விற்பதும் இதில் அடங்கும். அடுத்த வருடம் நாங்கள் திருமணம் முடித்துக் கொண்டோம். அவருக்கு அப்போது வயது 28, எனது வயது 18.

"நாங்கள் கஷ்மீரில் வாழ்ந்த காலங்கள் வரை இந்திய பாதுகாப்புப் படையினர் எங்களைத் தொடர்ந்து தொந்தரவு செய்து கொண்டே இருந்தார்கள். யார் யார் மீதெல்லாம் சந்தேகமிருகின்றதோ அவர்களைப் பற்றிய தகவல்களைத் தந்திட வேண்டும், அவர்களை உளவு பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என அழுத்தங்களைத் தந்து கொண்டே இருந்தார்கள். '22 ரைஃபிள்ஸ்' என்ற இராணுவப் பிரிவைச் சார்ந்த மேஜர் இராம் ராய் என்பவர் அஃப்ஸலை சித்திரவதை செய்தார். அவருடைய (மர்மஸ்தானத்தில்) மறைவிடத்தில் மின்சாரத்தைப் பாய்ச்சித் சித்திரவதை செய்தார். அஃப்ஸலை அவமானப்படுத்தினார். கேவலமான சொற்களைக் கொட்டி வைத்தார்".

"இந்தியப் பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து அஃப்ஸலை அவர்களுடைய முகாம்களுக்கு அழைத்துச் சென்றார்கள். சித்திரவதை செய்தார்கள். அவரிடமிருந்து தகவல் எடுக்க வேண்டும் என்று சொல்லியே இதையெல்லாம் செய்தார்கள். ஒரு நாள் இரவு, இந்தியப் பாதுகாப்புப் படையைச் சார்ந்தவர்கள் எங்களுடைய வீட்டுக்கு வந்தார்கள். எங்களையெல்லாம் வாய்க்கு வந்தப்படி திட்டினார்கள். அஃப்ஸலை அவர்களுடைய முகாமுக்கு அழைத்துச் சென்றார்கள். பிறிதொரு முறை கஷ்மீரின் 'எஸ்.டி.எஃப்' (Special Task Force) சிறப்புப் பாதுகாப்புப் படையின் முகாமிற்கு அழைத்துச் சென்றார்கள். இந்த முகாம்கள் ஃபல்ஹாலன்-பாட்டான் பகுதியில் உள்ளது.

"சில நாட்கள் கழித்து சிறப்புப் பாதுகாப்புப் படையினர் அவரை தங்களுடைய 'ஹம்ஹாமா' (Humhama STF Camp) முகாமிற்கு அழைத்துச் சென்றார்கள். அந்த முகாமில் வைத்து டி.எஸ்.பி. வினாய் குப்தா ஆகியோர் ஒரு லட்சம் ரூபாய் கேட்டார்கள். இந்த ஒரு லட்சம் ரூபாயைக் கொடுக்கும் அளவிற்கு நாங்கள் வசதியானவர்கள் அல்ல. அதனால் நாங்கள் எங்களிடமிருந்தவை அனைத்தையும் விற்று விட வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானோம். என்னுடைய திருமணத்தில் கிடைத்த சிறிய

தங்க நகையையும் விற்பனை செய்ய வேண்டியதாயிற்று. அத்தனையையும் அஃப்ஸலை நாங்கள் இந்தச் சித்திரவதைகளிலிருந்து காப்பாற்றிட இழக்க வேண்டியதாயிற்று".

"அஃப்ஸலை குளிர்ந்த நீரில் நிறுத்தி வைத்தார்கள். பெட்ரோலை அவருடைய மலத் துவாரத்தில் ஊற்றினார்கள். ஒரு அதிகாரி 'ஷாந்தி சிங்' என்பவர் என் கணவரை (அஃப்ஸலை) கடுங்குளிரில் தலைகீழாகத் தொங்கவிட்டார். மணிக்கணக்கில் தொங்கவிட்டார். அவருடைய மறைவிடத்தில் மீண்டும் மின்சாரத்தைப் பாய்ச்சினார். இந்தச் சித்திரவதையின் ரணங்களிலிருந்து வெளியே வந்திட அவர் பல மாதங்கள் மருத்துவ சிகிச்சை பெற வேண்டியதாயிற்று.

அஃப்ஸல் ஏதேனும் தீவிரவாதச் செயல்களில் ஈடுபட்டிருக்கலாம். அதனால்தான் அவரை இப்படி சித்திரவதை செய்திருக்கலாம் என நீங்கள் நினைக்கலாம். இப்படிச் சித்திரவதைச் செய்யப்பட்டது அவரிடமிருந்து தகவல்களைச் சேகரிக்கத்தான் என்றும் நீங்கள் நினைக்கலாம். ஆனால் கஷ்மீரில் சூழலை நீங்கள் மனதிற்கொள்ள வேண்டும். கஷ்மீரில் வாழும் ஒவ்வொருவருக்கும் அங்கே என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பது தெரிந்திருக்கும். அவர் அங்கு நடப்பவற்றில் பங்கு பெறுகின்றாரோ இல்லையோ அங்கு என்ன நடக்கின்றது என்பது நிச்சயமாகத் தெரிந்திருக்கும். மக்கள் அனைவரையும் தகவல் சொல்பவர்களாக, உளவு பார்ப்பவர்களாக மாற்றுவதன் மூலம், குழந்தைக்கெதிராக பெற்றோர்களையும் அண்ணனுக்கெதிராக தம்பிகளையும் மாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அஃப்ஸல் தன்னுடைய குடும்பத்தோடு அமைதியாகவே வாழ விரும்பினார். ஆனால் எஸ்.டி.எஃப் "STF" என்ற சிறப்புக் காவல் படையினர் அதற்கு அனுமதிக்கவில்லை.

"இந்தச் சிறப்புக் காவல் படையினர் (எஸ்.டி.எஃப்) கஷ்மீரில் மிகவும் பேர் பெற்றவர்கள். அவர்கள் மக்களிடம் பணம் பறிக்கும் வித்தையில் காட்டிய வேகத்தில் மக்கள் மருண்டு போனார்கள். எந்த அளவுக்கு அவர்களின் பெயர் மக்கள் மத்தியில் கெட்டுப் போய் விட்டதென்றால் அவர்களிடமிருந்து மக்களை மீட்பதைத் தேர்தல் அறிக்கையாக வைத்திடும் அளவுக்கு அவர்களின் பெயர் கெட்டுப் போய்விட்டது. முஃப்தி முஹம்மது ஸயீத் அவர்கள் தனது தேர்தல் அறிக்கையில் நான் முதலமைச்சரானால் மொத்த (எஸ்.டி.எஃப்) சிறப்புக் காவல் படையினரையும் அகற்றிவிடுவேன் என வாக்குறுதி வழங்கினார்.

"இந்தச் சிறப்புப் படையினர் (எஸ்.டி.எஃப்) மனித உரிமை மீறல்களுக்கு மிகவும் பெயர் பெற்றவர்கள். இந்த மனித உரிமை மீறல்களோடு மக்களை கொலை செய்வது, சொல்லாமல் கொள்ளாமல் சிறை பிடிப்பது, சித்திரவதை செய்து, மூர்க்கத்தனமான, குரூரம் நிறைந்த சித்திவதைகளைக் கட்டவிழ்த்துவிடுவது, இவற்றிற்குப் பெயர் பெற்றவர்கள்.

"இது போன்ற குரூரமான சூழ்நிலையிலிருந்து அஃப்ஸல் தன்னை விடுவித்துக் கொள்ள விரும்பினார். அவர் தன் வீட்டை விட்டு வெளியேறினார்; தன் குடும்பத்தையும் துறந்தார்; டெல்லி வந்தார். டெல்லியில் வந்து வயிறு பிழைக்க விரும்பினார். அங்கே தன்னுடைய வாழ்க்கையைச் சீர் செய்திட முயற்சி செய்தார். வாழ்க்கை ஓரளவுக்கு நிலை பெற்றதும் என்னையும், எங்களது நான்கு வயது மகனையும் டெல்லிக்கு அழைத்து வாழ்க்கையைத் தொடங்க முடிவு செய்தார். ஏனைய எல்லாக் குடும்பங்களையும் போலவே நாங்கள் ஒன்றாய் வாழ்ந்திட விரும்பினோம். எங்கள் ஒரே மகனை ஆளாக்கிட ஆசைப்பட்டோம். எல்லாக் குடும்பங்களையும் போல் நாங்களும் அமைதியாக வாழ்ந்திட அவாவுற்றோம். ஆனால் மீண்டும் எஸ்.டி.எஃப் (சிறப்புக் காவல் படையினர்) என் கணவரை டெல்லியில் துரத்தத் தொடங்கினார்கள். அத்தோடு எங்களுடைய எல்லா கனவுகளும் தகர்ந்து தவிடு பொடியாயின.

"இந்தச் சிறப்புக் காவல் படையினர் என் கணவரிடம் முஹம்மத் என்பவரை கஷ்மீரிலிருந்து டெல்லிக்கு அழைத்து வர வேண்டும் எனக் கட்டாயப்படுத்தினார்கள். என்னுடைய கணவர் இந்த முஹம்மத் என்பவரையும், தாரிக் என்பவரையும் சிறப்புக் காவல் படையின் (கஷ்மீர்) முகாமில் வைத்தே சந்தித்தார். இவர்களைப் பற்றி என்னுடைய கணவருக்கு எதுவும் தெரியாது. அதே போல் ஏன் இப்படியொரு பணியைச் (கஷ்மீர் சிறப்புக்காவல் படையினர் முகாமிலிருந்து

இவர்களை டெல்லிக்கு அழைத்து வரும் பணியை) செய்யச் சொல்கின்றார்கள் என்பதும் என் கணவருக்குத் தெரியாது.

"இவற்றையெல்லாம் என்னுடைய கணவர் நீதிமன்றத்தில் விரிவாக எடுத்துச் சொன்னார். ஆனால் நீதிமன்றமோ பாதியை எடுத்துக் கொண்டது. மீதியை மறுத்துவிட்டது. என்னுடைய கணவர் முஹம்மதை கஷ்மீரிலிருந்து டெல்லிக்கு அழைத்து வந்தார் என்பதை நீதிமன்றம் எடுத்துக் கொண்டது. முஹம்மதை சிறப்புக் காவல் படைதான் தன் முகாமிலிருந்து டெல்லிக்கு அழைத்துச் செல்லும்படி பணித்தது என்பதை ஏற்றுக் கொள்ள நீதிமன்றம் மறுத்தது.

"கீழ் நீதிமன்றங்களில் அஃப்ஸல் என்ற எனது கணவருக்காக வாதாட யாரும் இல்லை. நீதிமன்றம் ஒரு வழக்கறிஞரை நியமித்தது. அவரோ என் கணவரிடம் என்ன நடந்தது என்பதை எப்போதும் கேட்டதில்லை. அதே போல் அவருக்கு எதிராகச் சாட்சியம் சொன்னவர்களை குறுக்கு விசாரணையும் செய்யவில்லை. அவர் என் கணவரை வெறுத்தார். நீதிபதி "திங்கரா" அவர்களிடம் என்னுடைய கணவர் அந்த வழக்கறிஞர் எனக்காக வாதாட வேண்டாம் என்று எவ்வளவோ சொன்னார். அனால் நீதிபதி "திங்கரா" அதைக் கண்டு கொள்ளவே இல்லை. உண்மையில் என் கணவர் கீழ் நீதிமன்றத்தில் தனது தரப்பில் எதையும் எடுத்துச் சொல்லிட இயலவில்லை. என்னுடைய, கணவர் எதையேனும் சொல்லிட முற்படும்போதெல்லாம், நீதிபதி அதை முற்றாகப் புறக்கணித்தார், செவிமடுக்க மறுத்தார். அவர் தன்னுடைய மத துவேஷங்களை வெளிப்படையாகவே நீதிமன்றத்தில் காட்டினார். மொத்தத்தில் கீழ் நீதிமன்றங்களில் என் கணவர் தன் தரப்பு வாதங்களைச் சமர்பித்திட இயலவில்லை".

"உயர்நீதி மன்றத்தில் ஒருவர் மனித உரிமை வழக்கறிஞர் எனக் கூறிக் கொண்டு என்னுடைய கணவருக்காக வாதாட முன் வந்தார். என் கணரும் அதை ஏற்றுக் கொண்டார். ஆனால் அவர் என் கணவருக்காக வாதாடவில்லை. மாறாக நீதிமன்றத்திடம் என் கணவரைத் தூக்கிலிட்டுக்கொலை செய்யக் கூடாது. விஷ ஊசியைப் போட்டுத்தான் சாகடிக்க வேண்டும் என வாதாடினார். அஃப்ஸல் இந்த வழக்கறிஞரை உச்சநீதிமன்றத்தில் வைக்க வேண்டாம் எனக் கூறிவிட்டார். என் கணவருக்காக ஒரு வழக்கறிஞரை வைத்திடும் வாய்ப்பு எனக்கிருக்கவில்லை. எனக்கு டெல்லியில் யாரையும் தெரியாது, வேறு வழியின்றி அஃப்ஸல், டாக்டர் எஸ்.ஏ.ஆர். ஜீலானியைக் காப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட (வழக்கறிஞர்) குழுவுக்குக் கடிதம் எழுதினார். இந்தக் குழு 'சுசில் குமார்' என்ற வழக்கறிஞரை வைத்தது. ஆனால் உச்ச நீதிமன்றம் சாட்சியங்களுக்குள் செல்ல முடியாது என்று கூறிவிட்டது. அதனால் என் கணவருக்கு என்ன நடக்கும் என்று தெரியவில்லை.

என் கணவரைத் தூக்கில் போட்டுவிடக் கூடாது என்றும், அவருடைய வழக்கை நியாயமாக, நீதியாக விசாரிக்க வேண்டும் என்றும் உச்சநீதிமன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன். தன்னடைய தரப்பு வாதத்தைச் சொல்லிட வாய்ப்பளிக்கப்படாத ஒருவரை, தனது நிலையை விளக்கிட வாய்ப்பளிக்கப்படாத ஒருவரை நீங்கள் (உச்சநீதிமன்றம்) தூக்கிலிடமாட்டீர்கள் என்று நான் நம்புகின்றேன். சம்பவம் நடந்தவுடன் காவல்துறையினர் என் கணவரை ஊடகங்களின் முன் ஒப்புதல் வாக்குமூலம் தந்திட கட்டாயப் படுத்தினார்கள். இது வழக்கு விசாரணை தொடங்குவதற்கு முன்னரே நடைபெற்றது".

காவல்துறையினர் அவரை அவமானப்படுத்தினார்கள். அடித்தார்கள். சித்திரவதை செய்தார்கள். அவருடைய வாயில் சிறுநீர் கழித்தார்கள்.

"இவற்றையெல்லாம் வெளிப்படையாகச் சொல்லுவதற்கு வெட்கமாகவே இருக்கின்றது. ஆனால் சூழ்நிலைகள் என்னைக் கட்டாயப்படுத்தியதால் இவற்றையெல்லாம் சொல்லிட வேண்டியதாயிற்று. இவற்றையெல்லாம் எழுத்தில் வடிப்பதற்கு மிகையான தைரியம் தேவைப்பட்டது. இப்போது ஆறு வயதாகிவிட்ட என் மகனின் தந்தையைக் காப்பாற்றிடுவதற்காக நான் இவற்றை யெல்லாம் சொல்லிட வேண்டியதாயிற்று".

"என்னுடைய கணவருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக உச்சநீதிமன்றம் பேசுமா? என் சார்பில் நீங்கள் பேசுவீர்களா? நான் என் கணவருக்காகவும் என் மகனின் தந்தைக்காகவும் வாதாடுகின்றேன் என்பது உண்மைதான்.

*அதே நேரத்தில் கஷ்மீரில் வாடும் என்னைப் போன்ற பெண்களுக்காகவும் வாதாடுகின்றேன்...!"*

*இந்த மொத்த விவகாரத்தில் நாடாளுமன்றத் தாக்குதலில் ஈடுபட்டவர்கள், எஸ்.டி.எஃப் என்ற சிறப்புப் பாதுகாப்புப் படையின் கண்காணிப்பில் நீண்ட நாள்கள் இருந்தவர்கள் என்பது புலப்படும். இதனால்தான் விருப்பு வெறுப்பற்ற ஒரு விசாரணை நாடாளுமன்றத் தாக்குதலில் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஜனநாயக உரிமைகளுக்கான மக்கள் குழுமம் கேட்கின்றது.*

Sourve: Annexe 18 of : December, 13, Terror Over Democracy Appeal for Justice : Published by Promilla & Co, New Delhi.


*மக்கள் உரிமைக் குழுமத்தின் இந்தக் கோரிக்கை மீது நியாயமான விசாரணை நடத்தி இருக்க வேண்டும் நீதியின் மேல் நாட்டம் உள்ளவர்கள்.*

*அதைச் செய்திருந்தால், நாடாளுமன்ற தாக்குதலில், கஷ்மீர் காவல்துறையைச் சார்ந்தவர்களும், டெல்லி காவல்துறையைச் சார்ந்தவர்களும் தண்டிக்கப்பட்டிருப்பார்கள். சில அரசியல் வாதிகள் அப்போது அதிகாரத்தில் இருந்தவர்களும், தண்டிக்கப்பட்டிருப்பார்கள்.*

*இந்நிலையில் அஃப்ஸல் குருவை தூக்கிலிட வேண்டும் என ஓலமிடுபவர்கள், தங்களைக் காப்பாற்றிடத்தான் அப்படிச் செய்கின்றார்கள், என்பதை அனைவரும் புரிந்திட வேண்டும்.*

*ஏதேனும் ஒரு திகிலான சம்பவத்தைக் காட்டி ஒரு முஸ்லிமை தூக்கிலிட்டு விட்டால் விவகாரம் முடிந்துபோகும், என்ற பழைய பல்லவி இனி எடுபடாது. முஸ்லிம்கள் தங்களுக்கெதிராக இந்த நாட்டில் நடத்தப்பட்ட சூழ்ச்சிகளை மக்கள் புரிந்து கொண்டார்கள். சூழ்சி செய்தவர்களை அடையாளங்கண்டு கொண்டார்கள். அவர்கள் நீதிக்காகப் போராடிட தயாராகி விட்டார்கள்.*

# வைகறை : நூல் அரங்கம்




**நூல் - உமர் கத்தாப்**
**ஆசிரியர் - ஷிப்லி நுஃமானி (ரஹ்)**
**தமிழாக்கம் - சையது அப்துல் ரஹ்மான் உமரி**
**விலை - 250 ரூ / பக்கங்கள் 704**
**வெளியீடு - சாஜிதா புக் சென்டர்**
**தொடர்புக்கு - 25224821 / 9840977758**

*அல்லாமா ஷிப்லி நுஃமானி (ரஹ்)* ***19-ம்*** *நூற்றாண்டில் இந்தியாவில் வாழ்ந்த மிகச் சிறந்த இஸ்லாமிய அறிஞர் இஸ்லாமிய அரசின் மீதான மேற்குலக மோசடி எழுத்தாளர்களின் அவதூறுகளை களைவதற்காக எழுத்துப் பணியில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர். இஸ்லாமிய அரசு மற்றும் இஸ்லாமிய நாகரிகத்தின் மாண்புகளை எடுத்துக் கூறிடும் பல நூல்களை இவ்வுலகுக்கு தந்தவர். இப்பின்னணியில் உருது மொழியில் அவர் எழுதிய 'அல் ஃபாரூக்' நூலின் தமிழ் வடிவமே இந்நூல்.*

19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிலாஃபத்தை அழித்திட கிலாஃபத்துக்கு எதிரான பிரச்சாரங்கள் கிலாஃபத்தின் இதயமாக திகழ்ந்த துருக்கியில் தீவிரமாக நடந்தன. கிலாஃபத்தின் முதல் வாரிசுகளான அரபுக்களோ அச்சமயத்தில் அரபு தேசியத்தில் மூழ்கி கிடந்தனர். அக்காலகட்டத்தில் கிலாஃபத்துக்கு ஆதரவாக இந்தியாவில் இருந்து தான் குரல்கள் ஒலித்தன. ஷிப்லியின் இந்நூல் இப்பணியை செவ்வனே செய்தது.

'கிலாஃபத்' வரலாற்றில் உமர் (ரழி) அவர்கள் பிரிக்க முடியாத ஓர் அம்சம். அன்னாரின் சாதனைகள் வழியாக இன்றைய உலகம் கிலாஃபத்தின் மேன்மைகளை அறிந்து கொண்டிருக்கிறது.

ஆளுநர் பதவி வகித்த இயாழ் இப்னு கனம் (ரழி) மெல்லிய ஆடை அணிந்ததற்காகவும், வாசலில் காவலாளியை நிறுத்தியமைக்காகவும் தடித்த ஆடை அணிவிக்கப்பட்டு, ஆடுகள் மேய்க்க அனுப்பப்பட்ட நிகழ்வு (பக்: 350) இயக்கங்கள் மற்றும் அமைப்புகள் பின்புலத்தில் 'முகவரி அறியப்பட்டோர்' பாடம் பெற வேண்டிய பகுதி.

இஸ்லாமிய அரசு என்பது வேறு. மக்களாட்சி என்பது வேறு. இரண்டின் அடிப்படைக் கோட்பாடுகளும் வழிமுறையும் வேறுபடுகின்றன. நேருக்கு நேர் எதிரான திசைகளில் பயணிக்கின்றன. இறைவனுடைய சட்ட திட்டங்களை அமல்படுத்துகின்ற, இறை வேதமான குர்ஆனை ஆட்சியில் அமர்த்துகின்ற ஆட்சியே இஸ்லாமிய ஆட்சி. அதற்கு நேர் மாறாக மக்களின் உள்ளக் கிடக்கைகள், இச்சைகள், விருப்பங்கள் ஆகியவற்றை சட்டங்களாக்கி, அவற்றுக்கு இறையாண்மை அந்தஸ்து தந்து, மக்களை இறைவனாக்கிடும் ஆட்சியே மக்களாட்சி (பக்: 322) இப்பகுதி தேர்தலில் பங்கேற்று, பதவிகளை சுகித்திட, தற்போதைய ஜனநாயக ஆட்சியை இஸ்லாமிய ஆட்சியோடு ஒப்பிட்டு புழகாங்கிதம் அடைவோர்க்கு நல்லதொரு தெளிவு தந்திடும்.

செங்கடலையும், மத்திய தரைக்கடலையும் இணைத்திட கலிஃபா உமர் (ரழி) அவர்களிடம் அம்ரு இப்னு ஆஸ் (ரழி) அவர்கள் அனுமதி கேட்டார்கள். உமர் (ரழி) அவர்கள் அரசியல் காரணங்களுக்காக அனுமதி தரவில்லை. தந்திருப்பின் 'சூயஸ் கால்வாய்' அப்பொழுதே உருவாக்கப்பட்டிருக்கும். (பக்: 404) இத்தகவல் அறிவாற்றலில் நபித்தோழர்கள் '12' நூற்றாண்டுகள் முந்தியவர்கள் என்பதை உணர்த்துவதோடு, அந்த வழியில் தற்கால முஸ்லிம் சமுதாயத்தை நிச்சயம் சிந்திக்க வைக்கும்.

நூல் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. முதல் பகுதியில் உமர் (ரழி) அவர்களின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான நிகழ்வுகள், போர்கள், வெற்றிகள் முழுமையாக கூறப்பட்டுள்ளன. இரண்டாம் பகுதியில் அன்னாரின் நாட்டு நிர்வாகம், பொருளாதார திட்டங்கள், இராணுவ நிர்வாகம் போன்றவை விரிவாகக் கூறப்பட்டுள்ளன. மொத்தத்தில் இந்நூல் உமர் (ரழி) அவர்களின் வாழ்க்கை வரலாற்று களஞ்சியம்.

பல்லாண்டுகளுக்கு முன்பே அரபி, பார்சி, ஆங்கிலம், துருக்கி, ஹிந்தி மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுவிட்ட இந்நூல் 'சாஜிதா'வின் வெளியீட்டில் இப்பொழுது தமிழில் வெளிவந்துள்ளது மகிழ்ச்சியளிக்கிறது.

தற்போது உலகம் முழுவதும் 'இஸ்லாமிய அரசு' குறித்து பலத்த விவாதங்கள் நடந்து வருகின்றன. நவீன பிரச்சினைகளுக்கு 'இஸ்லாமிய அரசே தீர்வு' எனும் குரல்கள் எல்லா, திசைகளில் இருந்தும் ஒலித்து வருகின்றன. முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இல்லாத நாடுகளிலும் கூட 'இஸ்லாமிய அரசு' குறித்து புரிந்துணர்வுகள் ஏற்படத் தொடங்கியுள்ளன. நமது இந்தியாவிலும், தமிழகத்திலும் அத்தகைய புரிந்துணர்வுகள் ஏற்பட வேண்டும்.

இந்நூல் அந்தப் பணியைச் செய்திடும் என்று தோன்றுகிறது. இவ்வளவு பெரிய நூலுக்கு பொருளடக்கம் இல்லை. எழுத்துப் பிழைகள் உள்ளன. பாராக்கள் சில இடங்களில் பெரிதாக இருப்பது வாசிப்பின் ஓட்டத்துக்கு துணை செய்யவில்லை.

மூல நூலின் பெயர் அல் பாரூக். அரபு மொழிபெயர்ப்பின் பெயர் உமர் அல்ஃபாரூக் இதே பெயரை தமிழ் மொழிபெயர்ப்புக்கும் வைத்திருக்கலாம். கத்தாப் என்பது உமர் (ரழி)யின் தந்தை பெயர். அது உமர் (ரழி) யின் பெயர் அல்ல.

-பேராசிரியர்: கே.எம்.இல்யாஸ் ரியாஜி

## அல்குர்ஆனின் அறிவியல் அத்தாட்சிகள்

# அல்குர்ஆனின் அந்தரங்க அரண்கள்.

# உணவின் ஊற்று

ரஹ்மத் ராஜகுமாரன்
9443446903

*பூமியில் இன்றைக்கு 680 கோடி பேர்கள் சுயமாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். 2050 வருஷத்தில் சுமார் 950 கோடி பேர்களுக்கு சோறு போட வேண்டி வரும். அதற்கு என்ன செய்வது...? இது விஞ்ஞானத்தின் கவலை. பிரேசில் நாடு அளவுக்குப் புதிதாக வேளாண்மை நிலம் நமக்குத் தேவைப்படும். ஏற்கனவே குடிநீரில் 70 சதவீதமும், எரிபொருளில் 20 சதவீதமும் உணவு உற்பத்திக்காகவே செலவாகிறது! மேலும் 300 கோடி மனிதர்களுக்கு தேவையான நிலத்திற்கும், நீருக்கும் எரிசக்திக்கும் என்ன செய்வது...? எங்கே போவது...?*

*காடு கழனியெல்லாம் கான்கிரீட் குப்பைகளாக மாற்றிவிட்டோம். வயல் வரப்பெல்லாம் வசந்த மாளிகைகளாக வாரிசுகளுக்கு சொந்தமாக்கி விட்டோம். நிலத்தை உழுது, பாசனம் செய்து, உரமிட்டதால் பூமி ரொம்பவும் நொந்து போய் மலட்டுத் தன்மையை அடைந்துவிட்டது, என்ன செய்வது...? இதற்கு கலப்பை இல்லாத கட்டிட விவசாயம் தான் ஒரே பதில் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.*

*வில்லியம் எஃப் பெரிக் என்பவர் 1929-ல் மண்ணில்லாமல் தொட்டியில் தண்ணீர் நிரப்பி (கவனிக்கவும் மண்ணில்லாமல்) ஊட்டச்சத்து உப்புகளைக் கரைத்து செடிகளை வளர்த்திக் காட்டினார். இதற்கு 'ஹைட்ரோ போனிக்ஸ்' என்று பெயர். இரண்டாம் உலகப் போரின் போது 8 மில்லியன் கிலோ காய்கறிகள் பசிபிக் தீவுகளில், நேட்டோ நாடுகளின் சார்பில் நிலமில்லாமல் நேரடியாக நீர்த் தொட்டிகளில் வளர்த்துப் பெறப்பட்டது.*

*வேர்கள் கெட்டியாக மண்ணைப்பிடித்துக் கொண்டுதான் வளரும் என்று பல காலம் நாம் நம்பி வந்திருக்கின்றோம். உண்மையில் மண்ணிலுள்ள தாதுக்களைப் பெற்றுதான் அவை வளர்கின்றன, என்பது இதன் மூலம் நிரூபிக்கப்பட்டது.*



*'ஏரோபோனிக்ஸ்' என்கிற இன்னொரு முறை. அதாவது செடிகள் நூலில் கட்டப்பட்டு காற்றில் தொங்கியபடி வளரும். காற்றில் குறைவில்லாத ஈரம் நிரம்பியிருந்தால் போதும் மார்கழிப் பனிப்போல அறை முழுவதும் நீர்த்திவலைகளால் நிரப்பி அதில் ஊட்டத் தாதுக்களையும் கரைத்து கலந்துவிட்டால் செடிகள் ஜோராக வளரும்.*

*யூரோ ஃபிரெஷ் எனும் காய்கறி நிறுவனம் அரிசோனா பாலைவனத்தில் 318 ஏக்கர் நிலப்பரப்புக்குப் சமமான விவசாயத்தை அடுக்குமாடி கட்டிடத்தில் செய்து கொண்டு வருகிறது. தக்காளி, வெள்ளரிக்காய், மிளகு ஆகியவற்றை ஹைட்ரோ போனிக்ஸ் முறையில் பயிர் செய்கிறது.*

*அடுக்குமாடி கட்டிடத்தில் ஒவ்வொரு தளத்திலும் பல அடுக்குகளில் வரிசையாக தொட்டிகளை நிறுத்தி அவற்றில் பயிர் செய்வது 'செங்குத்து வேளாண்மை' எனப்படும்.*

*செங்குத்து வேளாண்மைக்கு பல ஏக்கர் நிலம் வேண்டியதில்லை. எங்கெல்லாம் காய்கறிகள் தேவைப்படுமோ அங்காங்கே பயிர் செய்து கொள்ளலாம். இதனால்*

விற்பனை சந்தை ஓரிடத்திலும் விளைநிலம் மற்றொரிடத்திலும் இருந்த காலமெல்லாம் போய்விட்டது. அறுவடையான அரிசியையும், பருப்பையும், கரும்பையும் ஊர்ஊராக அனுப்பிக் கொண்டு தேவையில்லாமல் போக்குவரத்து செலவிட வேண்டியதில்லை.

மூடிய கட்டிடத்தில் சுத்தமான முறையில் பயிர் செய்வதால் காய்கறிகளில் பூச்சி அண்டாது. மண்மூலமாக பயிர்களில் பரவும் கிருமிகளும் இருக்காது. இதனால் பூச்சி கொல்லி மருந்து நோய்க்கிருமிகள் இல்லாத காய்கறி தானியங்கள் கிடைக்கும்.


பருவகாலம், மழைப்பொழிவு, புயல், வெள்ளம் என்ற பேரழிவுகள் ஏதுமில்லாமல் ஆண்டு முழுவதும் பயிர் செய்து கொண்டே இருக்கலாம். மேலும் தேவைக்கேற்ப அறுவடை செய்து மீதியை எவ்வளவு காலம் பயிரிலே தானியத்தை வைக்கமுடியுமோ அவ்வளவு காலம் தானியத்தை பயிரிலேயே வைத்திருக்கலாம். இதனால் குடோன் போன்ற பெரிய இடத் தேவையில்லை.

அமெரிக்காவைச் சேர்ந்த 'பெர்டியு' பல்கலைக்கழக ஆய்வாளர் புதுமையாக விண்வெளியில் செயற்கை சூழலில் கேரிமிட்எசல் பல்வேறு வகை தாவரங்களை ஆய்வுக்கு உட்படுத்தி பல்வேறு தாவரங்கள் வளர்க்கும் முயற்சியில் வெற்றி கண்டுள்ளார். தக்காளி, சக்கரை வள்ளிக்கிழங்கு, காட்டாமணக்கு பழவகையில் ஸ்ட்ராபெர்ரி பழம் விண்வெளியில் வளர்க்க ஏற்றதாக தெரிகிறது.

....இப்படியெல்லாம் தாவரங்கள் மண்ணைத் தொடாமல் விளைவதால் மண்ணுக்கு ஓய்வு கிடைக்கிறது. மீண்டும் அவை பழைய இயல்பு நிலையை அடையும். விரும்பினால் அவற்றை அப்படியே விட்டுவிடலாம். இதன் மூலம் இழந்த காடுகளைத் திரும்ப பெறலாம். பூமியில் உஷ்ணம் தணிந்து எங்கும் சுபிட்சம் நிலவலாம்.

அமைதிக்கான நோபல் பரிசு வங்காரி மாத்தய் (2004) சொன்னது போல் நிலங்களை சும்மா விட்டுவிட்டால் போதும் பூமி காய்ச்சல் குணமாகிவிடும்.

மாற்று விவசாயமாக மண்ணைத் தொடாமலும், விண்வெளியிலும், கட்டிடங்களிலும் விவசாயம் செய்து சேமித்த



ஹைட்ரோ போனிக்ஸ்

உணவு தானியமணிகள் மூலம் எதிர்கால பஞ்சத்திலிருந்து உலகை காப்பாற்றலாம் என விஞ்ஞானம் கணக்குப் போடுகிறது. சரி... உணவுப் பொருட்களை ரொம்பகாலத்திற்கு கெடாமல் எப்படிப் பாதுகாக்க...? அதற்கும் விஞ்ஞானம் பதில் தருகிறது, பூமிக்கு மொத்தம் ஏழு கண்டங்கள். இதில் துருவகண்டங்கள் அண்டார்டிகா, ஆர்டிக் எப்போதுமே பணியில் மூடப்பட்டு இயற்கையான குளிர்சாதனப் பெட்டியாய் இருக்கிறது. 5 கண்டங்களில் உற்பத்தி செய்த உணவை இந்த இரண்டு துருவக்கண்டங்களில் வைத்து 100 வருடத்திற்கு மேல் கெடாமல் பாதுகாக்க முடியுமே... என்கிறது விஞ்ஞானம்.

இதுவரையிலும் விஞ்ஞானம் நாளைய உணவு உற்பத்திப் பற்றி பெருமையாக பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்தோம். கொஞ்சம் விஞ்ஞானத்தைப்பற்றி....

விஞ்ஞானம் பாரபட்சமில்லாததுடன் உணர்ச்சியற்றது. புவி ஈர்ப்பு விசை இல்லை என்றால் நம்மால் மூத்திரம் பெய்ய முடியாது போன்ற ஆணி அறைந்த உண்மைகளை சொல்வது, தேடுவது. ஆனால் மனித வாழ்வுக்கு உணர்ச்சிகளும், உள்ளுணர்வுகளும், நம்பிக்கைகளும் சில சமயங்களில் அற்புதங்களும் தேவையாக இருக்கிறது. விஞ்ஞானம் கடவுளை இல்லையென்று சொல்வதில்லை அதற்குக் கடவுள் தேவை இல்லை. அவ்வளவுதான்!

வாழ்வில் அற்புதங்கள் நிகழ நம்பிக்கை தேவைப்படுகிறது. இல்லையேல் வாழ்க்கையிலேயே என்ன இருக்கிறது. எல்லாமே கார்பன், பாஸ்பரஸ், நைட்ரஜன் தானே என்று மனிதர்கள் பரிதாபமாக இருந்தாலும் கூட விஞ்ஞானம் ஒரு சொட்டுக் கண்ணீர் விடாது. இதுதான் விஞ்ஞானம். ஆனால் மெஞ்ஞானம் அப்படி இல்லை.

விஞ்ஞானம் உணவுப் பொருட்களை கெடாமல் 100 வருடம் பாதுகாக்க துருவ கண்டங்களின் துணை வேண்டியதை பார்க்கும்போது, உஜைர் நபி, 'இறந்த பின் உயிர்தெழுதலைப்பற்றி இறைவனிடம் விசாரித்தபோது, அவருடைய சந்தேகத்தை நிவர்த்தி செய்வதற்காக, "அல்லாஹ் அவரை நூறு ஆண்டுகள் வரையில் மரணித்திருக்கச் செய்து, பின்னர் அவரை உயிர்ப்பித்து, இந்நிலையில் நீங்கள் எவ்வளவு காலம் இருந்தீர்கள் எனக் கேட்க, ஒருநாள் அல்லது ஒரு நாளின் சிறிது பாகம் இருந்தேன்! எனக் கூறினார்". "அல்ல! நீங்கள் நூறு ஆண்டு இந்நிலையில் இருந்தீர்கள். இதோ உங்களுடைய உணவையும், உங்களுடைய பானத்தையும் பாருங்கள் அவை இதுவரை கெட்டுப் போகவில்லை". குர்ஆன் (2:259)

உஜைர் நபி 100 வருடம் கழித்து உயிர்தெழுந்தபோது அவரின் உணவும், பானமும் கெட்டுப் போகாமல் இருந்தது என்றால் அதில் என்ன யுக்தியை இறைவன் பயன்படுத்தியிருப்பான் என்பதை விஞ்ஞானம்தான் வியூகம் அமைத்து விசாரிக்க வேண்டும். உணவு கெட்டுப் போகாமல் தடுக்கும் யுக்தி தெரிந்திருந்தால் குளிர்சாதனப் பெட்டியே தேவை இருந்திருக்காது.

அடுத்து செங்குத்து வேளாண்மையாக மூடிய கட்டிடத்தில் விவசாயம் செய்வது குறித்து விஞ்ஞானம் பேசியதில் தேவைக்கேற்ப தானியங்களை அறுவடை செய்துவிட்டு மீதியை பயிரிலே எவ்வளவு காலம் பாதுகாக்க முடியுமோ அவ்வளவு காலம் பாதுகாக்கலாம். அதனால் குடோன் போன்றவைகளில் அவசியம் தேவையில்லை என்கிறது. இதையே எகிப்து நாட்டில் பஞ்சம் வந்தபோது நபி யூசுப் (அலை) பஞ்சத்திலிருந்து நாட்டுமக்களைக் காப்பாற்ற

"யூசுப் (அலை) கூறியதாவது, தொடர்ந்து வழக்கம் போல் நல்ல விதமாக ஏழு ஆண்டுகள் நீங்கள் விவசாயம் செய்வீர்கள். அதில் நீங்கள் அறுவடை செய்யும் விளைச்சல்களில் நீங்கள் புசிப்பதற்கு வேண்டிய ஒரு சொற்ப அளவைத் தவிர மற்ற அனைத்தையும் அதன் கதிர்களிலேயே விட்டு வையுங்கள்" - குர்ஆன் (12:47)

இந்த யுக்தியையும் விஞ்ஞானம்தான் விசாரித்து தீர்க்கமான முடிவை எடுத்து உணவு தானியங்களை பாதுகாத்து சேமிக்க வேண்டும்.

அடுத்து விண்வெளியில் கேரிமீட்செல் என்கிற விஞ்ஞானி விண்வெளியில் உணவு தானியங்களை உற்பத்தி செய்து வெற்றிக் கண்டதாகக் கூறினார். அதுவும் ஸ்ட்ரா பெர்ரி பழம் வெகு சுலபமாக வளர்வதாக சுட்டிக் காண்பித்தார். ஆனால் இறைவன் நபி மூஸா (அலை) மக்களுக்கு மன்னு - ஸல்வா என்கிற உணவை விண்ணிலிருந்துதான் இறக்கினான். இதில் 'மன்னு! என்பது துரன் ஜபீன் என்னும் ஒரு வகைப்பழம் (ஸ்ட்ரா பெர்ரிபழம் மாதிரியா...?) இது பனிபோல் வெண்மையாக இருக்கும். ருசியில் நெய்யுடன் சேர்த்து குழைத்த தேன் போலிருக்கும். பின்பு 'ஸல்வா' என்கிற இறைச்சி உணவு. இது கொழுப்பான ஒரு வகைக் குருவி. இப்பறவை இறைச்சி நெய்யினாலே நன்றாக சுட்டு கீழே இறங்கியது. பனீ இஸ்ரவேலர்கள் ஸ்ல்வாவை மன்னுடன் சேர்ந்து சாப்பிட்டனர். இப்படி நாள்தோறும் விண்ணிலிருந்து விழுந்து இறங்கிக் கொண்டே இருந்தது. பின் நபி மூஸாவுடைய "மக்கள் மூஸாவை நோக்கி "மூஸாவே! ஒரே விதமான உணவை உட்கொண்டிருக்க எங்களால் முடியாது. பூமியில் முளைக்கக் கூடிய கீரை, வெள்ளரிக்காய், கோதுமை, பருப்பு, வெங்காயம் ஆகியனவைகளை வெளிப்படுத்தித் தரும்படி உங்களுடைய இறைவனிடம் எங்களுக்காக நீங்கள் கேளுங்கள்" என்றனர்.

அன்றிலிருந்து விண்ணிலிருந்த வந்த மன்னு - ஸல்வா என்ற உணவு நின்று மறுபடியும் பூமியை உழுது, பாசனம் செய்து சாப்பிடும் படியாக மனிதர்களுக்கு ஏற்பட்டது. இவ்வகை உணவை இம்மக்கள் நிராகரிக்காமல் இருந்திருந்தால், இன்று வரையிலும் விண்ணிலிருந்து உணவு இறங்கிக் கொண்டே இருக்கும் என்பதாக நபி(ஸல்) கூறியுள்ளார்கள்.

நபி ஈஸா (அலை) அவர்களுடைய மக்களுக்கும் ஈஸா (அலை) அவர்கள் 'அல் மாயிதா' என்கிற உணவுத்தட்டை இறக்கிக் கொடுத்தார்கள்.

"மர்யமுடைய மகன் ஈஸா "எங்கள் இறைவனே, வானத்திலிருந்து ஓர் உணவுத்தட்டை எங்களுக்கு நீ இறக்கி வைப்பாயாக!" குர்ஆன் - (5:114)

விண்ணிலிருந்து இறங்கிய உணவுத்தட்டில் ஒரு பெரிய மீன் இருந்தது. அதில் எவ்வித முள்ளும் இல்லை, செதிலும்

இல்லை. கொழுப்பு வடிந்து கொண்டே இருந்தது. அம்மீனின் தலையில் உப்பும், அதன் வாலில் சிர்க்காவும், அம்மீனைச் சுற்றி பலவிதமான கீரைகளும் வைக்கப்பட்டிருந்தன. இன்னும் 5 ரொட்டிகளும் ஒரு ரொட்டியில் ஜைத்தூன் எண்ணெய்யும், ஒன்றில் தேனும், மற்றொன்றில் நெய்யும், இன்னொன்றில் பாலாடைக் கட்டியும், மற்றொன்றில் சுட்ட இறைச்சியும் இருந்தன. இந்த உணவை ஐயாயிரம் பேர்கள் சாப்பிட்டனர்.

நபி ஈஸா(அலை) அவர்களுடைய தோழரான 'ஷிம்ஊன்' என்பவர் நபி ஈஸாவிடம் இது இம்மையிலுள்ள உணவா...? மறுமையிலுள்ள உணவா...? என வினவினார். அதற்கு ஈஸா (அலை) இம்மையிலுள்ளதும் இல்லை மறுமையிலுள்ளதும் இல்லை. இதனை இறைவன் அற்புதமாகவே உண்டாக்கினான் என்றார்கள்.

இதில் கவனிக்கப்பட வேண்டிய விஷயம் உணவுத்தட்டிலுள்ள உணவு பூமிக்கும் சுவனத்திற்கும் இடையே தயாரிக்கப்பட்டது என்பதுதான். சிந்திக்க முடிகிறதா...? ஆக விண்ணிலிருந்து உணவு வந்து இப்பூலோக மக்கள் உண்டு களித்தனர் என்பதற்கு இது இரண்டாம் அத்தாட்சியாகும். விஞ்ஞானம் இந்த உணவை மீட்டித் தருமா...?

தரையில் விவசாயம் செய்வது குறித்து ஆய்வு செய்த விஞ்ஞானம் கடலிலிருந்தும் உணவைப் பெறப்படுவதையும் பற்றி சொல்ல வேண்டும் அல்லவா...?

இந்திய கடல் உணவு ஏற்றுமதி கழகத்தில் அறிக்கையின்படி 2009 - 2010 வருடத்தில் மட்டும் பத்தாயிரத்து நாற்பத்து எட்டு கோடி ரூபாய்க்கு கடல் உணவு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. கடல் உணவுக்கான இன்றைய நமது தேவை பத்துகோடியே நாற்பத்து மூன்று லட்சம் மெட்ரிக் டன் என்று தெரிய வருகிறது.

இத்தனை மெட்ரிக் டன் உணவையும் வற்றாமல் கடல்தான் வழங்கிக் கொண்டே இருக்கிறது.

அவன்தான் நீங்கள் மீன்களை பிடித்து (சமைத்துப்) புசிப்பதற்கு கடலை உங்களுக்கு வசதியாக்கித் தந்தான். (குர்ஆன் - 16:14).

விஞ்ஞானிகள் இநத் பூமியை தவிர்த்து நாளைய உணவை விண்ணிலும் தேடியிருக்கிறார்கள். உணவை உற்பத்தி செய்வதையும், அவற்றை பழுதில்லாமல் சேமித்து வருங்கால சந்ததிக்கு கொடுப்பதையும் விஞ்ஞானத்தால் முடியுமா என்று முயன்றிருக்கிறார்கள்.

பாரதி காலத்தில் 30 கோடி உலக மக்கள் இருக்கும்போது உணவைப்பற்றி கவலைப்பட்டனர். இனி வரப்போகும் 2050-ல் 950 கோடியிலிருந்து 1000 கோடி மக்களுக்கு எப்படி உணவை உற்பத்தி செய்வது என்று கவலைப்படுகிறார்கள். ஆனால் குர்ஆனிலோ இறைவன்,

"உயிர் வாழும் பிராணிகளில் எத்தனையோ இருக்கின்றன. அவை தங்கள் உணவை சுமந்து திரிவதில்லை. அவற்றிற்கும் உங்களுக்கும் அல்லாஹ் தான் உணவளிக்கின்றான். இவ்வாறிருக்க அதற்காக நீங்கள் ஏன் அதிகக் கவலைப்பட வேண்டும்...? அவனோ அனைத்தையும் செவியுறுபவனாகவும், நன்கறிந்தவனாகவும் இருக்கின்றான்". - குர்ஆன் (29:60)

மனித வாழ்வுக்கு உணர்ச்சிகளும், உள்ளுணர்வுகளும், நம்பிக்கைகளும், சில சமயங்களில் அற்புதங்களும் தேவையாக இருக்கிறது! விஞ்ஞானம் கடவுள் இல்லையென்று சொல்வதில்லை. அதற்குக் கடவுள் தேவையில்லை அவ்வளவுதான்! வாழ்வில் அற்புதங்கள் நிகழ நம்பிக்கை தேவைப்படுகிறது. இல்லையேல் வாழ்க்கையில் என்ன இருக்கிறது...?

உணவின் ஊற்றுக் கண்ணை விஞ்ஞானம் இங்கே அங்கே என்று தேடுகிறது!

ஆனால் மெஞ்ஞானமோ உணவின் ஊற்றுக் கண்ணை உணர்ச்சியிலும், உள்ளுணர்விலும், நம்பிக்கையிலும் சில சமயங்களில் அற்புதங்களிலும் அதனைப் பார்க்கிறது...!

விஞ்ஞானத்திற்கு தெரியாத உணவின் ஊற்று மெஞ்ஞானத்தின் மீது வழிந்தோடுகிறது...!

owned and Published by M. Gulam Mohamed From 52/1, Mannady Street, Mannady, Chenni - 600 001. Editor : M. Gulam Mohamed, Printed by M. Gulam Mohamed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street Chennai - 600 002.